நமது தாய்மொழி வாசகம்

பரமசிவ ஐயர் (௭.)

நமது தாய்மொழி வாசகம்

ஐந்தாம் புத்தகம்

நமது தாய்மொழி வாசகம்

(திருத்தி அமைத்தது)

ஐந்தாம் புத்தகம்

N. பரமசிவ ஐயர், பி.ஏ., எல்.டி.

பிரசுரகர்த்தர்:

பி. ஜி. பால் அண்டு கம்பெனி

4, பிரான்ஸிஸ் ஜோஸப்புத் தெரு, சென்னை - 1

பதிப்புரிமை]

[விலை அணா 9

திருத்திய பதிப்பு : நவம்பர் 1952
இரண்டாம் பதிப்பு : ஜூன் 1953
மறு பதிப்பு : ஜூலை 1954

Approved by the Text-Book Committee, Madras:
Vide Page 24 of Part I of Part 1-B of Fort St. George Gazette
dated 19—5—1954 and also page 82 of part II.

PRINTED AT THE LIBERTY PRESS, MADRAS.

முன்னுரை

நமது தாய்மொழி வாசகம் என்னும் நூல் வரிசை ஆரம்பப் பாடசாலைகளுக்கென அரசாங்கத்தார் வெளியிட்ட புதிய பாடத்திட்டத்தை அனுசரித்து எழுதப் பட்டுள்ளது.

மாணவர்கள் தங்கள் கருத்துக்களை வாய்மொழி மூலமாகவும் எழுத்து மூலமாகவும் வெளியிடுதலும், பிறர் அவ்வாறு வெளியிடும் கருத்துக்களைத் தாங்கள் புரிந்து கொள்ளுதலும் தாய்மொழிப் பயிற்சியின் முக்கிய நோக்கமாகும். இதனைத் தழுவி, கருத்துணர்தல், சொல்லாடல், வாசிப்பு, எழுத்து என்னும் இவைகள் தக்கபடி அமைத்து எழுதப்பட்டுள்ளன. இவை குறித்து மாணவர்களுக்குப் படிப்படியாய்த் தக்க பயிற்சி அளிக்க வேண்டுவது அவசியம். இடையிடையே பயிற்சிப் பகுதிகளும் இப்புத்தகத்தில் சேர்க்கப்பட்டுள்ளன.

பொருள்களை நேரில் பார்க்கின்றபோது, அப் பொருள்களைப் பற்றிய செய்திகளை மாணவர் நன்குணர்வர். இதுபற்றியே பற்பல பொருட்காட்சிகளைக் காணும் வாய்ப்பை மாணவர்களுக்கு அளிக்கவேண்டும் என்று பலரும் கருதுகின்றனர். எல்லாப் பொருள்களையும் கொண்டுவந்து காட்டுவது என்பது இயலாது. ஆனால், படங்களின் உதவியால் பொருள்களைச் செவ்வையாய் மாணவர்கள் உணரச் செய்யலாம். படப்புத்தகங்களும் படப் பயிற்சிகளும் மாணவர்களின் அறிவை வளர்ப்பதில்

பெருந்துணை புரிய வல்லன. இப்புத்தகத்திலும் தக்க படங்கள் அமைக்கப் பட்டுள்ளமை காணலாம்.

எழுத்துக்களை நேர்மையாக அமைத்தல், வரி கோணமல் எழுதுதல், இடைவெளி விடுதல், நிறுத்தப் புள்ளிகளைச் சரியாக இடுதல் ஆகிய இவைகள் மாணவர்கள் எழுதுவதில் பெறவேண்டிய இன்றியமையாத் திறமைகளாகும். குறிப்பிட்டவற்றைப் பற்றி நேர்மையான வாக்கியங்களை அமைத்தல், தொடர்ச்சியான வருணனையும், படங்களைக்கொண்டு வருணனைகளும் கதைகளும் அமைத்தல், முடிவுறாத கதைகளை இன்பமான வகையில் முடித்தல் ஆகிய இவ்வபோன்றவை குழந்தைகளின் சிருஷ்டித் திறமையைப் பெருக்க, தக்க துணைகளாகும்.

ஆரம்பப் பாடசாலைகளின் முற்பகுதியில் படிக்கும் பிள்ளைகளைப் பற்றிய வரையில், அவர்களுக்குப் பிழையறப் பேசவும் எழுதவும் சில சுலபமான இலக்கண விஷயங்கள் தெரிவது போதும். இவ்வையும் அவர்கள் படிக்கும் பாடங்களிலிருந்தே கற்பிக்கப்படவேண்டும். இதை பற்றியேதான், முக்கியமான இலக்கண விஷயங்கள் பாடங்களின் மூலமாகவே கற்பிப்பதற்குப் பயிற்சியில் வழிகாட்டி யிருப்பதோடு சில அப்பியாசங்களும் சேர்க்கப்பட்டுள்ளன.

இதனை நன்முறையில் அச்சியற்றிய பதிப்பகத்தாருக்கு எனது நன்றி.

10—11—'52 என். பரமசிவன்

பொருளடக்கம்

எண்	பொருள்	பக்கம்
1.	மகாத்மா காந்தி	1
2.	தாவரம்	7
3.	கண்ணப்பன்	12
4.	மனிதருக்கேற்ற உணவு	20
5.	குறிப்புத் திரட்டு	24
6.	தேசிங்கு மன்னன்—I	26
7.	தேசிங்கு மன்னன்—II	30
8	கிராம வாசிகளின் வறுமைக்குக் காரணங்கள்	34
9.	அல்லியின் ஆட்சியில் பஞ்சம்	39
10.	திருவள்ளுவர்	40
11.	கடிதங்கள்	47
12.	நமது ராஜ்ய ஆட்சி	53
13.	சர்க்கரை	60
14.	விஞ்ஞான விநோதங்கள்	66
15.	தீர்த்தயாத்திரையின் நோக்கம்	73
16.	பால கங்காதர திலகர்	75
17.	மதுவிலக்கு ஆரம்பம்	83

18. அஹிம்ஸா வீரர் 90
19. தினசரிப் பத்திரிகைகள் 96
20. செஞ்சிலுவைச் சங்கம் 101
21. பிளாரன்ஸ் நைட்டிங்கேல் 107
22. பாரத ஸமுதாயம் 114

செய்யுள் பாடம்

I. துதி கவிகள் 120
II. விவேக சிந்தாமணி 122
III. சதகச் செய்யுள் 125
IV. நன்னெறி 127
V. நீதி வெண்பா 129
VI. திருக்குறள் 132
VII. மயில் பாட்டு 135

நமது தாய்மொழி வாசகம்

ஐந்தாம் புத்தகம்

1. மகாத்மா காந்தி

ஸ்தானம்	பட்டம்	ஏகமனமாக	சிக்கல்
வகி	குடியேறி	விவகாரம்	நற்போதனை
முன்னோர்	அடிகள்	குறை	அபிவிருத்தி
சமஸ்தானம்	சமாதானம்	கிளர்ச்சி	தீண்டாமை
திவான்	உபசாரம்	நிகழ்த்திய	பிளவு
பதவி	சுற்றுப்பிரயாணம்	இடையூறு	சட்டம்
பிரபலம்	மதிப்பு	அறிவாளர்	மகான்

1. நம் நாட்டு மக்களிற் பலர் தம் நலத்தைக் கருதாது பிறர் நலத்துக்காக அப்போதைக்கப்போது பாடுபட்டு வந்துள்ளனர். அவர்களுள் மகாத்மா காந்தி உயர்ந்த ஸ்தானத்தை வகிப்பவராவர். அவரது முழுப்பெயர் மோகன்தாஸ் கரம் சந்த் காந்தி என்பது.

2. காந்தி, பம்பாய் மாகாணத்தைச் சேர்ந்த போர்பந்தர் என்னுமிடத்தில், 1869-ஆம் வருஷம், அக்டோபர் மாதம், 2-ஆந் தேதி பிறந்தார். அவர் முன்னோர்கள் போர்பந்தர் சமஸ்தானத்தில் திவான் பதவியை வகித்து வந்தார்கள். அவர் அன்னையார் உண்மையும் தெய்வ பக்தியும் நிறைந்தவர். அவருடைய நற்குணங்களே மகாத்மா காந்தியிடமும் சிறந்து விளங்கின.

3. காந்தி அடிகள், இளமையில் தம்மூரில் கல்வி பயின்ற பின்பு, இங்கிலாந்துக்குச் சென்று பாரிஸ்டர் பரீக்ஷைக்குப் படித்துப் பட்டமும் பெற்றார். பிறகு அவர் தம் நாடு திரும்பி வக்கீல் வேலையை நடத்திவரும் காலத்தில், தொழிலின் நிமித்தம் தென்னாப்பிரிக்காவிற்குப் போக நேர்ந்தது. அந்நாட்டில் இந்தியர் பலர் குடியேறியுள்ளனர். அவ்வரசாங்கத்தார் அவர்களைப் பலவாறு துன்புறுத்தி வந்தனர். தம் நாட்டு மக்களின் கஷ்டத்தைக் கண்டு வருந்திய காந்தியடிகள், அதை நீக்கும் பொருட்டு, அவ்விடத்திலேயே தங்கி உழைக்கத் தீர்மானித்தார். இம்முயற்சியில் அவருக்கு நேர்ந்த துன்பங்கள் பலவாகும். அவர் அவற்றையெல்லாம் பொருட்படுத்தாமல் சமாதான வழியில் கிளர்ச்சி செய்து வெற்றியையும் பெற்றார்.

மகாத்மா காந்தி

4. தென்னாப்பிரிக்காவில் தாம் கோரிய வண்ணம் இந்தியரின் நிலையை உயர்த்திய பின்பு காந்தியடிகள் இந்தியாவுக்குத் திரும்ப விரும்பினார்.

நலம் கருதாமல் இருபது வருஷ காலத்திற்குமேல் தங்களுக்காகப் பாடுபட்ட அவர்பால் இந்தியர் நன்றி பாராட்டி அவரை உபசரித்து வழியனுப்பினர். காந்தியடிகள் தம்மூர் திரும்பும் முன்னரே அவருடைய அருமைத் தொண்டுகள் இந்திய மக்களுக்குத் தெரிய லாயின. அவர்கள் அவரை மகிழ்வுடன் வரவேற்றுக் கௌரவித்தார்கள்.

5. இந்தியாவுக்குத் திரும்பிய காந்தியடிகள் ஓய்வைப் பெற இடமில்லாமலிருந்தது. இந்திய மக்கள் தங்களுக்கு அரசாங்கத்தில் எவ்விதமான பொறுப்பு மில்லாத காரணத்தால் வறுமையால் வருந்தியிருந் தார்கள். ஆகையால், காந்தியடிகள் இவ்விடத்திலும் அதே வேலையைச் செய்து தம் நாட்டு மக்களின் நிலையை உயர்த்த ஆவல் கொண்டார். அதற்காக அவர் தேசம் முழுவதும் சுற்றுப்பிரயாணம் செய்து, விஷயங்களை நேரே தெரிந்துகொண்டார்.

6. இச்சமயத்திலேதான் அரசியல் முதலிய விவகாரங்களில் இந்திய சமூகத்தின் தலைவராய் விளங்கிய திலகர் மகான் காலம் சென்றனர். இந்தியர் அனைவரும் காந்தியடிகளே அவருக்குப் பின் தலைவராய் இருக்கவேண்டுமென ஏகமனமாக விரும் பவே, அவரும் அப்பதவியை ஆவலுடன் ஏற்றுக் கொண்டார். அதன் பின்பு அவர் அரசியல் விவகா ரங்கள் மாத்திரமேயல்லாது, பொருளாதாரத்திலும், ஜன சமூகத்திலும் காணப்படும் குறைகளை நீக்கப் பெருமுயற்சிகள் செய்யலானார்.

7. காந்தியடிகள் அரசியல் கிளர்ச்சியில் தென்னாப்பிரிக்காவில் நிகழ்த்தியது போலச் சமாதான வழியையே பின்பற்றி வந்தனர். இவ்வாறு உழைக்கும்போது அவருக்குப் பல இடையூறுகள் சம்பவித்தன ; பலமுறை சிறைச்சாலையிலும் அடைக்கப்பட்டார். உண்மையையும் நியாயத்தையுமே பாராட்டி முயன்று வந்த அவர், அவற்றைப் பொருட்படுத்தாமல் உழைத்த காரணத்தாலே தான், இந்தியர்களாகிய நாம் எல்லோரும் 1947-ஆம் ஆண்டு சுதந்திரம் பெறமுடிந்தது. அவரது புகழ் உலகமெங்கும் பரவியது.

8. காந்தியடிகள் தம் நாட்டுக்குச் செய்துள்ள தொண்டுகளில் கைத்தொழில் அபிவிருத்தி, தீண்டாமையை ஒழித்தல், இந்து முஸ்லீம் ஒற்றுமை, மதுவிலக்கு ஆகியவை முக்கியமாகக் குறிப்பிடத் தக்கவை. ஜனங்களின் வறுமையைப் போக்கக் கைத்தொழில் அவசியமென்பதை உணர்ந்து, அவர் கதிரிலும் இராட்டையிலும் நூல் நூற்றுக் கைத்தறியில் துணி நெய்யும் தொழிலைப் பிரபலமாக்கினார். மக்களுக்குள் உயர்வுதாழ்வென்னும் பிளவு இழிவையே தரும் என்பதைவற்புறுத்தித் தீண்டாமை என்னும் கொடிய வழக்கத்தை ஒழித்தார். அவர் தூண்டுதலின் பேரிலேதான் பல ராஜ்யங்களில் மது விலக்குச் சட்டங்கள் செய்யப்பட்டு, மதுபானம் செய்யும் வழக்கம் குறைந்து வருகிறது.

9. சுதந்திரம் பெற்ற பின்பும் நமது தேசத்தில் இந்து-முஸ்லீம் கலகங்கள் பஞ்சாப், வங்காளம் முத லிய இடங்களில் மும்முரமாயிருந்தன. அப்பொழுது அவர் கலகம் நிகழ்ந்துவந்த நவகாளி முதலிய பிர தேசங்களுக்குக் கால் நடையாகச் சென்று, பகை யுணர்ச்சியைப் போக்க மக்களுக்கு உபதேசம் செய்தார். நாள்தோறும் பிரார்த்தனைக் கூட்டங்கள் நடத்தி மக்களுக்கு அறிவுரை வழங்கி வந்தார். இரவும் பகலும் நமது இந்திய மக்களுக்காகவே அவர் உழைத் தார்.

10. இப்படிப்பட்ட பெரியாரை 1948-ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 30-ஆம் தேதி தேதியில் அவர் பிரார்த் தனைக் கூட்டத்திற்குச் சென்றபோது ஒரு கயவன் சுட்டுக் கொன்றுவிட்டான். தன்மேல் குண்டுபட்ட நிலையிலும் அவர் ராம நாமத்தையே உபசரித்தார். தெய்வத்தினிடம் அவ்வளவு பக்தி கொண்டவர் நமது காந்தியடிகள்.

11. காந்தியடிகள் நமது பாரத மக்களுக்குச் சிறந்த வழிகாட்டியாவார். 'நமக்கு வழியுண்டு நல் லோர் நடந்த வழியே' என்று ஒரு பெரியார் கூறி னார். நாம் எல்லோரும் காந்தியடிகளின் அடிச் சுவட்டைப் பின்பற்றி நம் தாய்த்திரு நாட்டிற்குச் சிறந்த பல பணி செய்ய முற்படுவோமாக.

பயிற்சி—1

விடை சொல்லு:—

1. காந்தியடிகளுக்கு யாரிடமிருந்து நற்குணங்கள் ஏற்பட்டன?

2. அவர் தென்னாப்பிரிக்காவில் தங்கினதற்குக் காரணமென்ன?

3. அங்கும் இந்தியாவிலும் அவருடைய முயற்சிகள் வெற்றி பெறுவதற்குக் காரணமென்ன?

4. காந்தியடிகள் நமது தாய் நாட்டிற்குச் செய்துள்ள சிறந்த தொண்டுகள் யாவை?

5. அவரை மானிட உலகம் புகழ்வதேன்?

ii. பொருள் கூறு:—

பதவி, உபசாரம், நிகழ்த்திய, இடையூறு, சிக்கல், பிளவு.

iii. நம் நாட்டு மக்கள் பிறர் நன்மைக்காக அப்போதைக்கப்போது பாடுபட்டு வந்துள்ளார்கள். அவர்களுள் காந்தி உயர்ந்த ஸ்தானத்தை வகிப்பவராவர்:—இவ்விரண்டு வாக்கியங்களையும் ஒன்றாகச் சேர்த்து எழுது.

iv. அந்நாட்டில் இந்தியர் பலர் குடியேறியுள்ளனர். அவ்வரசாங்கத்தார் அவர்களைப் பலவாறு துன்புறுத்தினார்கள்:—இவற்றை ஒரே வாக்கியமாகச் சேர்த்து எழுது.

v.

	தொடர்	வாக்கியம்
1.	காந்தியடிகள் கல்வி பயின்ற பின்	இந்தியர்கள் காந்தியை மகிழ்வுடன் வரவேற்றனர்.
2.	அவர்கள் கஷ்டத்தை நீக்கும் பொருட்டு	இச்சமயத்தில் திலகர் மகான் காலம் சென்றார்,

3. இந்திய மக்களுக்கு மக்களுக்குள் உயர்வு எவ்விதமான தாழ்வென்னும் பிளவு பொறுப்பு மில்லாத இழிவையே தரும். காரணத்தால்.

இடப்பக்கம் இருக்கும் சொற்றொடர்கள் பொருள் முடியாதவை. இவற்றைத் தொடர் என்கிறோம். வலப் பக்கம் இருப்பவை பொருள் முடிவுற்றவை. இவற்றை வாக்கியம் என்கிறோம்.

vi. கீழுள்ள தொடர்களை ஏற்ற சொற்களைச் சேர்த்து வாக்கியங்களாக்கு :—

1. பாரிஸ்டர் பரீட்சைக்குப் படிக்கக் காந்தியடிகள்
2. இந்தியர்கள் காந்தியடிகள் பால்
3. காந்தியடிகளின் முன்னோர்கள் போர்பந்தர் சமஸ்தானத்தில்
4. காந்தியடிகள் சமாதான வழியில் உழைத்த தாலேதான்
5. ஊர் திரும்பிய காந்தியடிகளை

---

2. தாவரம்

நிலையுற்ற	எண்ணற்ற	கொப்பரை	பொந்து	கிரகி
தாவரம்	தடுக்கு	ஜந்து	வசதி	சாறு
வித்து	முடைந்து	வர்க்கம்	பூசாரம்	மருந்து
சேகரித்து	கணக்கற்ற	மற்றவை	போக்கு	பிழிந்து

1. மரம், செடி, கொடி முதலிய நிலையுற்ற பொருள்களுக்குத் தாவரம் என்பது பெயர். நம் நாட்

டில் பலவகையான மரங்களும், பலவிதமான செடிகளும், பல மாதிரிக் கொடிகளும் காணப்படுகின்றன. மரம், செடி, கொடிகள் வித்திலிருந்து முளையாக வெளிப்பட்டு, பிறகு இலை, தண்டு முதலிய வேற்றுமையுடன், ஓங்கி வளர்கின்றன.

2. மரத்தில், தென்னை, பனை, ஈந்து, மா, பலா, வாழை, இச்சிலி, ஆல், அரசு முதலிய கணக்கில்லாதவைகள் இருக்கின்றன. அவற்றால் நமக்கு எண்ணற்ற நன்மைகள் உண்டாகின்றன. தென்னை மரத்தின் ஓலையைத் தடுக்குகளாக முடைந்து, கிராமாந்தரங்களில் உள்ளவர்கள் தங்கள் வீடுகளுக்குக் கூரை வேய்கிறார்கள்; தேங்காய் மட்டையிலிருந்து நார் எடுத்துக் கயிறாகத் திரித்துப் பல வித வேலைகட்கு உபயோகிக்கிறார்கள்; தேங்காயைப் பல விதத் தின்பண்டங்களிலும், சமையல் பதார்த்தங்

களிலும் சேர்க்கிறார்கள். நன்றாக முற்றிய தேங்காய் கொப்பரையாகிறது. அதைச் செக்கிலிட்டு ஆட்டி, அதிலிருந்து தேங்காய் நெய் எடுக்கிறார்கள். தேங்காய் நெய் பலவிதத்தில் நமக்கு உபயோகமாகிறது. மா, பலா, வாழை, கிச்சிலி முதலிய மற்றமரங்களும் நமக்கு இனிய காய் கனி முதலிய பல பொருள்களைக் கொடுத்து உதவுகின்றன.

3. செடிகளும், கொடிகளும் மரங்களைப்போல நமக்குப் பல வகைகளில் உதவி புரிகின்றன. சில செடிகளும் கொடிகளும் நமக்கு இனிய காய் கனி முதலியவற்றைத் தருகின்றன. மற்றவை நமது கண்ணுக்கு இன்பத்தையும், மனத்திற்குச் சந்தோஷத்தையும், மூக்குக்கு இனிய மணத்தையும் அளிக்கும் விதம்விதமான பூக்களை நமக்குக் கொடுக்கின்றன.

4. இவை மட்டுமா இவற்றால் உண்டாகும் நன்மைகள்! எத்தனையோ ஜந்துக்கள் மரம் செடி கொடிகளின் இலைகளைத் தின்று ஜீவிக்கின்றன. எண்ணற்ற பறவைகள் மரங்களில் கூடு கட்டி வசிக்கின்றன. அவைகள் மரங்களிலுள்ள கனிவர்க்கங்களைப் புசிக்கின்றன. கீரிப்பிள்ளை, மரநாய் முதலிய ஜந்துக்களுக்கும் மரப் பொந்துகள் வசதியான வீடுகளாய் அமைந்திருக்கின்றன.

5. மரம், செடி, கொடிகள் அசுத்தக் காற்றைச் சுத்தப்படுத்தி, நமக்குப் பெரு நன்மையை உண்டாக்குகின்றன. பூமியிலுள்ள அசுத்தப் பொருள்களெல்லாம் அவற்றிற்குச் சிறந்த எருவாகின்றன. மரம், செடி, கொடிகள் தம்முடைய வேர்

களின் மூலமாகப் பூசாரத்தையும் தண்ணீரையும் கிரகித்துக்கொள்ளுகின்றன. காட்டில் உள்ள மரம், செடி, கொடிகளுக்கு நாம் எருவிடுவதும் இல்லை; தண்ணீரைப் பாய்ச்சுவதும் இல்லை. அவை தாமாகவே அவற்றைப் பூமியிலிருந்து சேகரித்துக் கொள்ளுகின்றன.

6. நாம் மரங்களை வெட்டிப் பலகைகளாகவும். துண்டுகளாகவும் அறுத்து, நமக்கு வேண்டிய நாற்காலி, மேஜை, தூண், வீட்டுக் கதவு முதலியவை செய்துகொள்ளுகிறோம். மரங்களால் பலவகை வண்டிகளும், கப்பல் முதலியவைகளும் செய்து கொள்ளுகிறோம். பல செடி கொடிகளின் இலைகளின் சாற்றைப் பிழிந்து, வைத்தியர்கள் சிறந்த மருந்துகளைச் செய்து. அவற்றால் கணக்கற்ற நோயாளிகளின் நோய்களைப் போக்கி, உலகத்திற்கு நன்மை செய்கிறார்கள்.

7. தாவரங்கள் காய் கனி முதலியவைகளைக் கொடுப்பதுமன்றித் தம்முடைய தேகத்தையும் நமக்குக் கொடுத்து உதவி புரிகின்றன. மரங்களைக் கடவுள் நம்முடைய பெரு நன்மையைக் குறித்தே ஏற்படுத்தியிருக்கின்றார் அல்லவா? ஆகையால் நாம் அவருக்கு நன்றி செலுத்துவதோடு அவரால் படைக்கப்பட்ட தாவர வர்க்கங்களைப் பரவ விடவேண்டும். நம் நாட்டிலுள்ள காடுகள் மிருகங்களுக்கும், பறவைகளுக்கும், நமக்கும் பல வகையிலும் நன்மைகளையே உண்டுபண்ணுவதால், நாம் அக்காடுகள் அழியாதபடி பார்த்து வரவேண்டும். இப்பொழுது நம் நாட்டில் ஆண்டுதோறும் 'வனமகோத்சவம், கொண்

டாடி அங்கங்கே மரங்கள்நட்டு வளர்ப்பது நீங்கள் அறிந்ததே. 'பாலைவனைச் சோலைவனமாக வேண்டும்' என்று கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளை வேண்டுகிறார். நமது நாடெங்கும் இன்னறுங் கனிச் சோலைகளை ஆக்கி வளம் பெருக்குவது நமது கடமையல்லவா?

பயிற்சி—2

i. விடை சொல்லு :—

1. தாவரங்கள் மனிதருக்கு எவ்வாறு பயன்படுகின்றன ?
2. அவை மற்ற உயிர்ப்பிராணிகளுக்கும் எவ்விதம் உபயோகமாகின்றன ?
3. மரங்களின் உபகாரத்தைக் காணும் நாம் என்ன உணரவேண்டும் ?
4. ஒரு நாட்டினர் காடுகளை ஏன் அழியாதபடி பார்த்துக் கொள்ளவேண்டும் ?

ii. கோடிட்ட இடங்களில் ஏற்ற சொற்களை அமைத்து வாசி :—

1. பூக்கள் நமக்கு ——— கொடுக்கின்றன.
2. பறவைகள் மரங்களில் ——— வசிக்கின்றன.
3. தாவரங்கள் வேர்களின் மூலமாக ஆகாரத்தை—.
4. நாம் காடுகள் ——பார்த்து வரவேண்டும்.

iii. தாவரங்கள் காய் கனி முதலியவைகளைக் கொடுப்பதுமன்றித் தம் தேகத்தையும் நமக்குக் கொடுத்து உதவி புரிகின்றன :—இதை இரண்டு தனி வாக்கியங்களாக எழுது.

iv. வைத்தியர்கள் இலைகளின் சாற்றைப் பிழிந்து சிறந்த மருந்துகளைச் செய்கிறார்கள்; அவற்றால் நோயாளியின் நோய்களைப் போக்குகிறார்கள்.

இவ்விரண்டு வாக்கியங்களையும் ஒரே வாக்கிய மாகச்சேர்.

1. தேங்காய் செய் பல விதத்தில் நமக்கு உப யோகமாகிறது.

2. கடவுள் நம் நன்மையைக் குறித்தே மரங்களை ஏற்படுத்தியிருக்கின்றாரல்லவா ?

3. கடவுளின் கருணை தான் என்னே !

இவை மூன்றும் வாக்கியங்கள். முதல் வாக்கியம் ஒரு விஷயத்தைத் தெரிவிக்கின்றது. அதன் இறுதியில் முற்றுப் புள்ளி இடுகிறோம். இரண்டாவது, கேள்வி கேட்கிறது. அதன் இறுதியில் வினாக்குறி இடுகிறோம். மூன்றாவது, ஆச்சரியத்தைக்காட்டுகிறது. அதன் இறுதி யில் வியப்புக்குறி இடுகிறோம். வாக்கியங்களின் இறுதி யில் இம்மூன்று குறிகளுள் (. ? !) ஒன்றை ஏற்றபடி இட வேண்டும்.

---

3. கண்ணப்பன்

துதி	துரத்து	இறைச்சி	எலும்பு
மகவு	தலைப்பட்டது	வழக்கு	சிதறி
புனு	லிங்கம்	மலர்	ஈடு
உரிய	தழுவி	செருகு	திருவாய்
சகுனம்	முத்தம்	நிரம்ப	தோண்டி
புதர்	இடைவிடாமல்	முகந்து	அப்பு
பதுங்கி	மாமிசம்	உள்ளம்	விந்தை
கூச்சல்	இறைவர்	பிராமணர்	அடையாளம்

1. பல ஆண்டுகளுக்கு முன் உடுப்பூர் என்னு மிடத்தில் நாகன் என்ற வேடர் தலைவனொருவன்

தன் மனைவியாகிய தத்தை என்பவளோடு வாழ்ந்து வந்தான். அவர்களுக்கு வெகுகாலமாக மக்கட் பேறு இல்லாமலிருந்தது. ஆகவே, அவர்கள் முருகக் கடவுளைத் துதித்து வந்தார்கள். முருகக் கடவுளின்

திருவருளால் அவர்களுக்கு ஓர் ஆண் மகவு பிறந்தது. அக்குழந்தை மிகவும் பளுவானதாயிருந்ததால் நாகன் அதற்குத் திண்ணன் என்று பெயரிட்டான்.

2. நாகன் தன் மகன் திண்ணனுக்கு வேடருக்குரிய வில் வித்தையை ஓர் ஆசிரியரால் நன்றாகப்

பயிற்றுவித்தான். "வில் வித்தையில் அவனுக்கு நிகர் யாருமில்லை," என்று கண்டோர் சொல்லும்படி திண்ணன் தேர்ந்து விளங்கினன். இவ்வாறு இருக்கையில், நாகன் முதுமைப் பருவமடையவே, தன் மகனைத் தலைவனாக்க எண்ணினன். அதற்காக அவன் திண்ணனுக்கு **கன்னி வேட்டை** ஆடி வரும்படி கட்டளையிட்டான்.

3. முதல் முதல் ஆடும் வேட்டைக்கு **கன்னி வேட்டை** என்பது பெயர். திண்ணன், கையில் வில்லும் அம்பும் கொண்டு, சில வேடர்களுடன் கன்னி வேட்டையாடக் காட்டிற் புகுந்தனன். வேடர்கள் புதர்களில் பதுங்கியுள்ள மிருகங்களைக் கூச்சலிட்டுத் துரத்தினார்கள். திண்ணன் அவற்றை மிகுந்த திறமையுடன் வேட்டையாடினன்.

4. சில வேடர் ஒருபுறஞ்சென்று, வலை கட்டி, மிருகங்களை அவ்வலைப்பக்கம் துரத்தினர். அவ்வலையில் ஒரு காட்டுப் பன்றி அகப்பட்டது. உடனே திண்ணன் அதனிடம் ஓடினன். திண்ணன் வலையை நோக்கி ஓடிவருவதைக் கண்ட காட்டுப்பன்றி, அந்த வலையை அறுத்துக்கொண்டு ஓடத் தலைப்பட்டது. திண்ணனும் அதைப் பின்பற்றி விரைந்தோடினன். அப்பன்றி [illegible] மலையண்டை ஓடி, திண்ணன் விட்ட அம்பு பட்டு இறந்தது. பிறகு திண்ணன் தன் நண்பன் ஒருவனுடன் மலையின்மேல் ஏறினன். அவ்விடத்தில் ஒரு சிவலிங்கம் அவன் கண்ணுக்குத் தோன்றியது

5. சிவலிங்கத்தைக் கண்டதும், திண்ணனுக்கு அதனிடம் மிகுந்த அன்பு உண்டாயிற்று. உடனே

அவன் அச்சிவலிங்கத்தைத் தழுவி முத்தமிட்டான். பிறகு அவன் அந்த லிங்கத்தை நோக்கி, "சுவாமி, யானையும், புலியும், கரடியும், சிங்கமும், பன்றியும் இடைவிடாமல் திரிந்துகொண்டிருக்கும் இக்காட்டில், தேவரீர் துணையில்லாமல் இருப்பது சரியோ? ஐயோ! இங்கு உமக்கு யார் உணவு கொடுப்பார்? சுவாமி, என்னுடன் உடுப்பூருக்கு வாரும். நான் உண்ணத் தேனும், தினைமாவும் இனிய பழங்களும் மான், முயல், பன்றி, உடும்பு ஆகிய இவற்றின் இனிய மாமிசமும் கொடுப்பேன். என் வேலைக்காரர்களாகிய வேடர்களும் உமக்குக் காவல் செய்வார்கள்," என்று கூறினான்.

6. திண்ணன் கூறியதற்குச் சிவலிங்கம் பதில் உரைக்கவில்லை. ஆகையினால், திண்ணன், 'சுவாமிக்கு இவ்விடத்திலிருக்கப் பிரியம் போல இருக்கிறது! அப்படியானால், நானும் இங்கேயே இருந்து இவருக்குத் தொண்டு செய்வேன். இப்பொழுது சூரியன் உச்சிக்கு வந்துவிட்டான். சுவாமிக்குப் பசி அதிகமாய் இருக்கும். ஆகையால் நான் சென்று இறைவருக்கு இறைச்சி கொண்டு வருவேன்," எனச் சொல்லிச் சென்றான்.

7. திண்ணன் தான் கொன்ற பன்றியை அறுத்து, அதன் இறைச்சியை நெருப்பிலிட்டு வதக்கினான்; பல்லால் கடித்துச் சுவை பார்த்து நல்ல இறைச்சியை ஓர் இலையில் வைத்துக்கொண்டான்; பிறகு, சுவாமிக்கு இடுவதற்குச் சில மலர்களையும் இலைகளையும் பறித்துத் தன் தலையில் செருகிக்கொண்டான்; அம்மலையின் பக்கத்தில்

பாயும் ஆற்றில் தன் வாய் நிரம்பத் தண்ணீர் மூகந்துகொண்டு சுவாமியிடம் வந்தான்; சிவலிங்கத்தின் முடியில் இருந்த பூவைத் தன் காலால் தள்ளினான்; வாயில் இருந்த தண்ணீரை அம்முடியில் ஊற்றித் தன் தலையில் இருந்த மலரையும் இலையையும் எடுத்துப் போட்டான்; இலையில் கொண்டு வந்த இறைச்சியை மிக்க உள்ளன்போடு அச் சிவலிங்கத்துக்கு ஊட்டினான். சிவபெருமான் அதை அன்போடு சாப்பிட்டார்! ஆ! அன்பின் பெருமையே பெருமை!

8. பிறகு திண்ணன் இரவு முழுவதும் சுவாமிக்குக் கண் விழித்துக் காவல் செய்வதும், பகலில் உணவு தேடி வருவதுமாய் இருந்தான்.

9. அந்தச் சிவலிங்கத்திற்குத் தினந்தோறும் பூஜைசெய்துவந்த சிவகோசரியார் என்னும் பிராமணர், திண்ணன் உணவுதேடச் சென்றிருந்தபோது அங்கு வந்தார். அங்கு மாமிசமும் எலும்பும் சிதறிக் கிடப்பதைக் கண்டு, அவர் மிகவும் வருந்தினார்; பின்பு கோவிலைச் சுத்தம் செய்து, பூஜை முடித்து, மன வருத்தத்தோடு வீடு திரும்பினார்.

10. அன்று இரவு சிவபெருமான் சிவகோசரியார் கனவில் தோன்றி, "அன்பனே, நீ மனம் வருந்தாதே! நீ அசுத்தப் பொருளாக எண்ணும் இறைச்சியை எமக்கு ஊட்டியவன் வேடனாயிருந்தாலும், பக்தியில் சிறந்தவன். அன்பில் அவனுக்கு ஈடானவர் எவருமில்லை. நீ நாளைக்கு வந்து ஒருபுறம் ஒளிந்திருப்பாயானால், அவனுடைய அன்பை அறியலாம்," என்று திருவாய் மலர்ந்து மறைந்தார்.

11. சிவபெருமான் கட்டளைப்படியே மறுநாள் சிவகோசரியார் கோவிலின் பக்கத்தில் மறைந்திருந்தார். அப்போது திண்ணன் உணவு தேடி விரைந்து வந்து சுவாமிக்கு ஊட்டத் தொடங்கினான். சுவாமி வழக்கம்போல அதை உண்டாலும், தம் கண் ஒன்றில் இரத்தம் ஒழுகச் செய்தார். திண்ணன் அதைக் கண்டு பயந்து, தான் அறிந்த மருந்து இலைகளைக் கசக்கிப் பிழிந்து, கண் வைத்தியம் செய்தான். ஒன்றாலும் இரத்தம் நிற்கவில்லை. பிறகு அவன் வருந்தித் தன் கண்களுள் ஒன்றை அம்பினால் தோண்டி அப்பினான். உடனே அந்தக் கண்ணில் இரத்தம் நின்று, மற்றொரு கண்ணில், இரத்தம் ஒழுகத் தொடங்கியது.

12. திண்ணன் அதைக் கண்டு பயப்படாமல் "என் மற்றொரு கண்ணையும் பிடுங்கி அப்புவேன்," என்று கூறி மகிழ்ந்தான்; பிறகு சிவலிங்கத்தின் மற்றொரு கண் இடத்தைக் கண்டு பிடிப்பதற்கு அடையாளமாகத் தன் காலை அவ்விடத்தில் வைத்துக்கொண்டு, அம்பால் தன் மற்றொரு கண்ணைத் தோண்ட முயன்றான்.

13. உடனே சிவலிங்கத்திலிருந்து ஒரு கை வெளி வந்து, திண்ணன் கையைப் பிடித்துத் தடுத்தது. லிங்கவடிவாயிருந்த சிவபெருமான் திண்ணனைப் பார்த்து, "அப்பனே, எமக்குக் கண்ணைக் கொடுத்ததால், நீ கண்ணப்பன் ஆனாய். உன்னுடைய அன்பை அறிந்தோம்! நீ என்றும் எம் பக்கத்திலிருப்பாயாக!" என்று திருவாய் மலர்ந்து, கண்ணப்

பனைத் தம் பக்கத்தில் நிறுத்திக்கொண்டார். தேவர்கள் பூமழை பெய்தார்கள்.

14. இவ்விந்தையைப் பார்த்துக்கொண்டிருந்த சிவகோசரியார், கண்ணப்பன் அன்பைப் புகழ்ந்து கொண்டே வீட்டுக்குச் சென்றார்.

'அன்பே கடவுளை அடையும் வழியாம்'

பயிற்சி—3

i. விடை சொல்லு :—

1. கன்னி வேட்டை என்பது யாது?
2. நாகன் தன் மகனுக்குத் திண்ணன் என்று ஏன் பெயரிட்டான்?
3. திண்ணன் லிங்கத்தின்மீது இரக்கங்கொண்டு என்ன செய்தான்?
4. சிவகோசரியார் அவன் பூஜையை எப்படி எண்ணினார்?
5. சிவபெருமான் அவருக்குத் திண்ணனது பக்தியைக் காட்ட என்ன செய்தார்?
6. திண்ணனுக்குக் கண்ணப்பன் என்னும் பெயர் ஏன் வந்தது?

ii. இவ்வார்த்தைகளை உபயோகித்துச் சொந்த வாக்கியங்கள் அமை :—

இடைவிடாமல், கனவு, தலைப்பட்டது, ஈடு, பிரியம்.

iii. அக்குழந்தை மிகவும் பளுவானதாயிருந்ததால், நாகன் அதற்குத் திண்ணன் எனப் பெயரிட்டான்.

இதை இரண்டு தனி வாக்கியங்களாகப் பிரித்து எழுது.

iv. நாகன் தன் மகனைத் தலைவனாக்க எண்ணினான். அதற்காக அவன் திண்ணனைக் கன்னி வேட்டையாடி வரும்படி கட்டளையிட்டான்.

இவற்றை ஒரே வாக்கியமாகச் சேர்த்து எழுது.

v. இப்பாடத்தில் வந்துள்ள கேள்வி கேட்கும் வாக்கியங்களையும், வியப்பைச் காட்டும் வாக்கியங்களையும் எடுத்துச் சொல்லு.

vi. திண்ணன் சிங்கத்தைக் கண்டான்—இதன் எழுவாய் பயனிலை செயப்படுபொருள்களைச் சொல்லு.

எழுவாய் என்ன சொல்?
பயனிலை என்ன சொல்?

vii. இவ்வாக்கியங்களைப் படி:—

1. உன்னுடைய அன்பை அறிந்தோம்!

2. காடு சென்று வேட்டையாடி வருவாயாக!

இவற்றின் எழுவாய்கள் எவை?

1-ல் நாம் என்ற எழுவாயும், 2-ல் நீ என்ற எழுவாயும் மறைந்துள்ளன. இவை தோன்றா எழுவாய் எனப்படும்.

4. மனிதருக்கேற்ற உணவு

செம்மை	வலிமை	மென்று	சந்தேகம்
சித்திரம்	சாகபக்ஷிணி	விழுங்க	உட்கொள்
இலகு	மரக்கறி	அலகு	விரோதம்
ஜீரணம்	தட்டையாக	பொறுக்க	போஜனம்
உறுப்பு	கோரைப்பற்கள்	இரைப்பை	மருத்துவம்
வல்லவர்	பொறுமை	தயை	திடம்

நாம் ஒவ்வொருவரும் எந்த விதமான நோய்க்கும் ஆளாகாமல் சுகமாக வாழ விரும்புகிறோம் அல்லவா? ஆகையால், நாம் சுகமாக வாழ்வதற்குரிய வழியை அறிந்துகொண்டு, அந்த வழியைப் பின்பற்றி நடப்பது நம்முடைய முதல் கடமையாகும். நாம் திட தேகமும், திட மனமும் உடையவர்களாய் இருந்தால் தான், இந்த உலகத்தில் நாம் செய்து முடிக்க விரும்பும் காரியங்களைச் செம்மையாகச் செய்து முடித்து, பெரும்புகழ் அடையலாம். சுவரை அமைத்துக் கொண்டு அல்லவா சித்திரம் எழுத வேண்டும்?

2. நாம் சுகமாய் இருப்பதற்குச் சுத்தமான ஆகாரமும், சுத்தமான நீரும், சுத்தமான காற்றும் வெகு முக்கியமானவை. இவற்றுள் நாம் இப்போது முதலில் ஆகாரத்தைப்பற்றி ஆராய்வோம். சுத்தமான ஆகாரம் எது? நம்முடைய தேக அமைப்புக்கு ஏற்றதும், இலகுவில் ஜீரணமாகக் கூடியதும், தேக உறுப்புக்களுக்கு வலிமையைத் தரக்கூடியதுமான ஆகாரம் எதுவோ, அதுவே சுத்தமான ஆகாரம் என்று சொல்லப்படும்.

3. இந்த உலகத்தில் உள்ள மிருகங்களையும் பறவைகளையும் சாக பக்ஷிணிகளென்றும், மாமிச பக்ஷிணிகளென்றும் இரண்டு வகையாகப் பிரிக்கலாம். சாக பக்ஷிணிகளென்பவை மரக்கறியால் உயிர் வாழ்பவை; மாமிச பக்ஷிணிகள் என்பவை இறைச்சியை உண்டு உயிர் வாழ்பவை. மிருகங்களில் சாக பக்ஷிணிகளாகிய ஆடு, மாடு, குதிரை முதலியவற்றின் பற்களைப் பாருங்கள். அவை மனிதர்களுடைய பற்களைப் போலத் தட்டையாய் அமைந்திருக்கின்றன. மாமிச பக்ஷிணிகளாகிய சிங்கம், புலி, ஓநாய் நரி முதலியவற்றுக்கோ, பற்கள் கூர்மையாய் இருக்கின்றன; அவற்றிற்குக் கோரைப் பற்களும் உண்டு. சாக பக்ஷிணிகள் இலை, காய் முதலியவற்றை நன்றாக மென்று தின்கின்றன; மாமிச பக்ஷிணிகள் மாமிசத்தைக் கிழித்துக் கடித்துத் துண்டு துண்டாக விழுங்கி விடுகின்றன.

4. பறவைகளில் சாக பக்ஷிணிகளுக்கு அலகு நேராகவும், மாமிச பக்ஷிணிகளுக்கு அலகு வளைந்து கூர்மையாகவும் இருப்பதைக் காணலாம். கழுகு, பருந்து, ராஜாளி முதலியவை தம்முடைய வளைந்த அலகுகளால் இறந்த மிருகங்கள், பறவைகள் முதலியவைகளினுடைய தேகத்தைக் கிழித்து அவற்றின் மாமிசத்தைக் கொத்தித் தின்னும். காகம், சிட்டு, குயில் முதலிய பறவைகள், தானிய வகைகளைத் தம் அலகால் பொறுக்கித் தின்கின்றன.

5. மனிதர்களுடைய பற்களும், இரைப்பை முதலிய மற்றுஞ் சில உறுப்புக்களும் சாக பக்ஷிணிகளாகிய மிருகங்களுக்கு அமைந்திருப்பனபோலவே

இருக்கின்றன. ஆகையால், மனிதரும் சாக பக்ஷிணி களே என்பதில் சந்தேகமே இல்லை. ஆகையால், மனிதர்களாகிய நாம் மாமிச ஆகாரத்தை உட் கொள்வது இயற்கைக்கு விரோதமேயாகும். மரக்கறி ஆகாரமே மனிதருக்கு ஏற்ற உணவாகும்.

6. சிலர், 'மாமிச போஜனத்தில் தேகத்தை வளர்ப்பதற்குரிய சத்து அதிகமாயிருக்கிறது; ஆகை யால், 'அதுவே மனிதருக்குச் சிறந்த உணவாகும்' என்று சொல்லுவர். அவர்கள் இளமையிலிருந்தே மாமிசமுண்டு வரும் வழக்கமும், மரக்கறியின் பெரு மையை அறியாத குறையுமேயாகும். மருத்துவத் தொழிலில் வல்லவர்களான அயல் நாட்டு வைத்தியர் களில் பலர், மரக்கறி ஆகாரமே மனித இயற்கைக்கு ஏற்றதென்றும், மாமிசத்தைக் காட்டிலும் மேலான சத்து, காய், கனி, கிழங்கு வகைகளிலும், தானிய வகைகளிலும் பொருந்தி இருக்கிறதென்றும் கூறு கின்றனர். மரக்கறி ஆகாரம் மனத்திற்குப் பொறுமை, தயை முதலிய சிறந்த குணங்களை உண்டுபண்ணி, அறிவை வளர்க்கிறதென்றும், பெரி யார் பலர் அபிப்பிராயப்படுகின்றனர்.

7. ஆகையினால், நாம் பெரியோர்களால் சிறந்த உணவாகக் கருதப்படும் காய், கனி, கிழங்கு, தானிய வகைகளையே ஆகாரமாகக் கொண்டு, திட தேகமும் திடமனமும் பெற்று, நாட்டுக்குச் செய்ய வேண்டிய நல்ல தொண்டுகளைச் செய்து புகழுடை வோமாக.

பயிற்சி—4

i. விடை சொல்லு:—

1. நாம் சுகமாய் இருப்பதற்கு வேண்டுபவை எவை?
2. சாக பக்ஷிணிகள், மாமிச பக்ஷிணிகள் இவற்றின் பற்கள் எவ்வாறு அமைந்து உள்ளன? ஏன்?
3. மனிதருக்கு ஏற்ற ஆகாரம் எதுவெனக் கருதப் படுகிறது?
4. மரக்கறி ஆகாரத்தால் உண்டாகும் நன்மைகள் எவை?

ii. 'சுவரை அமைத்துக்கொண்டு அல்லவா சித்திரம் எழுதவேண்டும்?'—இதன் கருத்தை விளக்கு.

iii. கோடிட்ட இடங்களில் ஏற்ற பதங்களை அமைத்து வாசி:—

1. யாருக்கும் சொல்வது—செய்வது கடினம்.
2. கோபம் குடியைக் கெடுக்கும்; ——— அரசாளும்.
3. உலகிலுள்ள மக்கள் தமக்குள் விரோதமில்லாமல் ——— வாழவேண்டும்.
4. யுத்தம் முடிந்து ——— ஏற்பட்டது.

iv. நாம் ஒவ்வொருவரும் சுகமாக வாழ விரும்புகிறோம். இதை 'நாம் ஒவ்வொருவரும் சுகமாக வாழ விரும்புகிறோம் அல்லவா?' எனக் கேள்வியாக மாற்றலாம். கீழுள்ள வாக்கியங்களையும் இப்படியே மாற்று:—

1. சுவரை அமைத்துக்கொண்டு சித்திரம் எழுத வேண்டும்.

2. மனிதரும் சாகபக்ஷிணிகளே என்பதில் சந்தேகமே இல்லை.

3. மாக்கறி ஆகாரமே மனிதருக்கேற்ற உணவு வாகும்.

V. கீழுள்ள பெயர்ச்சொற்களின் வகையைக் கூறு:—

தேகம்	வலிமை	வலை	மருத்துவம்
காரியம்	அழகு	பகல்	தலை
ஆகாரம்	கூர்மை	காவல்	வேட்டை

---

5. குறிப்புத் திரட்டு

குறிப்பு:—

கீழுள்ளவை ஒரு சஞ்சிகையிலிருந்து எடுக்கப்பட்டவை இவற்றை மௌனமாகப் படித்து, அடியில் கொடுத்திருக்கும் கேள்விகளுக்கு விடைகூறு:—

1. பழரசம்

பழங்களின் ரசங்கள் பல வகையான நோய்க் கிருமிகளை அழிக்கும் ஆற்றலுடையனவாய் இருக்கின்றன. நம்முடைய முன்னோர் மாதந்தோறும் விரதமிருந்து அக்காலங்களில் பழங்களை உண்டனர் என்பதை நாம் அறிவோம். அவர்கள் அங்ஙனம் செய்ததால், நோய்க்கிருமிகளைத் தங்கள் உடலினின்றும் போக்கி உடல் நலம் பெற்றார்கள்.

2. உணவுக்கிடையில் நீர் அருந்தல்

சாப்பிடும் காலத்தில் சிலர் பிடிக்குப் பிடி தண்ணீர் அருந்துகின்றனர். அங்ஙனம் செய்தல் அவர்

-களுடைய ஜீரண சக்தியின் குறைவைக் காட்டு கிறது. ஜீரணம் செய்வதற்கு உதவுகின்ற எச்சில் நீர் அவர்களிடம் குறைவாய் இருத்தலின், உணவை உட்கொள்ளுகையில் நீரின் உதவியை அதிகமாக வேண்டுகிறார்கள். உழைத்து வேலை செய்யும் கூலியாட்கள் உண்ணும்போது, இடையில் பெரும்பாலும் நீர் உட்கொள்வதே இல்லை; உண்ட பின்பே ஒரே தரத்தில் வேண்டிய நீரை உட்கொள்ளுகின்றார்கள். அவர்களுக்கு நல்ல ஜீரண சக்தி இருக்கிறது. சாப்பிடுவதற்கிடையில் தண்ணீர் குடிப்பதால் வயிற்றிலுள்ள விஷக் கிருமிகள் இங்குமங்கும் ஓடி அநேக விதமான வியாதிகளை உண்டாக்குமென்றும், அஜீரணம் ஏற்படுமென்றும் வைத்திய நிபுணர்கள் கூறுகின்றார்கள்.

பயிற்சி—5

1. பழங்களின் ரசங்களுக்கு என்ன குணமுண்டு?
2. நம் முன்னோர்கள் அதை அறிந்திருக்கிறார்களென்பது நமக்கு எப்படித் தெரிகிறது?
3. அவர்கள் அவ்வறிவை உபயோகித்து நடந்தால் என்ன பயனைப் பெற்றிருந்தார்கள்?
4. சாப்பிடும்போது இடையில் தண்ணீர் பருகுவது எதைக் காட்டும்?
5. அவ்வாறு பருகுவதால் விளையும் தீமைகள் எவை?
6. உழைப்பாளிகள் எப்பொழுது நீர் குடிப்பார்கள்?

6. தேசிங்கு மன்னன்—I

பாட்சா கருப்பவதி உத்தரவு பகுதி சுதந்திரம்
சமானம் புத்திரன் வீரம் நவாபு மாருக
கப்பம் பள்ளி திருமணம் பொருமை ஜயித்து

1. சில வருஷங்களுக்கு முன் டில்லியில் ஆலம் என்னும் பாட்சா ஒருவன் ஆண்டுவந்தான். அக்காலத்தில் தென்னிந்தியாவில் பல சிறு இராச்சியங்களைத் தனித்தனியாகப் பலபேர்கள் ஆண்டு வந்தார்கள். அவர்கள் எல்லாரும் டில்லி பாட்சாவுக்குக் கீழ்ப்பட்டு, அவனுக்குக் கப்பங் கட்டி வந்தார்கள்.

2. டில்லி பாட்சாவுக்கு மிகவும் விலையுயர்ந்ததும், வேகமாக ஓடுவதில் சமானமற்றதுமான குதிரை ஒன்று கிடைத்தது. அவன், அதன் மீது ஏறி, அதைச் சவாரி செய்ய முயன்றான். ஆனால் அப்படிச் செய்ய அவனால் இயலவில்லை. ஆகையால், அவன் தனக்குக் கப்பங்கட்டி வரும் சிற்றரசர்கள் எல்லாரையும்

தேசிங்கு மன்னன்

அழைத்து, அந்தக் குதிரையின் மீது ஏறிச்சவாரி

செய்பவருக்குப் பெரும் பரிசு கொடுப்பதாகக் கூறி ஞன். சிற்றரசர் பலர் அந்தக் குதிரையின் மீது ஏற முயன்று முடியாமல், பாட்சாவால் சிறை செய்யப்பட்டனர். அப்படிச் சிறைப் பட்டவர்களில் செஞ்சிக் கோட்டையை ஆண்டுவந்த தரணி சிங்கு என்பவனும், அவன் தம்பியாகிய சொரூபி சிங்கு என்பவனும் இந்தச் சரித்திரத்திற்கு முக்கியமானவர்கள்.

2. தரணிசிங்கும் அவன் தம்பியும் டில்லிக்குப் போன போது, தரணி சிங்கின் மனைவி கருப்பவதியாயிருந்தாள். பிறகு அவள் ஒரு புத்திரனைப் பெற்ருள். அந்தப் புத்திரன் செல்வமாய் வளர்ந்து, பதினறு வயதிற்குள் அரசர்களுக்கு வேண்டிய வித்தைகளை எல்லாம் நன்ருகக் கற்றுக்கொண்டான். அவனுக்குச் சமானமாகக் குதிரை ஏறிச் சவாரி செய்யக்கூடியவர்கள் அவன் காலத்தில் ஒருவரும் இல்லை என்றே சொல்லலாம். அவனுக்கு மகம்மது கான் என்னும் மகம்மதிய வீரன் ஒருவன் சிறந்த பள்ளித் தோழனுன்.

4. தரணி சிங்கின் புத்திரன் பெயர் தேசிங்கு. அவன் தன் தந்தையும் சிறிய தகப்பனும் டில்லியில் சிறையிலிருப்பதைத் தாய் சொல்ல அறிந்து, மகம்மது கானுடன் டில்லிக்குச் சென்று, பாட்சாவைக் கண்டு, உத்தரவு பெற்றுக் குதிரையை அடக்கினுன். பாட்சா மிகுந்த சந்தோஷப்பட்டுச் சிறைப்பட்ட அரசர்களை யெல்லாம் விடுதலை செய்தான். பின்பு, அவன் தேசிங்குக்கு அந்த விலை உயர்ந்த குதிரையைப் பரிசாகக் கொடுத்தான்; மகம்மது கானுக்குத் தன்னுடைய குதிரையைப் பரிசாக அளித்

தான். அவையன்றி, டில்லி பாட்சா, "இனிச் செஞ்சிக் கோட்டையிலிருந்து எனக்குக் கப்பம் செலுத்த வேண்டுவதில்லை" என்று தேசிங்குக்குக் கூறினான்.

5. தேசிங்கினது வீரத்தைக் கண்டு வியந்த டில்லி பாட்சாவின் சேனைத் தலைவன், தன்னுடைய அழகிற் சிறந்த மகளைத் தேசிங்குக்குத் திருமணம் செய்வித்தான். பின்பு தேசிங்கு சகல மரியாதையுடன் தன் தந்தையாரோடு செஞ்சியை அடைந்தான். அப்போது அவனுடைய தாய்க்குண்டான சந்தோஷத்திற்கு அளவே இல்லை.

6. பின்பு, சில மாதங்களில் தரணி சிங்கு இறந்து போனதால், தேசிங்கு செஞ்சியை ஆளத் தொடங்கினான். தேசிங்கின் ஆட்சியில் குடிகள் எல்லாரும் சுகமாய் இருந்தார்கள். தேசிங்கினுடைய சேனைக்கு மகம்மதுகானே தலைவனாய் அமைந்து திறமையோடு சேனையை நடத்தி வந்தான். இது நிற்க.

7. பாளையப்பட்டுக்காரர் எல்லாரிடமிருந்தும் பகுதி வசூலித்து அனுப்புவதற்கு டில்லி பாட்சா ஆர்க்காட்டு நவாபுவை ஏற்படுத்தியிருந்தான். அந்த நவாபுக்குத் தேசிங்கின் மீது மிகுந்த பொறாமை உண்டாயிற்று. ஆகவே, அவன் பகுதிப் பணம் வாங்கி வரும்படி செஞ்சிக்குத் ஆளனுப்பினான். தேசிங்கு டில்லி பாட்சா தமக்குக் கொடுத்திருக்கும் சுதந்திரத்தை நவாபுக்குத் தெரிவித்ததுமன்றி, நவாபு இதற்கு மாறாகத் தன்னிடம் பகுதி வாங்க எண்ணினால், தன்னோடு போர் செய்து தன்னை ஜயித்து வாங்கிக்கொள்ளலாம் என்றும் கூறினான்.

பயிற்சி—6

I. விடை சொல்லு:—

1. குதிரையின் மீதேறிச் சவாரி செய்ய முடியாமல் போன சிற்றரசர்களைப் பாட்சா என்ன செய்தான்?
2. தன் தந்தையும் சிற்றப்பனும் டில்லியில் சிறையிலிருப்பதைக் கேட்ட தேசிங்கு என்ன செய்தான்?
3. அவனுக்கும், அவன் தோழனுக்கும் கிடைத்த பரிசுகள் யாவை?
4. பொறாமை காரணமாய் ஆர்க்காட்டு நவாபு தேசிங்கினிடம் என்ன செய்தான்?
5. தேசிங்கு நவாபுக்குச் சொல்லியனுப்பிய செய்தி என்ன?

ii. கோடிட்ட இடங்களில் ஏற்ற வார்த்தைகளை அமைத்து வாசி:—

1. சிற்றரசர் பாட்சாவிற்கு —— கட்டி வந்தனர்.
2. தோல்வியடைந்த அரசர்கள் பாட்சாவால் —— செய்யப்பட்டார்.
3. தேசிங்கு பாட்சாவின் —— பெற்றக் குதிரையை அடக்கினான்.
4. பாட்சா சிறைப்பட்ட அரசர்களையெல்லாம் —— செய்தான்.

iii. தடித்த எழுத்திலுள்ள சொற்களுக்குச் சரியான வேறு பதங்களைப் புகுத்தி வாசி:—

1. பாட்சாவுக்கு வேகமாக ஓடுவதற்குச் சமான மற்ற குதிரை ஒன்று கிடைத்தது.

2. அப்படிச் செய்ய அவனால் இயலவில்லை.
3. தேசிங்கு செஞ்சியை ஆளத் தொடங்கினான்.
4. 'இச்சிறுவன் சவாரி செய்யப்போகிறான்' என்று பாட்சா சந்தேகம் கொண்டான்.

iv. அரசன், தம்பி, மனைவி, புத்திரன், தோழன், தலைவன், தாய், பகல்:—இவற்றின் திணை என்ன? இவற்றில் ஒவ்வொன்றின் பாலையும் கூறி, மறுபாலுடைய சொல்லு.

---

7. தேசிங்கு மன்னன்—II

இறுமாப்பு	தோழு	கோரி	நாயகன்
படை	துர்ச்சகுனம்	அகற்றி	கிடத்தி
தாலி	போர்க்களம்	மல்லாந்து	கற்பு
வாள்	சுற்றத்தார்	பதிந்து	பாழ்
பகைவர்	வசனம்	சொர்க்கம்	பேட்டை
சித்தம்	புதைந்து	பல்லக்கு	சந்தனம்

1. தேசிங்கு இறுமாப்புடன் அனுப்பிய செய்தியைக் கேட்ட நவாபு கோபமடைந்து, செஞ்சிக் கோட்டையின் மீது படையெடுத்து வந்தான். அப்பொழுது மகம்மதுகானுக்கு வழுதாவூரில் திருமணம் ஏற்பட்டிருந்தது. தேசிங்கு, நவாபுவின் சேனை வந்திருப்பதை அறிந்து, மகம்மதுகானுக்குச் செய்தி அனுப்பினான். அப்பொழுது மகம்மதுகான் மணப்பெண்ணுக்குத் தாலி கட்டப் போனான். அவன் அந்தச் செய்தியை அறிந்து உடனே தன் கலியாணத்தை நிறுத்திவிட்டுச் செஞ்சிக்கு வந்தான். வந்ததும், அவன் தேசிங்கினிடம் உத்தரவு பெற்றுத்

தன் சேனையுடன் நவாபுவை எதிர்த்துச் சண்டை செய்தான். ஆயிரக்கணக்கான நவாபுவின் வீரர்கள், மகம்மதுகானுடைய கைவாளுக்கு இரையானார்கள். மற்ற வீரர்கள், உயிர் தப்பினால் போதும் என்றெண்ணி, ஓடி ஒளிந்தார்கள்.

2. பின்பு, மகம்மதுகான் இனித் தனக்கு ஒரு வரும் பகைவரில்லை என்றெண்ணிக் கோட்டைக்குத் திரும்பி வந்து கொண்டிருந்தான். அப்பொழுது நவாபுவின் வீரன் ஒருவன் மறைந்திருந்து மகம் மதுகானைச் சுட்டுக் கொன்றான். பின்பு ஓடி ஒளிந்த நவாபுவின் சேனை, கூடிவந்து, போருக்குச் சித்தமாயிற்று.

3. தன்னுடைய உயிர் நண்பனும், ஒப்பற்ற வீரனுமாகிய மகம்மதுகான் மரணமடைந்ததைக் கேட்ட தேசிங்குக்குக் கோபம் பொங்கி எழுந்தது. உடனே அவன் தன் மனைவி முதலானவர்களிடத்தில் மிகுந்த வருத்தத்தோடு விடை பெற்றுக் கொண்டு, போருக்குப் புறப்பட்டான். தேசிங்கு அரங்கநாத சுவாமியிடம் அளவில்லாத பக்தியுடையவன். ஆகையால், அவன் அரங்கநாதர் கோவிலுக்குப் போய்ச் சுவாமியைத் தொழுதான். அப்பொழுது அவனுக்குக் கோவிலில் பல துர்ச்சகுனங்கள் தோன்றின. அவற்றைக்கண்டு அவன் அஞ்சாமல், போர்க்களத்தை அடைந்து, நவாபுவின் சேனையை அழித்து வெற்றியோடு திரும்பினான்.

4. தேசிங்கு வெற்றியடைந்ததும், கோட்டைக்குப் போய்த் தான் மாத்திரம் தன் மனைவியுடனும் சுற்றத்தாருடனும் இருந்து வாழ விரும்பவில்லை.

அவன் மகம்மது கானைப்பற்றி அளவற்ற விசனம் கொண்டான்; பின்பு மகம்மது கானையும் அவனுடைய குதிரையையும் ஓரிடத்தில் புதைத்துத் தன்னுடைய நட்புக்கு அடையாளமாக அவ்விடத்தில் மகம்மதிய முறைப்படி கோரி ஒன்று கட்டுவித்தான். பிறகு அவன் தன் வாளை ஆகாயத்தில் எறிந்து தன் மார்பை அகற்றி, மல்லாந்து படுத்தான். அவ் வாள் அவன் மார்பில் பதிந்து அவன் உயிரை வீர சொர்க்கத்திற்கு அனுப்பியது. ஆ! ஆ! அவனல்லவா சுத்த வீரன்!

5. பின்பு, போரில் உயிர் தப்பிய நவாபு ஒளிந்திருந்து, நடந்ததைக் கண்டு வருந்தித் தேசிங்கின் உடலைப் பல்லக்கில் வைத்துத் தன் ஆட்கள் மூலமாகக் கோட்டைக்கு அனுப்பினான். தேசிங்கு மரணமடைந்ததைக் கண்ட அவன் மனைவி, துக்கக் கடலில் மூழ்கினாள். ஆயினும், தன் கணவன் பிறரால் கொல்லப்படவில்லை என்பதைப் பல்லக்குத் தூக்கிகளால் அறிந்து, சந்தோஷித்தாள். பின்பு, அவள் சந்தனக் கட்டைகளை அடுக்கித் தீ மூட்டுவித்து, அதில் நாயகன் உடலைக் கிடத்தித் தானும் அத்தீயில் பாய்ந்து உயிர் விட்டாள். ஆ! ஆ! அவளன்றோ கற்பரசி! அவர்கள் இருந்து அரசாண்ட கோட்டையானது இப்பொழுது பாழ்பட்டுக் கிடக்கின்றது.

6. பின் தேசிங்கினுடன் அவன் மனைவியும் தீக்குளித்ததைக் கேள்வியுற்ற நவாபு மிகவும் வருந்தி, அவளுடைய கற்பை மெச்சி, அவள் பெயர் என்றும் நிலைத்திருக்கும்படி ஆர்க்காட்டுக்கு அருகி

லுள்ள ஓர் ஊருக்கு இராணிப்பேட்டை என்று பெய ரிட்டான்.

பயிற்சி—7

விடை சொல்லு :—

i. 1. மகம்மதுகான் கலியாணத்தை ஏன் நிறுத்தி னான் ?

2. மகம்மதுகான் எவ்வாறு உயிர் துறந்தான் ?

3. வெற்றிபெற்ற தேசிங்கு ஏன் உயிர்வாழ விரும்ப வில்லை ?

4. தேசிங்கின் மனைவி எப்படிக் கற்பரசியாவாள் ?

5. நவாபு அவள் பெயரை நிலைத்திருக்கச் செய்ய என்ன செய்தான் ?

ii. கீழுள்ள இரண்டிரண்டு வாக்கியங்களை ஒரே வாக்கிய மாகச் சேர் :—

1. மகம்மதுகான் தனக்கு ஒருவரும் பகைவரில்லை என்றெண்ணிக் கோட்டைக்குத் திரும்பி வந்து கொண்டிருந்தான். அப்பொழுது நவாபின் வீரன் ஒருவன் மறைந்திருந்து மகம்மதுகானைச் சுட்டுக் கொன்றான்.

2. தேசிங்கு அரங்கநாத சுவாமியிடம் அளவில் லாத பக்தியுடையவன். ஆகையால், அவன் அரங்கநாதர் கோவிலுக்குப் போய்ச் சுவாமி யைத் தொழுதான்.

iii. பொருள் கூறு :—

இறுமாப்பு, பகைவர், சித்தமாயிற்று, ஒப்பற்ற. நாயகன்.

iv. 1. இவற்றிற்குப் பெண் பால் கூறு :—
கணவன், நாயகன், அரசன், சிறுவன், வேடன்.

2. வீரர்கள், சுற்றத்தார், ஆட்கள்—இவற்றின் பால் என்ன ?

3. உயர் திணைச் சொற்களுக்குள் எத்தனை பால்கள் உண்டு ?

---

8. கிராம வாசிகளின் வறுமைக்குக் காரணங்கள்

நிலையம்	ஆஸ்தி	குடித்தனக்காரர்	ஐக்கியம்
மிஞ்சி	ஊழியம்	விலை வாசி	தவணை
பண்டிகை	சிக்கனம்	நிவாரணம்	சாதகம்
பெருவாரியாக	மாசூல்	ஒருவாறு	கருவி
கடனுளி	கிட்ட	நாணயம்	சரசமாக

1. கிராம வாசிகள் பயிர்த்தொழிலை மாத்திரமே செய்துகொண்டு கைத்தொழில் யாதொன்றும் செய்யாதிருப்பதால் வறுமைக்குட்பட்டிருக்கிறார்கள் என்பதை நாம் முன் வகுப்பில் படித்தோம். மனிதர் ஒரு வருஷத்தில் ஆறுமாத காலம் மாத்திரம் உழைத்துவிட்டுப் பன்னிரண்டு மாதங்களும் வயிறார உண்ண விரும்புவது சரியன்று. ஆகவே, வறுமையைப் போக்கக் கிராம வாசிகளனைவரும் தம் தம் சக்திக்கேற்ற கைத்தொழிலைச் செய்வது அவசியம்.

2. கிடைக்கும் ஊதியம் குறைவாயிருப்பது மாத்திரமே கிராம வாசிகளின் தற்காலப் பரிதாப நிலைமைக்குக் காரணமன்று. அவர்களிடம் பல கெட்ட வழக்கங்கள் இருந்து வருவதே அவர்களின்

நிலைமை தாழ்வதற்குக் காரணமாகும். முதலாவது, வரவுக்கு தகுந்த செலவு செய்வது என்பதும், அவசியமான செலவை மாத்திரம் செய்ய வேண்டுமென்ற நியமமும் அவர்களிடம் இருப்பதில்லை. அளவுக்கு மிஞ்சிச் செலவு செய்வதாலும், கலியாணம், பண்டிகை, சாவு முதலிய காரியங்களுக்குப் பெரிவாரியாகப் பணத்தைச் செலவிடுவதாலும், அவர்கள் கடனாளிகள் ஆகிறார்கள். காலக்கடைவில் வாங்கின கடனைத் திருப்பிக் கொடுக்கும் சக்தியற்றவர்களாகி ஆஸ்தியை இழந்து, பிறருக்கு ஊழியம் செய்யத் தலைப்படுகிறார்கள்.

3. இந்நிலையிலுள்ள மக்கள் முன்னேற வேண்டுமானால், சிக்கனம், வீண் செலவை நீக்குதல் ஆகிய நற்குணங்களைப் பழகுதல் வேண்டும். சிக்கன வாழ்க்கை நடத்தும் கிராமத்தினர்கூடக் கடன் பட்டு வருந்துகின்றனர். அதன் காரணம் யாது? பயிர்த் தொழில் செய்யும் அவர்களுக்கு எருது, விதை முதலியவற்றிற்கு முன் பணம் வேண்டியிருக்கிறது. தவிர, இவர்கள் எதிர் பார்க்கும் மாசூல் கைக்கு வருவதற்கு முன் அரசாங்கத்தாருக்கு நிலவரி செலுத்த வேண்டியிருக்கிறது. இவை காரணமாக இவர்கள் கிராமங்களிலுள்ள வட்டிக்கடன் கொடுப் போரிடம் அதிக வட்டி விகிதத்திற்குக் கடன் வாங்கு கிறார்கள். வட்டிக்கும் முதலுக்குமாக அவர்கள் மாசூலைக் குறைந்த விலைக்கு முன்பாகவே வாங்கிக் கொள்கிறார்கள். இக்காரணங்களால் பயிர்த்தொழில் செய்பவர்களுக்கு முழுப்பயன் சேராமற் போகிறது.

4. பல வருஷங்களாக இந்நிலைமையில் வருந்தி வந்த குடித்தனக்காரர்கள், விலைவாசி குறைந்ததும் அதிகமாகக் கஷ்டப்படலானார்கள். இக்கஷ்டங்களை நீக்கவே அரசாங்கத்தார் விவசாயிகளின் **கடன் நிவாரணச் சட்டம்** என்னும் ஒரு சட்டத்தைச் செய்துள்ளனர். இது விவசாயிகளின் தற்காலக் கஷ்டங்களை ஒருவாறு குறைக்கும். ஆனால், அவர்கள் இம்மாதிரியான துன்பங்களில் இனி விழாமல் வாழ வேண்டுமாயின், கடன் கொடுப்பவர்கள் கையில் அகப்படாமலும், மாசூலின் முழு விலையை இழக்காமலும் இருக்க வேண்டும்.

5. இச்சௌகரியங்களைக் குடியானவர்களுக்குச் செய்து கொடுப்பதற்காகவே **கிராம ஐக்கிய சங்கங்கள்** ஏற்படுத்தப்பட்டுள்ளன. ஒரு கிராமத்திலுள்ளார் எல்லாரும் சேர்ந்து ஒரு சங்கத்தைச் சுலபமாக ஸ்தாபித்துக் கொள்ளலாம். அப்படிச் செய்தால், ஜில்லா ஐக்கிய நிதியிலிருந்து தங்களுக்கு வேண்டிய தொகையைக் குறைந்த வட்டிக்கு வாங்கிக் கொண்டு அதைச் சுலபமான தவணைகளில் செலுத்தி விடலாம். இப்படிச் செய்வது, வேண்டும்போது சுலபமாகப் பணம் பெறுவதற்கு மாத்திரமே அல்லாது வேறு வகைகளிலும் பயனைத் தரும். கிராமத்தினரிடை சிக்கனத்தை உண்டாக்க இது ஏற்ற சாதகமாகும். விவசாயிகள் தங்களுக்குக் கிடைக்கும் சிறு தொகைகளை இந்நிதிகளில் பயமில்லாமல் சேர்த்து வைக்கலாம், அவற்றிற்கு வட்டியும் கிடைக்கும்.

6. ஐக்கிய சங்கங்களால் வேறு விசேஷப் பலன்கள் ஏற்படுவதற்கும் இடமுண்டு. விவசாயிகள்

ஒன்று சேர்ந்து, சங்கத்தின் மூலமாகத் தங்களுக்கு வேண்டிய விவசாயக் கருவிகள், எரு, விதை முதலியவற்றைச் சரசமாக வாங்கிக்கொள்ளலாம்; தவிர, விளையும் மாகஸூலைச் சங்கத்தின் மூலமாகத் தகுந்த விலைக்கு விற்று முழுப்பயனையும் அடையலாம். இந் நன்மைகள் பலவும் கிராமத்தினருக்குக் கிட்டவேண்டும் என்றெண்ணியே ஐக்கியச் சங்கங்களைப் பிரபலமாக்க அரசாங்கத்தார் உழைத்து வருகின்றனர். கிராமக் குடிகள் இதையுணர்ந்து அச்சங்கங்களை ஏற்படுத்த முன்வரவேண்டும். தவிர, அவை திருப்திகரமாக வேலை செய்வதற்கு மக்களிடம் ஒற்றுமை, நாணயம், பொறுப்பு ஆகிய குணங்கள் இருத்தல் வேண்டும். அச்சபைகளை ஏற்படுத்தி நடத்துவது, மக்களிடம் இக்குணங்கள் தோன்றிப் பரவுவதற்கு இடமாகும்.

"ஒன்றுபட் டாலுண்டு வாழ்வே;—நம்மில்
ஒற்றுமை நீங்கில் அனைவர்க்கும் தாழ்வே.
நன்றிது தேர்ந்திடல் வேண்டும்;—இந்த
ஞானம் வந்தாற்பின் நமக்கெது வேண்டும்?"

—பாரதியார்

பயிற்சி—8

i. விடை சொல்லு:—

1. கிராம வாசிகளின் வறுமைக்கு இப்பாடத்தில் குறித்துள்ள காரணங்கள் யாவை?
2. கடன் கொடுப்பவர்களிடமிருந்து தப்பக் குடியானவர்கள் என்ன செய்யவேண்டும்?

3. ஐக்கிய சங்கங்களால் குடியானவர்கள் அடையக்கூடிய நன்மைகள் என்ன?

4. விவசாயிகளின் கடன் நிவாரணச் சட்டத்தின் நோக்கமென்ன?

5. ஐக்கிய சங்கங்கள் சரிவர நடைபெறக் கிராமத்தாரிடம் என்ன குணங்கள் இருக்கவேண்டும்?

ii. பொருள் கூறுக:—

நியமம்	ஆஸ்தி	ஊழியம்
தவணை	நாசமாக	சாதகம்

iii. கிடைக்கும் ஊதியம் குறைவாய் இருப்பது மாத்திரமே கிராம வாசிகளின் வறுமைக்குக் காரணமன்று:—இதில் அன்று என்பதற்குப் பதிலாக உள என்பதை உபயோகித்து வாசி.

iv. இம்மக்கள் முன்னேற வேண்டுமானால், சிக்கனத்தைப் பழகவேண்டும்—இதை முன்னேற வேண்டுமானால் என்பதற்குப் பதிலாக முன்னேறலாம் என்பதை அமைத்து வாசி.

v. கிராமம், மாகுல், காரியங்கள், மிருகங்கள், குதிரை, சங்கங்கள்—இவை என்ன திணை? இவற்றில் கிராமம், மாகுல், குதிரை என்பவை ஒன்றன் பால்; மிருகங்கள், சங்கங்கள் என்னும் சொற்கள் பலவின் பால். அஃறிணைக்கு ஒன்றன் பால், பலவின் பால் என்னும் இரண்டு பால்களே உண்டு.

9. அல்லியின் ஆட்சியில் பஞ்சம்

பரதேசம்	வறண்டன	பூண்டு	பனுதி
சீமை	களைவு	குடி வலசை	விசாரம்
மடுக்கள்	சருகு	பஞ்சை	கருப்பு
சரீரம்	அன்னம்	சல்லடைக்கண்	திக்கு

பாண்டிநல் நாட்டார்கள் பரதேசம் போனார்கள்;
மழைதான் கிடையாது மதுரைநகர்ச் சீமையிலே;
காய்ந்துலர்ந்து போயினவே கனமதுரைப் பட்டணத்
எரிந்து புகைந்ததே ஈரங் கிடையாமல்; [தில்
குடிக்கநீர் கிட்டாது குளங்கள் மடுக்களெல்லாம்;
காகம் குடிப்பதற்குங் கரண்டிஜலங் கிட்டாது;
ஆறு குளங்களெல்லாம் அறவே வறண்டனவே;
ஏரிகள் வறண்டனவே ஏற்றக்கோல் ஆழமட்டும்;
பூமிக்குள் சூடெழும்பிப் பொங்கிற்றே செந்தழலாய்;
விளைவு கிடையாது வேந்தன் மதுரையிலே;
களைவு கிடையாது கனமதுரைப் பூமியிலே;
சருகா யுலர்ந்தனவே தழைத்த மரங்களெல்லாம்;
பூமி யுலர்ந்தது பூண்டு கிடையாமல்;
பறவை கிடையாது பாண்டியன் தேசத்திலே;
குடிவலசை வாங்கினார் கொடிமதுரை யுள்ளவர்கள்;
பஞ்சை பனுதிகளாய்ப் பரதேசம் போனார்கள்;
அன்னம் கிடையாதே அழகுள்ள மதுரையிலே;
தங்க நிழலில்லை தனிமதுரைப் பூமியிலே;
ஊரி லிருந்தவர்கள் உறக்கமிகக் கொண்டார்கள்;
அன்ன விசாரம் அதுவே பெரிதாச்சு;
பன்னிரண்டு வருடம் பாரக் கருப்பாச்சு;
சரீரம் வெளுத்தார்கள்; சல்லடைக்கண் ஆனார்கள்;
பெண்டுடனே பிள்ளை புருஷர் பரதேசம்;

திக்குகள் கெட்டுத் திசைமாறிப் போனார்கள் ;
அவ்வா றலைந்ததே அணிமதுரைப் பூமியெல்லாம்.

—அல்லி அரசி மாலை

பயிற்சி—9

i. இச் செய்யுளை மௌனமாகப் படித்து, அல்லியின் ஆட்சியில் பஞ்சம் விளைந்த காரணத்தையும், அதனால் நேர்ந்த கொடுமைகளையும் உன் சொந்த நடையில் எழுதுக.

ii.

காகம்	குளங்கள்	மரங்கள்
பறவைகள்	புதல்வர்	வீரர்கள்
சரீரம்	திக்குகள்	திசை
கடவுளிகள்	எருது	பறவை

இவற்றில் ஒருமை பன்மைகளைத் தனித்தனியாகச் சொல்லு.

iii. எண், ஒருமை பன்மை என இருவகைப்படும்.

மேலேயுள்ள வார்த்தைகளில் ஒருமைகளுக்குப் பன்மைகளும், பன்மைகளுக்கு ஒருமைகளும் சொல்லு.

---

10. திருவள்ளுவர்

சீலன்	புலைச்சி	சிகாமணி	மொழிபெயர்
கன்னிகை	இஷ்டம்	சீர்தூக்கி	தலைப்பயன்
மெச்சு	சம்மதி	வையகம்	அடிசில்
ஜாதகம்	பெண்டிர்	தெள்ளு	பாவாய்
கனிந்து	வள்ளுவர்	செப்பி	பேதை
இழிகுலம்	கிருபை	நூல்	தேறி
சாஸ்திரம்	வைசியர்	சிலை	அற்புதம்

1. பண்டைக் காலத்தில் சோழநாட்டில் ஓர் அந்தணன் இருந்தான். அவன் கல்வியிலும், ஒழுக்

-கத்திலும் சிறந்தவன். அப்படிப்பட்ட உயர் குண சிலனுகிய அவன், நற்குண நற்செய்கைகளில் சிறந்த வளாகிய ஒரு கன்னிகையை மணம் புரிந்து, அவ ளோடு இனிது வாழ்ந்துவந்தான். இவ்வாறு மனைவி யும் கணவனும் கண்டார் மெச்சும்படி வாழ்ந்து வரும் நாளில், அவர்களுக்கு அழகுள்ள புத்திரன் ஒருவன் பிறந்தான்.

2. புத்திரனைப் பெற்றதனுல் பெருமகிழ் வடைந்த அந்த அந்தணன், நல்ல நாள் குறித்து, அந்த நாளில் தன் புத்திரனுக்குப் பகவன் என்று பெயரிட்டான். பின்பு அவன் அந்தப் பிள்ளைக்கு

ஜாதகம் கணித்துப் பார்த்தான். அதில் அப்புத் திரன் இழிகுலப் பெண் ஒருத்தியை மணப்பான் என்று காணப்பட்டது. ஆகையால், அவன் மனம் வருந்தித் தன் பிள்ளையையும் மனைவியையும் பிரிந்து, கங்கையில் நீராடித் தனக்கு நேர்ந்த துன்பத்தை ஒழிக்கக் கருதிச் சென்றான்.

3. பகவன், வளர்பிறைச் சந்திரனைப் போல வளர்ந்து, பதினைந்து வயதிற்குள் எல்லாச் சாஸ்திரங்களையும் குற்றம் அறக் கற்றுணர்ந்தான். பின்பு அவன், தன் தந்தை, தன்னையும் தன் தாயையும் தனியே விட்டுச் சென்றதன் காரணத்தைத் தன் தாயைக் கேட்டறிந்தான். உடனே தன் தந்தையைக் கண்டு பிடிக்க வேண்டும் என்னும் எண்ணம் அவனுக்கு உண்டாயிற்று. ஆகையால், அவன் தன் தாயிடம் விடை பெற்றுப் புறப்பட்டான்.

4. அவன் செல்லும் வழியில் கருவூரில், ஆதி என்னும் புலச்சியைக் கண்டான். அவள் அழகிலும் அடக்கத்திலும் உயர்ந்தவள்; ஆகையினால், பகவன் தன் ஜாதகத்தின்படியே அவளை மனைவியாகக் கொண்டான்; பிறகு, அது தன் குலத்திற்குத் தகாத செய்கை என்பதை அறிந்து, அவளைப் பிரிந்து சென்றான்.

5. பின்பு, அவன் கங்கை நதி பாயும் இடங்களில் உள்ள ஊர்களில் எல்லாம் தேடியும் தன் தந்தையைக் காணாமல் வருந்தி, தன்னுடைய ஊருக்குப் போகத் திரும்பி வந்து கொண்டிருக்கையில் இரவாயிற்று. ஆகையால், அவன் ஒரு சத்திரத்தில் தங்கினான். அவனைப் பல இடங்களில் தேடிக் காணாத ஆதி என்பவளும், வருத்தத்துடன் அச்சத்திரத்தில் தங்கியிருந்தாள். அவள் அவனைக் கண்டவுடன் ஓடி வந்து அவனை வணங்கினாள். 'நீ ஏன் இங்கு வந்தாய்?' என அவன் ஆதியைக் கேட்டான். 'நான் உம்மைப்

பிரிந்து உயிர் வாழேன்?' என்றனள் ஆதி. 'பெண்ணே, நீ பெறும் பிள்ளைகளை யெல்லாம், பெறும் இடத்திலே விட்டுவர இஷ்டமானால், நீ என்னுடன் வரலாம்,' என்று பகவன் சொன்னான்.

6. ஆதி அதற்குச் சம்மதிக்கவே, அவர்கள் இருவரும் பற்பல இடங்களுக்குச் சென்றனர்; அவ்வாறு செல்லுகையில் அவர்களுக்கு உப்பை, ஔவை, உறுவை, வள்ளி என்னும் நான்கு பெண்டிரும், அதிகமான், வள்ளுவர், கபிலர் என்னும் மூன்று புதல்வரும் பிறந்தனர். அவர்கள் அப்பிள்ளைகளை அங்கங்கே விட்டுச் சென்றார்கள். அக்குழந்தைகள் தாம் தாம் பிறந்த இடங்களில் ஒவ்வொருவரால் கண்டெடுத்து வளர்க்கப்பட்டுக் கல்வியிற் சிறந்தவர்களானார்கள்.

7. அவர்களுள் திருவள்ளுவர் மயிலாப்பூரில் வள்ளுவர் வீட்டில் வளர்ந்து, தெய்வ கிருபையால் கல்வியில் சிறந்து, தெய்வப் புலவரென எல்லாரும் கொண்டாடும்படி விளங்கினர். பின்பு, தம் உரிய பருவத்தில் இல்லறம் நடத்த விரும்பிப் பூவைசியர் குலத்தில் பிறந்த உயர்குணப்பொக்கிஷமாகிய வாசுகியார் என்பவரை மணந்தார். வாசுகியார் தம்முடைய கணவர் குறிப்பறிந்து அவருக்கு ஏற்றபடி நடந்துவந்தார்.

8. திருவள்ளுவர் புலவர் சிகாமணியாய் விளங்கியும், அரசர் எவரையும் அடைந்து அவரிடம் பொருள் பெற்று வாழாமல், தாமே நெசவுத்தொழில் செய்து, அதில் வரும் பொருளைக் கொண்டு இல்லறம் நடத்தினர்.

"செய்யுந் தொழிலனைத்தும் சீர்தூக்கிப் பார்க்குங்கால்
நெய்யுந் தொழிற்கு நிகரில்லை:—வையகத்தில்

தெள்ளு தமிழ்வேதம் செப்பியந்நாள் சீர்படுத்தும்
வள்ளுவர் கொண்டதல்ல வா?"

என்பது இங்குக் கவனிக்கத் தக்கது.

9. இவர் திருக்குறள் என்னும் ஒரு சிறந்த நூலை இயற்றியிருக்கிறார். இந்த நூலை, அக்காலத்தில் மதுரையிலிருந்த சங்கப் புலவர்களாகிய பெரும் புலவர்கள் மிகவும் புகழ்ந்து பேசியிருக்கிறார்கள். திருவள்ளுவருக்குப் பின்வந்த கம்பர் முதலிய கவிச்சக்கரவர்த்திகளும், இந்தத் திருக்குறளைப் புகழ்ந்து ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். இந்த அருமையான நூல், எல்லா மதங்களுக்கும் பொதுவான நூலாய் விளங்குவதால், பல பாஷைகளில் மொழி பெயர்க்கப் பட்டிருக்கின்றது. இப்படிப்பட்ட நூல் ஒன்று திருவள்ளுவரால் எழுதப்பட்டது தமிழராகிய நாமும், நம்முடைய முன்னோர்களும் செய்த பெருந்தவப் பயனேயாகும்.

10. இப்படிப்பட்ட அருமையான நூலைச் செய்து புகழ்பெற்ற திருவள்ளுவர், மயிலாப்பூரில் சிறப்பாய் வாழ்ந்து வருகையில், அவருடைய மனைவியார் காலமாயினார். தம் மனைவியாரின் மரணத்தைக் குறித்துத் திருவள்ளுவர்,

"அடிசிற் கினியாளே! அன்புடை யாளே!
படிசொல் தவறாத பாவாய்—அடிவருடிப்
பின் தூங்கி முன்னெழும் பேதையே! போதியோ?
என் தூங்கும் என்கண் இரா!"

என்னும் பாடலைக்கூறி மிகவும் வருந்தினர்.

11. இவர் பின்பு தம்முடைய ஞானத்தால் மனந்தேறி இருந்து, அநேக அற்புதங்களைச் செய்து வந்தனர். திருமயிலையிலேயே காலமான இவருடைய சிறப்பைப்பற்றிப் பலர் பல விதமாகப் புகழ்ந்து சொல்லக்கேட்ட அரசன் ஒருவன், இவருக்கு மயிலாப்பூரிலேயே திருவுருவச் சிலையொன்றைச் செய்தமைத்துக் கோயிலும் அமைப்பித்தான். எண்ணற்ற அன்பர்கள் இன்றும் இப்பெரியவர் திருவுருவச் சிலையைப் பூசித்து வணங்கி வருவதை மயிலாப்பூரில் காணலாம்.

பயிற்சி—10

i. விடை சொல்லு :—

1. அந்தணன் கங்கைக்குச் சென்ற காரணம் யாது?
2. ஆதியை மணந்த பகவன் அவளை எதற்கு இணங்கும்படி வற்புறுத்தினன்?
3. வாசுகியார் எப்படிப்பட்ட பெண்மணியார்?
4. வள்ளுவருக்கும் மற்றப் புலவர்களுக்கும் பொருள் ஈட்டுவதில் இருந்த வித்தியாசமென்ன?
5. திருக்குறள் பல மதத்தினராலும் கொண்டாடப்படுவதேன்?
6. திருவள்ளுவரின் புகழை கேட்டறிந்த அரசனொருவன் என்ன செய்தான்?

ii. கோடிட்ட இடங்களில் ஏற்ற வார்த்தைகளை அமைத்து வாசி?

1. ——பிறந்த பகவன் இழி குலத்தைச் சார்ந்த ஆதியை மணந்தான்.

2. பிரிந்து சென்ற பகவனை ஆதி திரும்பவும்——.

3. வள்ளுவர் பிறரிடம்——தாமே தொழில் செய்து பொருள் சம்பாதித்தார்.

4. அந்தணன் புத்திரன் பிறந்ததற்கு மகிழ்ந்தனனேனும், அவன் இழிகுலப் பெண்ணை மணப்பான் என்று தெரிந்ததும்——.

iii. இச்சொற்களில் ஆண்பாலையும் பெண்பாலையும் பிரித்தெழுதி, இவற்றில் ஆண்பாலுக்குப் பெண்பாலும், பெண்பாலுக்கு ஆண்பாலும் சொல்லு :—
புத்திரன், புலைச்சி, புதல்வன், சக்கரவர்த்தி, பெண்.

vi. கீழுள்ள வாக்கியங்களை ஒரே வாக்கியமாகச் சேர் :-

1. பண்டைக்காலத்தில் சோழநாட்டில் ஓர் அந்தணன் இருந்தான். அவன் கல்வியிலும், கேள்வியிலும், ஒழுக்கத்திலும் சிறந்தவன்.

2. அப்புத்திரன் இழிகுலப் பெண் ஒருத்தியை மணப்பான் என்று காணப்பட்டது. ஆகையால், அவன் கங்கை நீராடித் தனக்கு நேர்ந்த இழிவை ஒழிக்கக் கருதிச் சென்றான்.

v. புதல்வன் பிறந்தான்.
புதல்வர்கள் பிறந்தார்கள்.

இவ்வாக்கியத்தில் எழுவாயும் பயனிலையும் இடத்தால் ஒத்திருப்பதைக் கவனி. இதுவே சரியான முறை.

vi. கீழுள்ள வாக்கியங்களில் அடைப்புக் குறிகளுக்குள் கொடுத்திருக்கும் வார்த்தையை ஏற்றபடி அமைத்து வாசி :—

1. புத்திரனைப் பெற்றதால் அந்தணன் மிகவும் ——(மகிழ்).

2. அவர்கள் பற்பல இடங்களுக்குச்——(செல்).
3. குழந்தைகள் வெவ்வேறு இடங்களில்——(வளர்).
4. புலவர்கள் திருக்குறளைப் பெரிதும்——(புகழ்).
5. அரசன் வள்ளுவருக்குக் கோயில் ஒன்று——(அமை).

---

11. கடிதங்கள்

ஒய்வு	கூர்ந்து	உள்ளோம்	பரிசளிப்பு
மனு	கீழ்ப்படிதல்	பிரத்தியேகம்	கலெக்டர்
முறை	மாணவன்	சிற்றுண்டி	கனம்
மாதிரி	தந்தை	கோல்	திண்ணம்
அசௌக்கியம்	மண்டி	தாண்டுதல்	அனுமதி
தயை	போட்டி	குண்டு	

தகப்பன் :—கிட்டு, இன்று உன் தம்பி பிறந்த நாள். ஆகையால், நீ பாடசாலைக்குப் போக வேண்டாம்.

கிட்டு :—அப்பா, நான் ஓய்வு கேட்டுக்கொண்டு வரவில்லையே!

த :—அதனால் என்ன? இப்போது ஓர் ஒய்வு மனு எழுதி அனுப்பிவிடு. உனக்குத்தான் கடிதம் எழுதத் தெரியுமே!

கி :—தெரியும், அப்பா. கடிதத்தின் ஐந்து பாகங்களும், அவை இருக்கவேண்டிய முறைகளும் தெரியும்.

த :—சரி உபாத்தியாயருக்கு எழுதுவதற்கும் வேறு மனிதர்களுக்கு எழுதுவதற்கும் சிறிதுதான்

வித்தியாசம். இம்மாதிரிக் கடிதங்களைப் படித்தாயானால், நீ அவற்றை நன்றாகத் தெரிந்து கொள்ளலாம்.

க:—அப்படியே செய்கிறேன், அப்பா.

I. ஆசிரியர்க்கு:

21, கிழாண்டார் வீதி,
திருச்சிராப்பள்ளி,
6—4—1952.

திருச்சிராப்பள்ளி நேஷனல் காலேஜ் ஐந்தாம் வகுப்பு ஆசிரியர் அவர்களுக்கு:

அன்புள்ள ஐயா,

இன்று எனக்குத் தேக அசௌக்கியமாயிருப்பதால், பாடசாலைக்கு வரக்கூடாதவனாய் இருக்கிறேன். நேற்றுப் பாடசாலையிலிருந்து திரும்பி வந்த பிறகுதான் சுரம் காண ஆரம்பித்தது. ஆகையால் முன்பாகவே ஓய்வுக்கு எழுதிக்கொள்ள முடியவில்லை. நீங்கள், தயவு செய்து எனக்கு இன்று ஒரு நாளைக்கு மாத்திரம் ஓய்வு கொடுக்கும்படி வணக்கமாய்க் கேட்டுக் கொள்ளுகிறேன்.

உங்கள் கீழ்ப்படிதலுள்ள
மாணவன்
க. நடராஜன்

விலாசம்:

கனம்,

ஐந்தாம் வகுப்பு ஆசிரியர் அவர்கட்கு,
நேஷனல் காலேஜ், திருச்சிராப்பள்ளி.

II. தகப்பனுக்கு

ஸ்ரீ ராமகிருஷ்ண உயர்தரப் பாடசாலை,
சென்னை,
15—4—1952.

பிரியமுள்ள தந்தையீர்,

உங்கள் அன்பார்ந்த கடிதம் கிடைத்தது. அங்கு அனைவரும் சுகம் என்பதை அறிந்து சந்தோஷம் அடைகிறேன். நான் இங்குச் சுகமாய் இருந்து வருகிறேன். இப்போது எங்களுக்கு வருஷாந்திரப் பரீக்ஷை நடந்து வருகிறது. அதனாலே தான் நான் உங்களுக்கு உடனே பதில் எழுத முடியவில்லை.

எங்கள் பாடசாலை கோடை விடுமுறைக்கு இம் மாதம் 22-ந்தேதி மூடப்படும். நான் அன்றிரவே புறப்பட்டு அவ்விடம் வர விரும்புகிறேன். ஆகையால், நீங்கள் தயவு செய்து எனக்குப் பிரயாணச் செலவுக்கும் மற்றச் செலவுகளுக்கும் பணம் தாமதமின்றி அனுப்புமாறு வேண்டுகிறேன்.

என் தாயாரையும் தங்கையையும் நான் மிகவும் விசாரித்ததாகச் சொல்லவும்.

உங்கள் அன்புள்ள
க. கோபாலன்

ஸ்ரீ ச. கந்தசாமி முதலியார் அவர்கள்,
28, மண்ணடித்தெரு, வேலூர்.

III. நண்பனுக்கு

147, மேலே வீதி,
தஞ்சாவூர்,
4—7—1952.

அன்பார்ந்த நண்பனே,

இம்மாதம் முதலாம் இரண்டாம் தேதிகளில் இங்கு நடைபெற்ற பந்தயப் போட்டிகளுக்கு நீ தவறாமல் வருவாயென்று ஆவலாயிருந்தேன். என் பெற்றோர்களுங்கூட உன் வரவை எதிர்பார்த்திருந்தார்கள். நீ வராமலிருந்தது எங்களெல்லோருக்கும் வருத்தமாய் இருந்தது. நீ சுகமாய் இருக்கிறாயென நம்பி உன் சுகத்தை அறிய ஆவலாயுள்ளோம்.

வழக்கம் போல முடிவுப் போட்டிக்குத் தேறுதல்கள் முதல் தினம் நடைபெற்றன. எப்பொழுதும் போல அல்லாமல் இவ்வருஷம் அதிகமான பாடசாலைகள் போட்டியில் கலந்துகொண்டன. பந்தயக்காரர்களுக்கும் வேடிக்கை பார்ப்பவர்களுக்கும் பிரத்தியேகமான இடங்கள் திருப்திகரமாக அமைக்கப்பட்டிருந்தன. சிற்றுண்டி முதலிய வசதிகளும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன.

இவ்வருஷம் மைல் பந்தயம், கோல்கொண்டு தாண்டுதல், குண்டு எறிதல் இவற்றில் இதுவரை ஜயித்தவர்களைக் காட்டிலும் அதிகமாகப் பந்தயம் கெலித்தவர்கள் திறமையைக் காட்டினார்கள். போட்டிகள் முடிந்ததும் இவ்வருஷம் பல பாடசாலைகளின் மாணவ மாணவிகள் வேடிக்கைகள் நடத்தினார்கள். அவை வெகு நேர்த்தியாயிருந்தன. கடைசியில்

பரிசளிப்பு நடந்தது. கலெக்டர் கனம் டி. எம். ஆர். சந்திரசேகரர் என்பவர் தலைமை வகித்துப் பரிசளித்தார்.

எங்கள் பாடசாலைக்கு ஒரு வெள்ளிக் கிண்ணமும் ஒரு கவசமும் கிடைத்தன.

உன் அன்பார்ந்த நண்பன்,

கு. மாரியப்பன்.

ஸ்ரீ. த. கருப்பண்ணப் பிள்ளை,

19, சன்னிதித் தெரு

மன்னார்குடி.

கிட்டு :—அப்பா, நீங்கள் காட்டிய கடிதங்களை நன்றாகப் படித்தேன். அதன் பின் ஆசிரியருக்கு ஒரு கடிதம் எழுதிக்கொண்டு வந்திருக்கிறேன்.

தகப்பனார் :—எங்கே? காட்டு, பார்ப்போம்.

IV. கிருஷ்ணசாமி எழுதிய கடிதம்

17, புதுத் தெரு,

மதுரை,

9—7—1952.

மதுரைச் சேதுபதி உயர்தரப் பாடசாலை,

ஐந்தாம் வகுப்பு ஆசிரியர் அவர்களுக்கு,

அன்புள்ள ஐயா,

இன்று என் தம்பி பிறந்த தினமாதலால், நான் பாடசாலைக்கு வர இயலாதவனாயிருக்கிறேன். இது விஷயம் இன்று காலையிலேதான் தகப்பனார் எனக்குத் தெரிவித்தார். ஆகையால், முன்பாகவே உன்

கள் அனுமதி பெற முடியாமல் போயிற்று. நீங்கள் தயை கூர்ந்து இன்று ஒருநாளைக்கு மாத்திரம் ஓய்வு தரும்படி கேட்டுக்கொள்ளுகிறேன்.

உங்கள் கீழ்ப்படிதலுள்ள,
ச. கிருஷ்ணசாமி.

ஐந்தாம் வகுப்பு ஆசிரியர் அவர்கட்கு,
சேதுபதி உயர்தரப் பாடசாலை,
மதுரை.

பயிற்சி—11

i. மூவகை இடங்கள் எவை?

ii. கீழுள்ள வாக்கியங்களில் தடித்த எழுத்திலுள்ள வார்த்தைகளின் இடங்களைச் சொல்லு:—

1. நேற்று மாலைதான் சுரம் காண ஆரம்பித்தது.
2. **நீங்கள்** தயவு செய்து பணம் அனுப்பவும்.
3. நீ வருவாயென்று **நாங்கள்** ஆவலாய் இருந்தோம்.
4. **நான்** உடனே பதில் எழுத முடியவில்லை.
5. **வேடிக்கைகள்** வெகு நேர்த்தியாய் இருந்தன.
6. **கெலித்தவர்கள்** பரிசு பெற்றார்கள்.

iii. மேலேயுள்ள வாக்கியங்களில் எழுவாய், பயனிலை இரண்டும் எண்ணில் மாத்திரமல்லாமல், திணை பால், இடம் இவற்றிலும் ஒத்திருப்பதைக் கவனி.

iv. அடியிற்காணும் வாக்கியங்களில் எழுவாய்களைச் சொல்லு:—

1. ஓர் ஒய்வு மனு எழுதி அனுப்பிவிடு.
2. அப்படியே செய்கிறேன்.
3. எங்கே? காட்டு, பார்ப்போம்.

v. கீழே விவரித்துள்ளபடி கடிதங்கள் எழுது:—

1. உன் நண்பனுக்கு உன் சகோதரியின் கலியாணத்திற்கு வரும்படி ஒரு கடிதம்.
2. பெங்களூரிலுள்ள உன் மாமனுக்கு நீ கோடை விடுமுறைக்கு அங்கு வருவதாகவும், அதன் நோக்கத்தையும் குறிப்பிட்டு ஒரு கடிதம்.
3. உன் வகுப்பு ஆசிரியருக்கு நீ கலியாணத்திற்கு ஊருக்குப் போகவேண்டியிருப்பதால், அதற்கு நான்கு தினங்கள் ஒய்வு கொடுக்கும்படி ஒரு கடிதம்.
4. உன் தகப்பனாருக்கு உன் பாடசாலையில் நடந்த வருஷாந்தரக் கொண்டாட்டத்தை விவரித்து ஒரு கடிதம்.

---

12. நமது ராஜ்ய ஆட்சி

பேதங்கள்	பிரதம	இலாகா	பொறுப்பு
சிற்சில	பட்டதாரி	தனிப்பட்ட	அரசிறை
தனித்தனி	தொகுதி	விகிதம்	தவக்கம்
ஏற்பாடுகள்	சேவை	திட்டம்	சுயேச்சை

1. நாம் வசிக்கும் ராஜ்யம் சென்னை ராஜ்யம். இது நமது பாரத நாட்டின் உட்பிரிவுகளான பெரிய ராஜ்யங்களுள் ஒன்று. முன்பு ஆங்கிலேயர் ஆண்ட

போது, மாகாணங்கள் என்றும் சுதேச ராஜ்யங்கள் என்றும் பலவகையாகப் பாரத நாட்டைப் பிரித்திருந்தார்கள். நமது சுதந்திர இந்தியாவில் எல்லாப் பிரிவுகளுக்கும் ராஜ்யங்கள் என்றே பெயர் அமைத்துள்ளனர்.

2. ராஜ்யங்களில் 'ஏ', 'பி', 'ஸி' என்ற பேதங்களுண்டு. முன்பு மாகாணங்கள் என்று வழங்கப்பட்டவை 'ஏ' பிரிவு ராஜ்யங்கள் என்று சொல்லப்படும். சுதேச ராஜ்யங்களாயிருந்து இந்திய யூனியனுடன் இணைக்கப்பட்டவை 'பி' பிரிவு ராஜ்யங்களாம். டில்லி, ஆஜ்மீர், குடகு போன்ற சிற்சில பகுதிகள் முன்பு கமிஷனரின் ஆளுகையின்கீழ் தனி மாகாணங்களாயிருந்தன. இவையே 'ஸி' பிரிவு ராஜ்யங்கள். இவ்வகையில் நமது சென்னை ராஜ்யம் ஏ' பிரிவு ராஜ்யமாக விளங்குகிறது.

3. கிராமம், ஜில்லா, நகரம் என்னும் இவற்றின் காரியங்களைக் கவனித்து நடத்தத் தனித்தனி சபைகளும் உத்தியோகஸ்தர்களும் உண்டு என்பதை நாம் முன் புத்தகங்களில் படித்தோம். இனி நமது ராஜ்ய காரியங்களைக் கவனித்து நடத்த எவ்விதமான ஏற்பாடுகள் இருக்கின்றன என்று பார்ப்போம்.

4. ராஜ்யத்தின் காரியங்களைக் கவனிக்க கவர்னர் ஒருவரை ஐந்தாண்டுகளுக்கு ஒரு முறை ஜனாதிபதி நியமிப்பார். மந்திரிகள் கூடிய சபையின் உதவியைக் கொண்டு இவர் ராஜ்ய காரியங்களை நடத்தி வருகிறார். சபை அங்கத்தினர்கள் பொது மக்களால் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். இவர்களில்

பெருவாரியான ஸ்தானங்களைப் பெற்றுள்ள கட்சி யாரின் தலைவரைக்கொண்டே மந்திரி சபை அமைக்கக் கவர்னர் வேண்டுவார். இம்மந்திரிகளுள் தலைவராயிருப்பவர் பிரதம மந்திரி எனப்படுவர்.

5. நமது ராஜ்யத்தில் மேல்சபை, கீழ்சபை என இரண்டு சபைகள் இருக்கின்றன. இவற்றுள் மேல்சபை நிரந்தரமான சபை. இதன் அங்கத்தினர்களில் மூன்றில் ஒரு பகுதியினர் இரண்டாண்டுகளுக்கு ஒரு முறை விலகிவிடுவர். ஒரு பாதி அங்கத்தினர் ஸ்தல ஸ்தாபனங்களின் அங்கத்தினராலும், செகண்டரி பள்ளிக்கூடங்களுக்குக் குறையாத அந்தஸ்துள்ள பள்ளிக்கூடங்களில் வேலை செய்யும் ஆசிரியர்களாலும், பட்டதாரிகளாலும் தேர்ந்தெடுக்கப்பட்டவராவர். மூன்றிலொரு பகுதியினர் பொதுச்சபையால் அங்கத்தினர்களல்லாத தொகுதியினின்றும் தேர்ந்தெடுக்கப்பட்டவர். மீதமுள்ளவர்கள் கலை, விஞ்ஞானம் சமூக சேவையில் சிறந்த ஞானம் பெற்றவர்களிலிருந்தும் கவர்னரால் நியமனம் பெறுவர். இச்சபைக்கு நமது ராஜ்யத்தில் எழுபத்திரண்டு அங்கத்தினர் உள்ளனர்.

6. கீழ்சபை பொதுமக்கள் சபை என்றும் சொல்லப்படும். இதன் அங்கத்தினர்களைத் தேர்ந்தெடுத்தவர்கள் வயது வந்த பொதுமக்களே. இதன் அங்கத்தினர்கள் அறுபதுக்குக் குறையாமலும் ஐந்நூற்றுக்கு மேற்படாமலும் இருப்பர். இவர் ஐந்தாண்டுக் காலம் பதவி வகிப்பர்.

7. மத்திய அரசாங்கத்திற்கும் ராஜ்யங்களுக்கும் தனிப்பட்ட அரசாங்க இலாகாக்கள் உண்டு. வரு

மானம், விவசாயம், சுகாதாரம், கைத்தொழில், மராமத்து, கல்வி, நீதி ஸ்தல நிர்வாகம், கலால், விளம்பரம் போன்றவை இலாகாக்கள். இவ்விலாகாக்களை மந்திரி சபை கவனிக்கும். ஒவ்வொரு மந்திரியும் ஒன்று அல்லது இரண்டு இலாகாக்களைக் கவனிக்கலாம். இவர்களுக்கு உதவி செய்ய ஒவ்வோர் இலாகாவிலும் பலதரப்பட்ட உத்தியோகஸ்தர்கள் இருக்கிறார்கள். மந்திரிகள் மாகாணக் காரியங்களுக்கும், உத்தியோகஸ்தரின் சம்பளத்திற்கும், மற்றச் செலவுகளுக்கும் வருஷா வருஷம் எவ்வளவு பொருள் வேண்டும் என ஒரு திட்டம் போட்டுச் சட்டசபையின் அங்கீகாரத்தைப் பெறவேண்டும். பணத்தைப் பற்றிய காரியங்களனைத்தும் சட்ட சபையின் தீர்மானத்திற் கிணங்கியே நடைபெறும். வரிகளின் விவரம், அவற்றின் விகிதம் இவையனைத்தும் வரவு செலவுத் திட்டம் யோசனைக்கு வரும்போதுதான் தீர்மானிக்கப்படும். இவ்வரிகளிலிருந்து வரும் வருவாயைக் கொண்டு மந்திரிகள் அரசாங்கத்தை நடத்துவார்கள்.

8. விதிக்கப்பட்ட வரிகள் அவசியமானவையா நியாயமானவையா என்பனவும், அரசாங்கப்பணம் குடிகளின் க்ஷேமத்திற்கு ஏற்றவழிகளில் செலவிடப் படுகிறதா என்பதும், சட்டசபையில் நிறைவேறும் தீர்மானங்களும் சட்டங்களும் மாகாண நன்மைக்கு வேண்டியவைகளா என்பதும், அச்சபையின் அங்கத்தினர்களையும் மந்திரிகளையும் பொறுத்துள்ளன. போற்றத்தக்க அரசியலைப் பெற விரும்பும் பொது மக்கள், திறமையும் பொறுப்பும் சேவையில் ஊக்க

மும் உள்ளவர்களையே தேர்ந்தெடுத்த பின் அவர்களுக்கு முழு ஆதரவையும் காட்டி, அவர்களால் விதிக்கப்படும் அரசிறைகளைத் தவக்கமில்லாமல் செலுத்த வேண்டும்.

9. ராஜ்யங்களும் மத்திய அரசாங்கமும் தனிப்பட்ட முறையில் சில அரசாங்கக் காரியங்களைக் கவனிப்பதோடு சேர்ந்து கவனிக்கும் காரியங்களும் உண்டு.

10. இவ்விதமாக அரசாங்கமும் குடிகளும் வெவ்வேறாக இராமல், பரஸ்பரம் சம்பந்தப்பட்டு நிற்பது தான் பொதுஜன க்ஷேமத்துக்கு ஏற்ற ஆட்சியாகும். இவ்வாட்சியே தனிப்பட்ட மனிதருக்குச் சுயேச்சையைக் கொடுத்து ஜன சமூகத்தை மேலும் மேலும் ஓங்கச் செய்யும்.

பயிற்சி—12

i. விடை கூறு:—

1. ராஜ்யங்களில் எத்தனை பிரிவுகள் உள்ளன?
2. ராஜ்யங்களின் காரியங்களைக் கவனிப்பவர் யார்?
3. யாரைக்கொண்டு கவர்னர் மந்திரி சபை அமைக்கச் செய்வார்?
4. மேல்சபை அங்கத்தினர்கள் எவ்வாறு தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள்?
5. மந்திரிகள் அரசாங்கத்தை எவ்வாறு நடத்தி வருகின்றனர்?
6. பொதுஜன நன்மைக்கேற்ற ஆட்சி எது

ii. கோடிட்ட இடங்களில் ஏற்ற பதங்களை அமைத்து வாசி:—

1. கவனர்———நியமிக்கப்படுகிறார்?
2. மந்திரிகள் சாதாரணமாய்ச் சட்டசபையில் பெருவாரியான ஸ்தானங்களைப் பெற்றிருக்கும் ———தெரிந்தெடுக்கப்படுவார்கள்.
3. வரிகளிலிருந்து கிடைக்கும்———கொண்டு மந்திரிகள் அரசாங்கத்தை நடத்துவார்கள்.
4. குடிகள் செலுத்தும் வரிகளுக்கு———என்பது பெயர்.

பொது மக்கள் சபை அங்கத்தினர்களைத் தேர்ந்தெடுப்பர்.

இதன் எழுவாய், பயனிலை, செய்யப்படு பொருள்களைச்சொல்லு:—

தேர்ந்தெடுப்பர். இது பயனிலை.

இந்தச்செயலைச் செய்பவர் பொதுமக்கள்.- பொது மக்கள் என்பது எழுவாயாய் வந்துள்ளது. இத்தகைய வினை செய்வினை எனப்படும்.

இவ்வாக்கியத்தை அடியிற்கண்ட மாதிரியும் மாற்றலாம்:—

சபை அங்கத்தினர்கள் பொதுமக்களால் தேர்ந்தெடுக்கப் படுகிறார்கள்.

முன் வாக்கியத்தில் செய்யப்படு பொருளாயிருந்த அங்கத்தினர்கள் என்பது இதில் எழுவாயாய் வந்துள்ளது.

தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள் என்ற பயனிலை செயப்பாட்டுவினை எனப்படும்.

iii, இவ்வாக்கியங்களில் செய்வினையைச் செயப்பாட்டு வினையாக மாற்றி எழுது :—

1. திருவள்ளுவர் திருக்குறளை இயற்றினர்.

2. சங்கப்புலவர்கள் திருக்குறளைப் புகழ்ந்தனர்கள்.

3. பொது மக்கள் சட்டசபை அங்கத்தினர்களைத் தேர்ந்தெடுக்கிறார்கள்.

4. உலகினர் காந்தியைப் புகழ்கின்றனர்.

5. திண்ணன் சிவலிங்கத்தைக் கண்டான்.

iv. திருவள்ளுவரின் புகழைக்கேட்ட அரசனொருவன் அவருக்குத் திருவுருச் சிலையொன்று செய்து வைமைத்துக் கோயிலும் கட்டினான்.

இதிலுள்ள வினைச்சொற்கள் எவை? அவற்றுள் எவை முற்று வினை? எவை எச்ச வினை?

கட்டினான் என்பது முற்றுவினை.

புகழைக்கேட்ட என்பது எச்ச வினை.

அது அரசனொருவன் என்ற பெயர்ச் சொல்லோடு முடிகிறது. ஆகவே அது பெயரெச்சம்.

செய்தமைத்து என்பது எச்ச வினை.

அது கட்டினான் என்னும் வினைச்சொல்லோடு சேருகிறது. ஆகவே, அது வினை எச்சம்.

v. கீழுள்ள வாக்கியங்களிலிருக்கும் பெயரெச்சம் வினையெச்சம் இவற்றைச் சொல்லு :—

1. தேசிங்கு போர்க்களத்தை அடைந்து நவாபுவின் சேனையை அழித்து வெற்றியுடன் திரும்பினான்.

2. கிராம வாசிகள், வாங்கின கடனைத் திருப்பிக் கொடுக்கும் சக்தியற்றவர்களாகி, ஆஸ்தியை இழக்கிறார்கள்.

---

13. சர்க்கரை

நாணல்	தோகை	பொங்கு	தொட்டி
பாத்தி	சாறு	திரண்டு	ஆற
ஊன்று	உருளை	குழம்பு	பருப்பு
வெல்லம்	நசுக்கி	பதம்	சடங்கு
ஆலை	சக்கை	செதுக்கு	வார்த்து

1. நாம் உண்ணும் உணவுப் பொருள்களுள் சர்க்கரையும் ஒன்றாகும். இதை நாம் தனியாகவும் பண்டங்களோடு சேர்த்தும் சாப்பிடுகிறோம்; அல்லது பழம், தேன் இவற்றைப் புசிப்பதால் இவற்றிலுள்ள சர்க்கரையை உண்கிறோம். சர்க்கரை இனிப்பானது. ஆகையினாலேதான் அதை இளைஞர்கள் விரும்புகிறார்கள்.

2. நமக்கு அவசியமாகும் சர்க்கரையை நாம் பெரும்பாலும் கரும்பிலிருந்து பெறுகிறோம். கரும்பு நாணல் இனத்தைச் சேர்ந்த பயிர். அது உஷ்ணமான இடங்களிலேதான் பயிராகும். அதற்குத் தண்ணீரும் வேண்டும். அதைப் பயிர் செய்ய வயலை நன்றாக உழுது பாத்திகள் கட்டுவார்கள். பிறகு முதிர்ந்த கருப்பங் கழிகளை, ஒவ்வொரு துண்டிலும் ஒரு கணு இருக்குமாறு, துண்டுகளாக்குவார்கள். இத்துண்டுகளைப் பாத்திகளில் ஊன்றுவார்கள்.

இவற்றிலுள்ள கணுக்களில் துளிகள் இருப்பதால், இவை நட்ட சில நாட்களுக்குள் குருத்துவிடும்.

3. கரும்புப் பயிருக்கு அடிக்கடி தண்ணீர் பாய்ச்சவேண்டும். அப்போது அது குருத்துவிட்டுக் கொண்டு நல்லதாகப் பயிராகும். சுமார் எட்டு மாதங்களான பின் கரும்பு முதிர்ந்துவிடும். கருப்பஞ்சோலை



யில் பத்துப் பன்னிரண்டு அடி உயரம் உள்ள கருப்பங்கழிகள் அடர்ந்து வளர்ந்திருக்கும். இவ்வாறு முதிர்ந்த கருப்பங்கழிகளிலிருந்துதான் வெல்லம், சர்க்கரை இவற்றைச் செய்கிறார்கள்.

4. முற்றின கருப்பங் கழிகளை வெட்டி ஆலை யாடுமிடத்திற்குக் கொண்டு போவார்கள். அங்குத் தோகைகளைக் கழித்துவிட்டுக் கழிகளைத் துண்டுகளாக்குவார்கள். இத்துண்டுகளைக் கரும்பாலையில் கொடுத்துச் சாறு எடுப்பார்கள். இந்தப் படத்தி

துள்ள ஆலையைப் பார். அதில் ஒருவன் இரும்பு உருளைகளுக்கு நடுவில் கருப்பங் கழிகளைக் கொடுத்துக்கொண்டிருக்கிறான். மாடுகள் ஆலையைச் சுற்றும் போது உருளைகள் உருளுகின்றன. அப்போது அவை கருப்பங் கழிகளை நன்றாகக் கசக்கிப் பிழிந்து சாறு வேறாகவும் சக்கை வேறாகவும் பிரிக்கின்றன. இப்படிப் பிழிந்தெடுக்கப்பட்ட சாற்றை ஆலையின் கீழ் வைத்திருக்கும் பானையில் பிடிப்பார்கள். கருப்பஞ் சாற்றில் சர்க்கரை இருப்பதால் அது இனிப்பாயிருக்கும்.

5. இவ்வாறு பிழிந்தெடுக்கப்பட்ட கருப்பஞ் சாற்றைக் கொப்பறைகளில் ஊற்றிக் காய்ச்சுவார்கள். கருப்பஞ்சாற்றில் அசுத்தங்கள் இருக்கும். அவற்றை நீக்கச் சாறு பொங்கும்போது சுண்ணும்பைச் சேர்ப்பார்கள். அப்போது அழுக்குகளெல்லாம் மேலே திரண்டு வரும். அவற்றை மேலாக எடுத்தெறிந்து விடுவார்கள். கருப்பஞ்சாறு காயக் காயக் குழம்பாகிப் பாகுபோல மாறும். அந்தப் பதத்தில் பாகைத் தொட்டிகளில் ஊற்றி ஆறவிடுவார்கள்.

6. தொட்டிகளில் ஊற்றின பாகு முழுவதும் ஆறிக் கட்டி ஆவதற்கு முன் கட்டைகளால் அதைத் தேய்த்து உடைப்பார்கள். அப்போது அது சர்க்கரையாகும். இச்சர்க்கரையின் நிறம் பழுப்பு. பழுப்புச் சர்க்கரையே உடம்புக்கு ஆரோக்கியமானது. அதனாலேதான் சடங்குகளிலும் மருந்துகள் செய்வதிலும் நாம் அதை உபயோகிக்கிறோம். ஆனாலும், வெள்ளைச் சர்க்கரை இப்பொழுது அதிக

மாக உபயோகப்பட்டு வருகிறது. இதைக் காப்பி தேயிலை முதலிய பானங்களோடும், தின்பண்டங்களோடும் சேர்க்கிறோம்.

7. பழுப்புச் சர்க்கரையிலிருந்து வெள்ளைச் சர்க்கரையெடுக்க அதைத் தண்ணீரில் கரைத்துச் சில மருந்துகளைச் சேர்த்து நன்றாகக் காய்ச்ச வேண்டும். அவ்வாறு செய்தால் சர்க்கரை மிகவும் சுத்தமானதாகி, நிறமும் வெண்மையாகும்.

8. கரும்புப் பாகைத் தொட்டிகளில் ஊற்றிச் சர்க்கரை செய்வதற்குப் பதிலாக, வெல்லத்தின் உருவம் கொண்ட குழிகள் செதுக்கப்பட்டிருக்கும் அச்சுகளில் ஊற்றுவார்கள். பாகு இவற்றில் தங்கி ஆறியவுடன் கெட்டியாகி, அச்சு வெல்லமாகும். ருசியில் வெல்லத்திற்கும் பழுப்புச் சர்க்கரைக்கும் அதிகமான வேறுபாடு இல்லை.

9. ஜெர்மனி, ருஷியா ஆகிய தேசங்களில் பீட்ரூட்டு என்னும் கிழங்கிலிருந்து சர்க்கரை எடுக்கப்படுகிறது. இக்கிழங்குகளை வட்டமான துண்டுகளாக நறுக்கித் தண்ணீரில் போட்டுக் காய்ச்சுவார்கள். அப்போது இவற்றிலுள்ள சாறு பிரிந்து சக்கை வேறாகும். அச்சாற்றைக் காய்ச்சிக் குழம்பாக்கிச் சுத்தம் செய்து, சர்க்கரை செய்வார்கள். இந்தச் சர்க்கரை வெள்ளை நிறமானது.

10. சில வருஷங்களுக்குமுன் நம் நாட்டுக்கு வேண்டிய சர்க்கரை முழுவதும் இங்கே செய்யப்பட்டு வந்தது. பீட் ரூட்டுச் சர்க்கரை வரவே, நம் நாட்டில் சர்க்கரை செய்வது குறைபலாயிற்று. சமீ

பத்தில் ஏற்ற கரும்புகளைப் பயிர் செய்து, அவற்றி லிருந்து சர்க்கரை எடுப்பதற்கான முயற்சிகள் நம் நாட்டில் விரிவாக நடந்து வருகின்றன. பரந்த நிலங் களில் கரும்பைப் பயிரிட்டு அதிலிருந்துஅதிகமான சர்க்கரை செய்ய நெல்லிக்குப்பம், ஹோஸ்பேட்டை, மேல்பட்டி முதலிய இடங்களில் தொழிற்சாலைகள் அமைக்கப் பெற்றுள்ளன. இவைபோன்ற ஆலைகள் அதிகமாகி, சீக்கிரத்தில் சர்க்கரைத் தொழில் இலாப கரமான பெரிய தொழிலாகுமென எதிர்பார்க்கப் படுகிறது.

பயிற்சி—13

i. விடை சொல்லு:—

1. நம் நாட்டில் சர்க்கரை எதிலிருந்து எடுக்கப் படுகிறது?
2. பாத்தியில் நடும் கருப்பங்கழிகளில் ஏன் கணு இருக்கவேண்டும்?
3. கொப்பரையில் காயும் கருப்பஞ்சாற்றில் ஏன் சுண்ணாம்பு நீரை விடுகிறார்கள்?
4. பழுப்புச் சர்க்கரையிலிருந்து வெள்ளைச் சர்க் கரையை எப்படிச் செய்கிறார்கள்?
5. இவை இரண்டினுள் தேகசௌகரியத்திற்கு ஏற்றது எது? அதை நீ எவ்வாறு அறிகிறாய்?
6. சில தேசங்களில் வேறு எதிலிருந்து சர்க்கரை செய்யப்படுகிறது?

ii. இவ்வாக்கியங்களை ஒரே வாக்கியமாகச் சேர்த்து வாசி:—

1. சர்க்கரை இனிப்பானது. ஆகையினாலேதான் அதை இளைஞர்கள் விரும்புகிறார்கள்.

2. கரும்புக்கு உஷ்ணம் வேண்டும். அதற்குத் தண்ணீரும் வேண்டும்.

3. கருப்பஞ்சாற்றில் அசுத்தங்கள் கலந்து இருக்கும். அவற்றை நீக்கச் சுண்ணும்பைச் சேர்ப்பார்கள்.

iii. கீழுள்ள வாக்கியங்களிலிருக்கும் செயப்பாட்டு வினைகளைச் செய்வினைகளாக மாற்று:—

1. சர்க்கரை கரும்பிலிருந்து மனிதனுல் எடுக்கப் படுகிறது.

2 விதிக்கப்படும் வரிகள் சட்டசபையால் அங்கீ கரிக்கப்படுகின்றன.

3 ஜனங்கள் பஞ்சத்தால் பாதிக்கப்படுவார்கள்.

4. சிற்றரசர்கள் டில்லி பாட்சாவால் சிறையிலிடப் பட்டார்கள்.

iv. 1. கருப்பஞ்சாறு தொட்டியில் விழுகின்றது.

2. போன வருஷம் சட்டசபைத்தேர்தல் நடந்தது.

3. நாம் அதிவிரையில் உயர்வு பெறுவோம்.

தடித்த எழுத்திலுள்ள பயனிலைகளின் காலத்தைச் சொல்லு.

காலம் இறந்த காலம், நிகழ்காலம், எதிர் காலம் என மூவகைப்படும் ஓடினுன் = ஓடு + இன் + ஆன், விழு கின்றுன் = விழு + கின்று + ஆன், பெறுவோம் = பெறு + வ் + ஓம்.

விதி: இடையிலிருக்கும் பாகம் இடை நிலை. இடை நிலையே காலத்தைக் காட்டும்.

கீழுள்ள வினைச்சொற்களுக்குக் காலம் சொல்லு:—

வந்தது, குறையலாயிற்று, சேர்க்கிறோம், பிரிக்கின்றன, சென்று, தோன்றின, மணந்தான், தின்கின்றன, அழைத்து, கூறினான், இழக்கிறார்கள், செய்துள்ளார்கள்.

---

14. விஞ்ஞான விநோதங்கள்

நூற்றாண்டு	வாயு	இணைப்பு	ஒலிப்பு
விஞ்ஞானம்	திகைப்பு	சாத்தியம்	சிரமம்
புதுமை	வாரி	கருவி	கொடுமை
துறை	இதுகாறும்	சாதனம்	வெடிகுண்டு
அரியன	கம்பி	ஒளி	விஷமம்
	சிருஷ்டி	சகோதரத்துவம்	

1. சென்ற ஒரு நூற்றாண்டில் கண்டுபிடிக்கப்பட்ட விஞ்ஞானப் புதுமைகள் காரணமாய் உலகமே மிகவும் மாறியுள்ளது. பிரயாணம், சமாசாரம் அனுப்புதல், ஆடல் பாடல்களைப் பார்த்துக் கேட்டல் ஆகிய பல துறைகளிலும் பல மாறுதல்கள் ஏற்பட்டு உலகையே புதிதாக்கி உள்ளன.

2. சில நூற்றாண்டுகளுக்கு முன் வசித்தவரொருவர் இப்போது சாலையில் சிறிதுநேரம் நின்று பார்ப்பாராயின், அவருக்கு எல்லாம் மாறுபட்டனவாகவே தோன்றும். அக்காலத்தில் அவர் அரியனவாக மாட்டு வண்டிகளும், குதிரை வண்டிகளும் சாலைகளில் செல்வதைப் பார்த்திருப்பார். இப்பொழுதோ, வெளியில் வாயுவேகமாகச் செல்லக்கூடிய மோட்டார் வண்டிகளும், மோட்டார் பஸ்ஸுகளும் அவருக்குத்

திகைப்பை உண்டாக்கும். இவை ஏற்பட்டது காரணமாய் மனிதர் முன்னிலும் அதிகமாகப் பிரயாணம் செய்யத் தலைப் பட்டுத் தூரத்திலிருப்பவரைத் தெரிந்து கொள்ளக் கூடியவர்களா யிருக்கிறார்கள். மனிதர்களே யல்லாது சாமான்களுங்கூட மோட்டார் லாரிகளில் ஏறிச் செல்லுகின்றன.

3. இதுகாறும் தரையிலும் தண்ணீரிலும் மாத்திரம் பிரயாணம் செய்துவந்த மனிதன், இப்போது ஆகாயத்திலும் பறந்து செல்லுகிறான்; ஆதி காலத்திலிருந்து உயரப் பறந்து செல்லும் பறவை



ரயிட்டுச் சகோதரர்கள்

களைக் கண்டு பொறாமைகொண்ட மனிதன், அவைபோலத் தானும் பறக்க வேண்டுமென ஆவல் கொண்டு வந்திருக்கிறான். இதற்காகப் பலர் முயற்சி செய்து, தம் உயிரையும் இழந்துள்ளனர். இவர்கள் உழைப்புக் காரணமாய்த் தரையிலும் தண்ணீரிலும் செல்வதுபோல ஆகாயத்திலும் செல்ல, ஆகாய விமானங்கள் கண்டு பிடிக்கப்பட்டன. இப்புதுமைக்குக்

கடைசியில் காரணமாயிருந்தவர்கள், **ரயிட் ஸகோதரர்கள்**. இப்போது இவை வெகு வேகமாய் மனிதர்களையும் கடிதங்களையும் தூரதேசங்களுக்கு ஏற்றிச் செல்லுகின்றன.

4. பத்தொன்பதாம் நூற்றாண்டில் கண்டு பிடிக்கப்பட்ட புதுமைகளுள் கம்பியில்லாத் தந்தியும் ஒன்று. அதுவரை மின்சார சக்தியின் உதவியைக் கொண்டு கம்பிகள் மூலமாக அவசரமான சமாசாரங்கள் அனுப்பப்பட்டுவந்தன. எப்படியாதோர் இணைப்புமில்லாமல் ஒருவர் பேசுவதை மற்றொருவர் கேட்க இயலுகிறதோ, அப்படியே சமாசாரங்களையும் கம்பியில்லாமலே அனுப்பச் சாத்தியமாயிருக்க வேண்டுமென்றுணர்ந்து பலர் ஆராய்ச்சி செய்யலாயினர். கடைசியில் **மார்க் கோனி** என்பவர் இத்துறையில் வெற்றி பெற்று, அவ்வாறு சமாசாரங்களை அனுப்ப இயலுமென்பதை

மார்க்கோனி

நிரூபித்துக்காட்டினார். அதன் பின்பு, கடல்களில் வெகு தூரத்திற்குக் கம்பிகளை அமைத்துத் தந்தி மூலமாகச் சமாசாரம் அனுப்பும் அவசியம் நின்று விட்டது. கம்பியில்லாத்தந்தி ஏற்பட்டது முக்கியமாகக் கப்பல் பிரயாணம் செய்பவர்களுக்குச் சிறந்த உதவியாயிருக்கின்றது. ஆபத்து நேரும் காலங்களில்

அவர்கள் கம்பியில்லாத் தந்தி மூலமாக மற்றக் கப்பல்களுக்குச் சமாசாரத்தைத் தெரிவித்து உதவியைப் பெறுகிறார்கள்.

5. இதிலிருந்து மேலும் உண்டாகியுள்ள புதுமை ஆகாசவாணியாகும். இதுவரை சிறந்த நாடகங்களையும் சங்கீதத்தையும் பார்த்தும் கேட்டும் களிக்க விரும்பியவர்கள். அவற்றை நேராகச் சென்று பார்க்கவேண்டி யிருந்தது. இப்போது வெகு தூரத்தில் நடைபெறும் சங்கீதத்தையும் பிரசங்கத்தையும் மனிதர் தத்தம் இருப்பிடத்திலிருந்துகொண்டே கேட்கலாம். இதற்கு அவர்கள் ரேடியோ அல்லது ஆகாசவாணி எனப்படும் கருவியை அமைத்துக்கொள்ளவேண்டும். இவை ஏற்பட்டபின், தூரதேசங்களைப்பற்றிய சமாசாரங்கள் நமக்கு அப்போதைக்கப்போது கிடைப்பது எளிதாயிற்று.

6. நடிப்பு, மொழி இவற்றைச் சேர்த்து நாடகங்களையும் பலவிடங்களில் நடித்துக்காட்ட இயந்திரங்களைக் கொண்டு சினிமாப் படங்கள் தயாரிக்கப் படலாயின. இவற்றின் மூலமாய் ஜனங்கள் பல தேசங்களில் நடைபெறும் காட்சிகளையும் நேரில் பார்ப்பது சாத்தியமாயுள்ளது. உலகமெங்கும் இப் படங்கள் காட்டப்படும் கொட்டகைகள் பிரபலமாகி மக்களுக்குக் களிப்பை அளித்து வருகின்றன. இவற்றையும் ஆகாசவாணியையும் ஏற்றவழிகளில் உபயோகித்தால், இவை ஜனங்களின் நிலைமையை உயர்த்தப் பெரிய சாதனங்களாகும். சமீபத்தில். பேசுகிறவர்களையும் நடிக்கிறவர்களையும் நேராகவே பார்க்கக் கூடிய புதுமையும் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

ஜே. ஸி. போஸ்

பி. ஸி. ரே

7. இவ்வாறு ஆராய்ச்சி செய்து அறிவைப் பெருக்க நம் நாட்டிலும் பலர் உழைத்து வந்திருக்கின்றனர். வங்காளத்தைச் சேர்ந்த ஸர். ஜே. ஸி. போஸ் என்பவரின் ஆராய்ச்சிகாரணமாய்த் தாவரங்களுக்கு உயிரும் உணர்ச்சியும் உண்டென்று தெரியலாயிற்று. அதுபோலவே அம்மாகாணவாசியாகிய ஸர். பி. ஸி. ரே என்பவர் இரசாயனத் துறையில் சிறிய ஆராய்ச்சிகள் செய்துள்ளார். நம்மாகாணத்திலும் ஸர். ஸி. வி. ராமன் என்ற பெரியார் ஒளி, ஒலி இவற்றைப் பற்றியும் பல புதுமைகளைக் கண்டு பிடித்து உலகப் பிரசித்தி பெற்று விளங்குகிறார்.

8. இப்புதுமைகள் பலவற்றையும் கண்டு பிடிக்க உழைத்தவர்கள் மக்களின் நன்மைக்

காகத் தங்கள் சிரமத்தையும் உயிரையும் கருதாமல் உழைத்து வந்ததால், நமக்கு இவை கிடைக்கலாயின. இவைகளை நம் ஜனங்களின் க்ஷேமத்தையும் சந்தோஷத்தையும் பெருக்குவதற்கு உபயோகிப்பதே நாம் அவர்களுக்குக் காட்டும் நன்றியாகும். அப்படியிருக்க, அப்பெரியோர்கள் எண்ணியதற்கு மாறாக மக்களை அழிப்பதற்கும் துன்புறுத்துவதற்கும் இவற்றை உபயோகிப்பது கொடுமையாகும். ஆகாய விமானங்களில்சென்று வெடி குண்டுகளை வீழ்த்தியும், விஷக்காற்றை அனுப்பியும் யுத்தங்களில் மனிதரை அழிப்பது விசனிக்கத் தக்கது. இப்புதுமைகள் அக்கொடிய காரியங்களுக்காகக் கண்டுபிடிக்கப்படவில்லை. எல்லாச் சிருஷ்டிகளிலும் உயர்ந்த மனிதன், இப்புதுமைகள் காரணமாய் உலக முழுவதும் ஒரே குடும்பம் போலாகிவிட்டது என்பதையுணர்ந்து, சகோதரத்துவம் பாராட்டி, சமாதான நிலையில் வாழ்வதே அழகாம்.

ஸி. வி. ராமன்

பயிற்சி—14

i. விடை சொல்லு:—

1. உலகம் இப்போது பெரிதும் மாறியிருப்பதற்குக் காரணம் யாது?
2. சென்ற நூற்றாண்டில் ஏற்பட்டுள்ள பிரயாணச் சாதனங்கள் எவை?
3. கம்பியில்லாத் தந்தி கண்டுபிடித்தவர் யார்? அது கப்பல்களுக்கு எவ்வாறு உதவுகிறது?
4. ஆகாசவாணி நமக்கு எவ்வாறு பயன்படுகிறது?
5. இப்புதுமைகளை நாம் எவ்வகையில் உபயோகிக்கலாகாது?

ii. இதுகாறும் தண்ணீரிலும் தரையிலும் மாத்திரம் பிரயாணம் செய்துவந்த மனிதன், இப்போது ஆகாயத்திலும் பறந்து செல்கிறான்.

இதை இரண்டு தனி வாக்கியங்களாகப் பிரித்து எழுது.

iii. 1. இப்புதுமைகள் கொடிய காரியங்களுக்காகக் கண்டு பிடிக்கப்படவில்லை.

2. இப்புதுமைகள் நல்ல காரியங்களுக்காகக் கண்டு பிடிக்கப்படுகின்றன.

(1) எதிர் மறை வாக்கியமாகும். (2) உடன்பாட்டு வாக்கியமாகும்.

கீழுள்ள வாக்கியங்களை உடன்பாட்டு வாக்கியங்களாக மாற்று:—

1. வில் வித்தையில் திண்ணனுக்கு நிகர் யாருமில்லை.
2. திண்ணன் எவ்வளவோ செய்தும் இரத்தம் நிற்கவில்லை.

3. மனிதர் சாகபக்ஷிணிகள் என்பதில் சந்தேக மில்லை.

4. காந்தி பொய்யே உரைப்பதில்லை.

vi. மார்க்கோனி கம்பியில்லாத் தந்தியைக் கண்டு பிடித்தார். இதில் எழுவாய் எது? பயனிலை எது? பயனிலையின் எண் என்ன? இவ்வாறு மரியாதைக் காக ஒருமை எழுவாய்களோடு பன்மைப் பயனிலை களை உபயோகிப்பதுண்டு.

வாக்கியங்களில் அடைப்புக் குறிகளுக்குள் கொடுத் திருக்கும் வார்த்தைகளைக் கொண்டு கோடிட்ட இடங் களில் பன்மைப் பயனிலைகளை அமைத்து வாசி :—

1. காந்தி இந்தியாவுக்கு——(திரும்பு)
2. சிவபெருமான் திண்ணன் முன்—(தோன்று)—
3. குசேலர் துவாரகையை——(அடை)

---

15. தீர்த்த யாத்திரையின் நோக்கம்

தீர்த்தம்	கருத்து	சாது	ஆத்மா
யாத்திரை	தூய்மை	கவலை	ஆசாரம்

குறிப்பு :—இது ஸ்ரீ தர்மத்தில் வெளியான கட்டுரை யிலிருந்து எடுக்கப்பட்டுள்ளது. இதை மௌன மாகப் படித்து, அடியில் கொடுத்திருக்கும் கேள்விகளுக்கு விடை சொல்லு :—

நம் நாட்டிலுள்ள ஒவ்வொருவரும் தீர்த்த யாத் திரை செய்யவேண்டுமென்று நம் முன்னோர் ஒரு கடமை ஏற்படுத்தி யிருக்கின்றனர். இதன் கருத் தென்ன? அழகிய நதிகள், மலைகள், கடற்கரைகள்

ஆரோக்கியமான ஜல ஊற்றுக்கள் முதலிய இயற்கை அழகு பொருந்திய இடத்திலேயே நம் தீர்த்தங்களும் புண்ணிய ஸ்தலங்களும் உள. அங்கு யாத்திரை செய்வதால், இயற்கைப் பொருள்களின் அழகும், சுத்தமும் நமக்கு இன்பம், மன விரிவு ஆரோக்கியம் முதலியவற்றை அளிக்கும். தவிரவும், அந்த ஸ்தலங்களில் மனத் தூய்மையும் ஈசன் அருளும் பெற்ற சாதுக்கள் பலர் கூடுவர். அவர்களது நிலைமையைக் காணும்போதே அது நம் மனத்திலும் அவ்விதத் தூய்மை பெறும் முயற்சியை எழுப்பும். ஆகவே, மனம் சாதாரண உலகக் கவலைகளை விட்டு ஈசன் நினைவிலும், அவனை அடையும் வழிகளிலும் வேர் ஊன்றும்; ஆத்ம அழகும் சரீர ஆரோக்கியமும் வளரும். பல நாடுகளிலுள்ள பழக்கவழக்கங்கள், நம்பிக்கைகள் நியமங்கள் முதலியவற்றைக் கண்டு பழகும்போது நமது மனம் விரிவடையும். ‘நம் ஆசாரங்களில் எவை ஆத்ம சாதனத்துக்கு அவசியமானவை? எவை கால தேசத்துக்குத் தக்கபடி மாறக் கூடியவை?’ என்னும் தெளிவும் மனத்தில் அமையும். இவ்வாறெல்லாம் யாத்திரை செய்து நலம் பெறுவதற்காகத் தீர்த்த யாத்திரை ஏற்படுத்தினார்கள்.

பயிற்சி—15

i. எதிர்ப்பதங்கள் கூறு:—

புதுமை	கிராமம்	அலசியம்
சத்தியம்	கொடுமை	களிப்பு

ii. கேள்விகள்:—

1. நாம் செல்லும் தீர்த்தங்களும் புண்ணிய ஸ்தலங்களும் எப்படிப்பட்ட இடங்கள்?

2. அங்குள்ள காட்சிகள் நமக்கு எவற்றைப் பயக்கும்?
3. அவ்விடங்களில் வசிப்பவர்கள் யாவர்?
4. அவர்கள் சேர்க்கையால் நமக்கு என்ன நன்மை ஏற்படும்?
5. தீர்த்த யாத்திரையால் நம் மனம் எவ்வாறு விரிவடையக் கூடும்?

iii. தீர்த்தம் + யாத்திரை = தீர்த்த யாத்திரை, இவ் வார்த்தைகளையும் இம்மாதிரியே பிரித்துக்காட்டு :—

பழரசம்— மரவேர்—
வான நிறம்— சமாதான வழி—

இவற்றில் இரண்டு வார்த்தைகள் சேரும்போது முதல் வார்த்தையின் இறுதியில் எழுத்து மாறுவதைக் கவனி.

---

16. பால கங்காதர திலகர்

அடிகோலியவர்	அபிப்பிராயம்	வெளியிடு	அண்டை
முதன்மை	பத்திரிகை	மகாநாடு	நீத்தனர்
இலக்கணம்	பிரசுரம்	சொற்பொழிவு	சம்பவம்
கணிதம்	ஆட்சேபனை	மிதவாதி	ஆழ்ந்து
நூல்	தீவாந்திரம்	புரட்சி	பற்று
தேர்ந்தவர்	சிறை	அழுத்தம்	சீர்திருத்தம்
இலக்கியம்	ரகஸ்யம்	அதிர்ஷ்டம்	வற்புறுத்து
பிரியம்	அருமை	பிரார்த்தி	எடுத்துக்காட்டு

1. காந்தியைப் பற்றிப் படித்தபோது, அவருக்கு முன் திலகர் இந்திய மக்களின் தலைவராய் விளங்கினர் என்பதை அறிந்தோம். இப்போது

இந்திய சமூகத்தில் அரசியல், பொருளாதாரம், கல்வி இத்துறைகளில் ஏற்பட்டிருக்கும் உயர்வுக்கு அடிகோலியவர்களுள் திலகர் முதன்மையான ஸ்தானம் வகிப்பவராவர். அக்காலத்தில் அவரைப்போன்ற பெரியார் பலர் தம் கஷ்டங்களைப் பாராட்டாமல் தேச நன்மைக்காகப் பாடுபட்டு வந்த காரணத்தினலேதான் நாம் மேன்மையை அடைந்துள்ளோம்.

2. **பால கங்காதர திலகர், இரத்தினகிரி** வாசியாகிய **கங்காதர இராமச்சந்திர திலகருக்கு** 1857-ஆம் வருஷம் ஜூலை மாதம் 23-ஆம் தேதி புதல்வராய்ப் பிறந்தார். திலகரின் தந்தையார் கல்வித் துறையில் உத்தியோகம் செய்து இலக்கண நூலிலும் தேர்ந்தவரெனப் பெயர் பெற்றிருந்தார். திலகருக்கு இலக்கிய ஆராய்ச்சியிலும் கணித சாஸ்திரத்திலும் இருந்த திறமை அவர் தந்தையாரிடமிருந்தே அவருக்கு உண்டாயிற்று எனச் சொல்லலாம்.

திலகர் கல்வி பயின்று தமது இருபதாம் பிராயத்தில் கவுரவப் பட்டத்தோடு பி.ஏ. பரீக்ஷைக்குப்படித்து, அதிலும் வெற்றி பெற்றார்.

3. வக்கீல் வேலைக்கு வேண்டிய பயிற்சியையும் திலகர் பெற்றிருந்தார். அவ்வக்கீல் வேலையைச் செய்து திரண்ட திரவியத்தையும் நிகரற்ற புகழையும் இவர் பெற்றிருக்கலாம். ஆனால், இவர் மனம் அத்துறையில் செல்லவில்லை. தமது தாய் நாட்டில் கல்வி தாழ்ந்திருப்பதை அறிந்த இவர், அதை உயர்த்தி மக்களை முன்னேற்றமடையச் செய்வது தமது கடமையென எண்ணினார். இதற்காக இவர் தம் கலாசாலைத் தோழரான அகர்கர் என்பவரைச் சேர்த்துக்கொண்டு, பூனாவில் தக்காணக் கல்விச் சங்கம் என்னும் ஒரு சங்கத்தை ஸ்தாபித்து, அதன் ஆதரவில் ஓர் ஆங்கிலப் பள்ளிக்கூடத்தைத் திறமையுடன் நடத்தினார். இப்பள்ளிக்கூடம் சீக்கிரமாகப் பெருகி வளரலாயிற்று. அதுவே இப்போது பூனாநகரில் சிறப்புற்று விளங்கும் பெர்கூஸன் கல்லூரியாயிற்று. இக்கல்லூரியில் நம் நாட்டுப் பெரியாராகிய கோகலேயும் பிறகு சேர்ந்து கொண்டார்.

4. இவ்வாறு தக்காணக் கல்விச் சங்கத்தில் உழைத்து வந்த காலத்தில் அதன் அங்கத்தினர்களுக்குள் அபிப்பிராய பேதமேற்படவே, திலகர் அதிலிருந்து நீங்கினார். நீங்கிய திலகர், தேசத்தொண்டில் தம் கவனத்தைச் செலுத்தி உழைக்க முன் வந்தார். அதற்காக இவர் பொது மக்களிடையே தேச உணர்ச்சியையும், பேரறிவையும் பரவச் செய்ய விரும்பிக் கேசரி, மராத்தா என்ற பத்திரிகைகளை நடத்தலானார். அப்பத்திரிகைகள் இந்தியாவில் பிரசுரமாகி வந்த பத்திரிகைகளுக்குள் சிறந்தவையெனப் பலராலும் மதிக்கப்பட்டு வந்தன.

5. தேசத் தொண்டில் ஈடுபட்டு உழைத்து வந்த திலகருக்குத் துன்பங்கள் ஒன்றின்மேலொன்றாய் வரலாயின. இவர் தாம் நடத்திய பத்திரிகைகளில் ஆட்சேபனைக்கிடமான விஷயத்தைப் பிரசுரித்தார் எனக் குற்றஞ்சாட்டப்பட்டுத் தீவாந்திர சிக்ஷை விதிக்கப்பெற்றார். இக்காலத்திலேதான் இவர் தாம் மிகவும் பாராட்டி வந்த பகவத்கீதை என்னும் நூலை விரிவாக ஆராய்ச்சி செய்யலானார். இவ்வாராய்ச்சியின் பலனாய்க் கீதா ரஹஸ்யம் என்னும் ஓர் அருமையான நூலையும் வெளியிட்டார்.

6. தேச முன்னேற்றத்தில் ஊக்கம் மிகுந்த திலகர். அதற்கெனப் பாடுபட்டு வரும் காங்கிரஸ் மகா சபையில் சேர்ந்து உழைக்க முன் வந்தார். அதன் மகாநாடுகளில் இவரது பிரசங்கத்தைக் கேட்டுப் புகழாதவரேயில்லை. இவருடைய சொற்பொழிவுகள், சொற்சுவை, பொருட்சுவை கூடிக் காரணங்கள் நிறைந்தனவாய் இருக்கும். அதிலிருந்தே நம் தேசம் சுய ஆட்சி பெறவேண்டுமென்ற ஆவல் இவருக்கு இருந்து வந்தது. இது பெரும்பாலான மிதவாதிகளுக்குப் புரட்சியாகத் தோன்றியதால், காங்கிரஸ் மகாசபையில் பிளவு ஏற்பட்டு அது காரணமாய் இவரும் இவரைச் சேர்ந்தவர்களும் சிறிது காலம் விலகியிருந்தனர்.

7. இந்திய அரசியல் விவகாரங்களில் பிளவை நீக்க அனிபெஸண்டு என்னும் அம்மையாரைப் போன்ற பலர் முயற்சி செய்த காரணத்தால், திலகரும் மற்றவர்களும் காங்கிரஸ் மகா சபையில் திரும்பவும் கலந்து கொண்டு உழைக்கலானார்கள். 1919-ஆம் வருஷத்து

இந்திய அரசாங்கச் சட்டம் ஆலோசனையிலிருக்கும்போது திலகர் இங்கிலாந்துக்குச் சென்று இந்தியாவின் வழக்கை ஆங்கிலேயர் முன் திறமையாகவும், அழுத்தமாகவும் எடுத்துக் கூறினர். துரதிர்ஷ்டப் பயனாய் இவர் உழைப்பின் பயனைத் தாமே கண்டு களிக்கவும், மேலும் தம் நாட்டுக்கும் மக்களுக்கும் நன்மைகளைச் செய்யவும் இடமில்லாமல் போயிற்று.

8. 1920-ஆம் வருஷம் ஜூலை மாதத்தில் தமது அறுபத்து ஐந்தாம் பிராயத்தில் திலகர் நோய்வாய்ப் பட்டனர் என்ற செய்தி தேசமெங்கும் பரவியது. மக்கள் கவலை கொண்டு, இவருக்கு நோய் தீரவேண்டுமென ஆண்டவனைப் பிரார்த்தித்தார்கள். மகாத்மா காந்தி போன்ற பெரியார்கள் இவர் அண்டையில் போய்ச் சேர்ந்தார்கள். இந்நிலைமையில் அம்மாதம் 31-ஆம் தேதி திலகர் உயிர் நீத்தனர். இச்சம்பவம் நாட்டினரை ஆறாத் துயரத்திலாழ்த்தியது. நாடெங்கும் ஜனங்கள் தங்கள் துக்கத்தைக் காட்டக் கூட்டங்கள் கூட்டித் திலகரைப் புகழ்ந்தார்கள்.

9 இவ்வாறு சிறந்து விளங்கிய திலகர், தேசப் பற்றுக்கொண்டவராய் இருந்ததோடு, மதப்பற்றும் சமூகப் பற்றும் மிகுந்தவராயிருந்தார். ஆனால் இரவது பற்று குறுகலானதன்று. இத்துறைகளில் சமூகத்தில் பல சீர்திருத்தங்கள் ஏற்படவேண்டுமென்பதை உணர்ந்து வற்புறுத்தியுள்ளார். இவ்வாறு இவர் பல துறைகளிலும் இந்திய மக்களுக்குத் தலைவராயும் எடுத்துக்காட்டாயும் விளங்கி வந்த காரணத்தாலேதான், ஜனங்கள் இவரை லோகமானியர் என்னும் பட்டமிட்டு வழங்கி வந்தார்கள். இவரது

தைரியம், திடமனம், புகழ் இவை காரணமாய் இவரை **மஹாராஷ்டிர சிங்கம்** என்றும், மஹாராஷ்டிர நாட்டின் **முடிசூடா மன்னர்** என்றும் வழங்கினர்.

பயிற்சி—16

i. விடை சொல்லு:

1. வக்கீல் வேலைக்குப் பயிற்சிபெற்ற திலகர், ஏன் அதை நாடவில்லை?
2. இவர் தம் எண்ணம் நிறைவேற என்ன செய்தார்?
3. மக்களிடையில் தேச உணர்ச்சியை உண்டாக்க இவர் செய்த முயற்சி யாது?
4. காங்கிரஸ் மகாசபையை விட்டு இவர் ஏன் நீங்கினர்?
5. திலகர் மதம், ஆசாரம் இவற்றில் கொண்ட பற்று எவ்வகையானது?
6. திலகருக்கு இந்திய மக்கள் இட்ட சிறப்புப் பெயர்கள் யாவை?

ii. கோடிட்ட இடங்களில் கீழே கொடுத்திருக்கும் வார்த்தைகளில் ஏற்றதை அமைத்து வாசி :—

1. காந்தி தீண்டாமையை ஒழிக்க——.
2. சுதேசமித்திரன் பத்திரிகை சென்னையில்——
3. நான் சொன்ன விஷயத்தை———வைத்துக் கொள்.
4. தேசிங்கு இறந்ததைக் கேட்ட அவன் மனைவி உயிர்——.
5. சிங்கார வனத்திற்குள் போய்ப் பார்ப்பதற்கு யாதோர்———இல்லை.

6. காந்தி சகோதரத்துவம் ஆரம்பிய வாழ்க்கைக்கு ——விளங்குகிறார்.

ஆட்சேபனை	துறந்தான்	அடிகோலினார்
எடுத்துக்காட்டாக	இரகசியமாக	பிரசுரமாகிறது

iii. கீழுள்ள வாக்கியங்களை இரண்டு தனி வாக்கியங்களாகப் பிரித்து எழுது:—

1. திலகரைப் போன்ற பெரியார்கள் தேச நன்மைக்காகப் பாடுபட்டு வந்ததாலேதான் நாம் மேன்மையை அடைந்துள்ளோம்.
2. சங்கத்தின் அங்கத்தினர்களுள் அபிப்பிராய பேதமேற்படவே, திலகர் அதிலிருந்து விலகினார்.
3. திலகர் மதப்பற்றுள்ளவரேனும், அவரது பற்று குறுகியதன்று.

iv. இந்தியரனைவரும் திலகரைப் புகழ்ந்தனர்—இதை இல்லையென முடியும்படி மாற்றி வாசி.

v. 1. திலகர் இங்கிலாந்துக்குச் சென்றார்.
2. இந்தியர் திலகரைப் புகழ்கின்றனர்.
3. கேசரி திலகரால் நடத்தப்பட்டது.
அகர்கர் திலகரோடு வேலை செய்தார்.
கோகலே திலகருடன் சேர்ந்து உழைக்கலானார்.
4. திலகருக்குத் துன்பங்கள் பல நேர்ந்தன.
5. திலகரிடமிருந்து, காந்தி விஷயத்தை அறிந்து கொண்டார்

திலகரில் சிறந்தவர் யார்?

6. திலகரது பற்றுக் குறுகியதன்று.
திலகருடைய மனம் தைரியம் வாய்ந்தது.

7. திலகரிடத்தில் பல நற்குணங்கள் விளங்கின.
திலகர் பூனாவில் வசித்தார்.

சிறையிலிருந்து வெளிவந்ததும் திலகர் தம் தொண்டின்கண் கவனத்தைச் செலுத்தினார்.

8. திலகரே, நீர் செய்வது சரியோ? சொல்லும்.
இவ்வாக்கியங்களில் திலகர் என்னும் பதம் பொருளில் வேறுபட்டு வருவதைக் கவனி.

இவ்வாறு சொல் வேறுபடுவதற்கு வேற்றுமை என்பது பெயர். வேற்றுமைகள் எட்டு வகைப் படும். அவற்றின் உருபுகள் கீழே தரப்பட்டுள்ளன :—

வேற்றுமைகள்	உருபுகள்
முதல் வேற்றுமை	உருபு இல்லை
இரண்டாம்	ஐ
மூன்றும்	ஆல், ஓடு, உடன்
நான்காம்	கு
ஐந்தாம்	இல், இருந்து, நின்று
ஆறும்	அது, உடைய
ஏழாம்	இல், இடத்தில், கண்
எட்டாம்	கூப்பிடுதல், ஆ, ஏ என்ற எழுத்துக்கள் சேரும்.

17. மதுவிலக்கு ஆரம்பம்

தவம் கிட	மெய்ம்மறந்து	திண்டாடு	கோரமான
விலக்கு	நரர்பு	பரிகசி	மானம்
அழல்	தொகுதி	சந்தை	சந்ததி
பாவம்	தளர்ந்து	பிதற்று	பலவீனர்
சுறுசுறுப்பு	சொத்து	தள்ளாடி	தடை

மதுவிலக்குத் திட்டம் மகாத்மா காந்தியடிகளின் நிர்மாணத் திட்டங்களில் மிக முக்கியமானது. இது நமது நாட்டு ஏழை மக்களை வாழவைக்கும் ஒரு பெருந்திட்டம். 1937-ஆம் வருடம் ஸ்ரீ ராஜ கோபாலாச்சாரியார் அவர்கள் சென்னை ராஜ்யத்தின் பிரதம மந்திரியாய் விளங்கியபோது இதனைத் தொடங்கி வைத்தார். இப்பொழுது நமது தேசத்தில் பெரும்பான்மையான மாகாணங்களில் இம்மது அரக்கன் விழுந்து விட்டான்.

நமது ராஜ்யத்தில் மதுவிலக்கு ஆரம்பித்த நிகழ்ச்சியைச் சித்தரிக்கும் வகையில் அமைந்துள்ளது பின்வரும் உரையாடல்.

உரையாடல்

பாத்திரங்கள்: *சங்கரன், அரங்கன்.*

இடம்: *வட ஆர்க்காடு ஜில்லாவில் ஒரு கிராமம்.*

காலம்: *1939-ம் வருடம் ஒரு நாள் காலை.*

சங்கரன்:—(ஹிந்துஸ்தான் பத்திரிக்கையைப் படித்துக் கொண்டிருக்கையில்) அரங்கா என்னடா? இது?

அரங்கன்:—என்ன சங்கரா?

சங்:—"நாம் வெகுகாலமாகத் தவம் கிடந்து காத்திருந்தது வந்துவிட்டது" என்று ராஜாஜி கூறியதாகப் பத்திரிகையில் எழுதப்பட்டிருக்கிறதே!

அரங்:—ஐரோப்பிய யுத்தமா? உலக யுத்தமா?

சங்:—நன்றாய்ச் சொன்னாய்! யுத்தத்திற்கு யாராவது காத்திருப்பாரா? அதற்குத் தவந்தான் செய்வாரா?

அரங்:—என்னவென்று தான் படித்துப் பார்க்கலாமே?

சங்:—ஓஹோ! 'மதுவிலக்குத் திட்டம் வந்துவிட்டது' என்று எழுதப்பட்டிருக்கிறது.

அரங்:—அப்படியென்றால் என்ன?

சங்:—1939-ஆம் வருஷம் அக்டோபர் மாதம் 1-ஆம் தேதியிலிருந்து நமது வட ஆர்க்காடு ஜில்லாவில் மதுவிலக்குச் சட்டம் அமுலுக்கு வந்திருக்கிறது. கள்ளுக் கடைகளையெல்லாம் மூடிவிட வேண்டும்; யாரும் இனி கள் குடிக்கக் கூடாதாம்.

அரங்:—ஐயோ! பாவம்! ஏழைகள் என்ன செய்வார்கள்? ராஜாஜிக்கு அவர்கள் மீது என்ன கோபம்?

சங்:—என்னடா இப்படிச் சொல்லுகிறாய்? ராஜாஜி அவர்கள் நன்மைக்காகவல்லவா இம்மாதிரி செய்திருக்கிறார்?

ஆர் :—அப்படியானால், உன் அபிப்பிராயத்தில் மதுபானம் கெட்டதா?

சங் :—சந்தேகம் என்ன?

ஆர் :—அது எப்படிக் கெட்டது? கள் குடிப்பவர்களுக்குச் சுறுசுறுப்பும் பலமும் உண்டாகின்றன. கஷ்டப்பட்டு வேலை செய்கிறவர்கள், கள் குடித்தபின் மெய்மறந்து தூங்குகிறார்கள்.

சங் :—அப்படித்தான் பலரும் எண்ணிக் குடிவெறிக்கு இரையாகின்றனர். பார்ப்பதற்குக் குடி சுறுசுறுப்பை உண்டாக்குவதைப் போலத் தோன்றினாலும், அது உண்மையில் பலத்தைக் குறைத்து, நரம்புத்தொகுதிகளின் வலிமையைக் குறைக்கின்றது.

ஆர் :—அப்படியா? அதனாலேதான் குடிகாரர்கள் குடித்த சிறிது நேரத்திற்குப் பின் மெய் தளர்ந்து இருக்கிறார்களோ?

சங் :—ஆம்: குடியின் கெடுதி இதோடு நின்று விடவில்லை.

ஆர் :—இன்னும் என்ன?

சங் :—குடிக்கப் பழகினவன் நாளடைவில் தன் சொத்தையே இழக்கிறான்; கிடைக்கும் பணத்தைக் குடியில் செலவழித்துவிட்டுப் பெண்டு பிள்ளைகளைச் சோறு இல்லாமல் திண்டாட விடுகிறான்.

ஆர் :—ஆம்; சங்கரா, நானும் அதைப் பார்த்திருக்கிறேன். குடிகாரர்களின் குடும்பங்கள் பசியால் வருந்துகின்றன. குடிக்காரர்கள் பெண்மணிகளையும் வருத்துகிறார்கள்.

சங் :—இன்னும் சொல்லுகிறேன் கேள் : குடிகாரர்கள் மெய்மறந்து இருக்கும்போது அவர்களைப் பிறர் பரிகசிக்கும்படியாக நடந்து கொள்கிறார்கள்; சில சமயங்களில் பெருங் குற்றங்களையும் செய்துவிடுகிறார்கள்.

அரங் :—நீ சொல்வது சரிதான். சந்தை கழிந்த பின் ஜனங்கள் குடித்துவிட்டு வாயில் வந்ததைப் பிதற்றிகொண்டு தள்ளாடிச் சாலையில் போவதும், சிலர் நடக்கவும் இயலாதவராய்ச் சாலையில் கிடந்து புரளுவதும் கோரமான காட்சியாயிருக்கும்.

சங் :—இவற்றையெல்லாம் தெரிந்துகொண்டே நீ ராஜாஜியின் மீது குறை கூறினாய்!

அரங் :—அல்ல, சங்கரா, நீ சொல்லச் சொல்லத் தான் குடியின் கெடுதிகள் என் நினைவுக்கு வந்தன.

சங் :—குடிகாரர்கள் தங்கள் சொத்தையும் சுகத்தையும் மனத்தையும் கெடுத்துக்கொள்வதோடு, தங்கள் சந்ததிகளையும் பலவீனர்களாக்கி விடுகிறார்கள்.

அரங் :—நீ சொல்வதைப் பார்த்தால், மதுவிலக்குச் சட்டம் மிக்க நன்மை பயக்கக்கூடுமென்றே தோன்றுகிறதே! அதனாலேதான் ஜனங்கள் ராஜாஜியை "மது அரக்கனை வீழ்த்திய மன்னர்" என்று சொல்லுகிறார்கள். இது நம் ஜில்லாவிற்கு மாத்திரமா; மாகாணம் முழுவதும் உண்டா?

சங் :—நம் ஜில்லாவிற்கு முன்பே சேலம், கடப்பை, சித்தூர் ஜில்லாக்களில் இந்தச் சட்டம் அமுலுக்கு வந்து அதிக நன்மையைப் பயந்துள்ளது. அடுத்த வருஷத்தில் அந்தச் சட்டத்தை இன்னும்

பத்து ஜில்லாக்களில் அமுலுக்குக் கொண்டுவரப் போகிறார்கள். சீக்கிரத்திலேயே மாகாணம் முழுவதும் இது பரவி விடும்.

அரங்:—எல்லா ஜில்லாக்களிலும் ஒரே சமயத்தில் ஏன் இதை அமுலுக்குக் கொண்டுவரக் கூடாது?

சங்:—அது கஷ்டமான காரியம். முதலாவது, சட்டத்தைச் சரியாக அமுலுக்குக் கொண்டுவர ஆரம்பத்தில் பல ஆட்கள் தேவையாயிருப்பார்கள். இரண்டாவது, கள் முதலிய பானங்களிலிருந்து கிடைக்கும் வருவாய்க்கு ஈடு செய்து கொள்ளவும் வேண்டும்.

அரங்:—இப்போது தான் தெரிந்துகொண்டேன். மதுவிலக்கு சீக்கிரத்தில் நாடெங்கும் பரவ நாம் உழைக்கக் கடமைப்பட்டுள்ளோம்.

சங்:—ராஜாஜியின் புகழ் இதனால் என்றும் சிறந்து விளங்கும் அல்லவா?

அரங்:—தடையென்ன! அவர் இன்னும் எத்தனை எத்தனையோ அரிய காரியங்களை நமக்குச் சாதித்துக் கொடுப்பார் என்பது உறுதி.

சங்:—அரங்கா! நாம் சற்று வெளியில் உலாவி வரலாம்.

அரங்:—சரி புறப்படு; போகலாம்.

(இருவரும் வெளியில் போகின்றார்கள்)

பயிற்சி—17

i. விடை சொல்லு:—

1. மதுபானத்தால் ஒருவருக்கு நேரும் தீமைகள் யாவை?
2. மதுவிலக்குச் சட்டத்தைப் பெண்கள் ஏன் மகிழ்வுடன் ஆதரிக்கிறார்கள்?
3. இச்சட்டத்தை ஏன் ஒரே சமயத்தில் நாடெங்கும் கொண்டுவரக் கூடாது?
4. ராஜாஜியை, "மது அரக்கனை வீழ்த்திய மன்னர்" எனக் கூறுவது எவ்வாறு பொருந்தும்?

ii. இப்பாடத்திலிருந்து கேள்வி, வியப்பு இவற்றைக் காட்டும் வாக்கியங்களை எடுத்துச் சொல்லு.

iii. யுத்தத்திற்கு யாராவது தவம் செய்வாரா? இதற்கு விடை 'யுத்தத்திற்கு யாரும் தவம் செய்யமாட்டார்' என்பது.

கீழுள்ள வாக்கியங்கள் விடைகளாக வரக்கூடிய கேள்விகளைச் சொல்லு:—

1. யுத்தத்தில் பிறர் அழிந்து நாம் உயரக் காந்தி சம்மதிக்கமாட்டார்.
2. பக்தி மிகுந்த திண்ணன் ஊட்டிய இறைச்சியைச் சிவபெருமான் புசிப்பார்.
3. நீதிமிகுந்த திருக்குறளை அனைவரும் போற்றுவர்.
4. சோழநாட்டைச் செழிக்கச்செய்யும் காவிரியை மக்கள் தெய்வமாகக் கொண்டாடுவார்கள்.

vi. கோடிட்ட இடங்களில் பொருத்தமான வார்த்தையை அமைத்து வாசி:—

1. விற்பனை வரிச்சட்டம்—வந்து விட்டது.
2. வேட்டையாடிக் களைத்த திண்ணன்—தூங்கினான்.
3. நம் நாட்டின் முன்னேற்றத்திற்கு மக்களின் அறியாமையே பெரிய— —
4. சுத்தமும் நல்லொழுக்கமும் இல்லாதவர்களை ஜனங்கள்— —செல்வார்கள்.
5. பகவன் பிரிந்து போனதிலிருந்து ஆதி ஒருவருமில்லாமல்——.

v. முற்றுப் புள்ளி, கேள்விக் குறி, வியப்புக் குறி இவற்றை உபயோகிக்கும் முறை உனக்குத் தெரியுமல்லவா? கீழுள்ள வாக்கியங்களில் அக்குறிகளை இடவேண்டிய இடங்களில் இட்டு எழுது:—

1. மது விலக்குத் திட்டம் வந்து விட்டது
2. என்னடா அப்படிச் சொல்லுகிறாய் அது எப்படிக் கெட்டது
3. நன்றாகச் சொன்னாய் புத்தகத்திற்கு யாராவது காத்திருப்பாரா

18. அஹிம்ஸா வீரர்

தன்மை	கைப்பற்று	வசம்	சைவம்
கொள்கை	உறவினர்	நிறைவேற்று	துறந்து
மேற்கொண்டு	பல்கலைக்கழகம்	சொந்தம்	துறவி
புனைந்து	சகா	வண்ணம்	பஞ்சம்
	நெறி	கடன்	

1. கெட்ட எண்ணங்கள், கோபம், பகை இவற்றை நீக்கி, எல்லா மக்களிடத்தும் ஒரு தன்மையான அன்புகொண்டிருத்தலே அஹிம்ஸை எனப்படும். இத்தகைய கொள்கையை மேற்கொண்டு வாழ்ந்து புகழ் பெற்றவர்கள் நம் நாட்டிலும் பிற நாடுகளிலும் இருந்துள்ளார்கள். புத்தர் அசோகர் போன்ற மன்னர்களுங்கூட இத்தருமத்தை ஆதரித்து இதைப் பின்பற்றி வந்திருக்கின்றார்கள். அகில உலகமும் புகழும் மகானாய் விளங்கிய காந்தியடிகளின் பெருமைக்கு முக்கிய காரணம் அவர் மேற்கொண்டுள்ள அஹிம்ஸா தர்மமே. அவர்



இவ்விஷயத்தில் தமக்கு டால்ஸ்டாய் என்ற ருஷிய அறிஞரே குருவாவார் எனக் கூறியுள்ளார்.

2. காந்திமகான் குருவாகிய கவுண்டு லியோடால்ஸ்டாய் என்பவர், 1828-ஆம் வருஷம் செப்டம்பர் மாதம் 9-ஆம் தேதி ருஷிய தேசத்தில் உயர்ந்த குடும்பத்தில் பிறந்தவர்: இவர் தந்தையார், பெருமைவாய்ந்த குடும்பத்தைச் சேர்ந்தவர்; அன்னையார் அரச வமிசத்தில் தோன்றியவர். டால்ஸ்டாய் தம் அரிய குணங்கள் பலவற்றையும் தம் அன்னையாரிடமிருந்தே பெற்றனரெனக் கூறலாம். அம்மாது சிரோமணியார், கல்வியிற் சிறந்தவர்; பிறருக்கு இன்பம் உண்டாகும்படி கதைகளைப் புனைந்து சொல்லக்கூடியவர்; இனிமையாகப் பாடவல்லவர்; எவரிடத்தும் அன்பு காட்டுகிறவர்; உண்மை நெறியைப் பின்பற்றியவர்.

3. டால்ஸ்டாய் இளம் பிராயத்திலேயே தம் பெற்றோர்களை இழக்க நேர்ந்தது. அதன் பின் இவர் தம் உறவினர் ஆதரவில் வளர்ந்து வந்தார். அக்காலத்தில் அவ்வுறவினரின் ஊழியர்கள் இவரிடம் காட்டிய அன்பே இவரைப் பிற்காலத்தில் ஏழைகளிடம் அன்பு கொள்ளச் செய்தது எனச் சொல்லலாம்.

4. இவர் இளம்பிராயத்தில் கல்வி பயின்று, பிறகு பல்கலைக் கழகத்தில் சேர்ந்து உயர்தரக் கல்வி பயின்று வந்தார். அப்போது இவருடைய சகாக்களின் வாழ்க்கை முறை இவரது நோக்கத்திற்கு இடையூறாய்த் தோன்றவே, இவர் ஊர்

திரும்பித் தம் நிலங்களையும் அவற்றில் பாடுபடும் ஏழைக் குடியானவர்களையும் உயர்த்த ஆரம்பித்தார். இதற்காக இவர் தாமே ஓர் எளிய குடியானவனைப்போல் வாழவும் தொடங்கினர். என்றாலும், இவர் எதிர்பார்த்தபடி குடியானவர்கள் இவர் வழிப் படவில்லை. இந்நிலைமையில் இவர் சேனையில் ஒரு போர் வீரரானர். போர் வீரராய் வேலை செய்து தேசத்திற்கு நன்மை செய்ய விரும்பிய டால்ஸ்டாய், அப்போது விளைந்த கிரிமியன் போரில் சேர்ந்து யுத்தம் செய்ய நேர்ந்தது. அக்காலத்தில் இவரது போர்த் திறமை மக்களுக்குத் தெரியவந்தது. அதோடு இவர் சொல்திறமையும், இவர் வீரர்களுக்குச் சொல்லிய கதைகளிலிருந்தும் பின்பு வெளியிட்ட 'ஸெபஸ்டபூல் கதைகள்' என்னும் நூலிலிருந்தும் வெளியாயிற்று. இவர் மேன்மையை அறிந்த ருஷிய மன்னர், இவர் போரில் சண்டை செய்து வீணே உயிரைவிட மனமில்லாமல் சேனையிலிருந்து நீங்கி வசிக்கும்படி வேண்டினர். இக்காரணத்தினுல் சேனையிலிருந்து நீங்கின டால்ஸ்டாய், சிறிது காலம் நகர வாசம் நடத்திவிட்டுத் தம் வாழ்க்கை நோக்கமாகிய ஏழைக் குடியானவர்களின் முன்னேற்றம் என்பதை நிறைவேற்றத் திரும்பவும் தம் சொந்த ஊருக்குத் திரும்பிப் பாடுபடலானுர்.

5. இவ்வாறு ஊர் திரும்பிய டால்ஸ்டாய் தம் நிலங்களைப் பயிர் செய்து வந்த குடியானவர்களுக்கே அவற்றைச் சொந்தமாக்கி, அவர்களிடையே தாமும் ஓர் எளிய குடியானவராய் உழைத்து வாழ்ந்து வந்தார். அவர்களின் மக்களுக்குக் கல்வி கற்பிப்பதற்

காக ஒரு கல்விச்சாலையை ஏற்படுத்தி, தாமும் ஓழிந்த நேரங்களில் அதில் வேலை செய்து வந்தார்.

6. இவ்வண்ணம் வாழ்ந்து வருகையில் டால்ஸ்டாய், ஸோபியா என்ற நங்கையரை மணம் புரிந்தார். அவ்வம்மையார் டால்ஸ்டாய் எளிய குடியானவனைப் போல வாழ்ந்து வருவதை அங்கீகரியாமற் போனுலும் கணவரிடம் அன்பும் மரியாதையும் கொண்டவராய் இருந்தார். இவர்களுக்கு மக்கட்பேறும் குறைவில்லாமலிருந்தது. டால்ஸ்டாய் அக் குழந்தைகளிடம் அன்புகொண்டு, அவர்களிடம் தோழரைப் போல நடந்து வந்தார்.

7. பயிரிடும் குடியானவர்கள் ஏற்றதொரு கைத்தொழிலைச் செய்வது அவசியமென்பதை உணர்ந்த டால்ஸ்டாய் தாமே தோல்வேலை செய்யத் தலைப்பட்டார். இத்தொழிலில் தம் ஓய்வு நேரத்தைச் செலவிட்டுக் கைதேர்ந்தவர் எனவும் பெயரெடுத்தார். இவ்வாறு மேன்மேலும் மகானுக்குரிய குணங்களைப் பெற்று வாழ்ந்த டால்ஸ்டாய் தம் உணவையும் ஏற்றபடி திருத்திக்கொண்டார்; சைவ உணவையே உண்டு வேட்டையாடுவதை நிறுத்தினர்; புகையிலை, மதுபானம் இவற்றை ஒழித்தார்; பிறகு தம் குடும்பம், சொத்து அனைத்தையும் துறந்துவிட்டு, ஒரு துறவியுமானர். இவர் துறவியாயிருந்த போதுதான் ருஷியாவில் பெரும் பஞ்சம் தோன்றியது. அச்சமயம் இவரும் இவர் குடும்பத்தாரும் ஏழைகளுக்குப் பெரிதும் உதவிசெய்து அவர்கள் துன்பத்தை நீக்கினர்கள்.

8. டால்ஸ்டாய் சிறந்த சொல் வன்மையுள்ள வர் என்பதை முன்பே கூறினோம். இவர் இயற்றி யுள்ள நூல்கள் பல. இவர் எழுதிய "**தேவலோகம் உன் உள்ளே இருக்கிறது**" என்னும் நூல் இவரது வாழ்க் கையை விளக்குவதாகும். மானிடராய்ப் பிறந்தவர் பிறரிடம் அன்பும், கடவுளிடம் பக்தியும் அஹிம்ஸா தர்மத்தில் ஆற்றலும் உள்ளவராய் இருப்பதே கடன் என்பதை அது விளக்குகின்றது.

9. இந்நற்குணங்களும் உண்மையும் டால்ஸ் டாயினிடம் சிறந்து விளங்கிய காரணத்தினலேதான் இவரை அனைவரும் 'அஹிம்ஸா வீரர்' என வழங்க லாயினர். இதுபற்றியே நம் காந்தியடிகளும் இவ ரைத் தம் குருவென ஏற்றுக்கொண்டார்.

பயிற்சி—18

i. விடை சொல்லு:—

1. டால்ஸ்டாய்க்கும் காந்திக்கும் நற்குணங்கள் ஒரே வழியில் வளரலாயின என்பதை எதனுல் சொல்லலாம்?
2. டால்ஸ்டாயை ஏழைகளிடம் அன்பு கொள் ளும்படி செய்த சம்பவம் எது?
3. ருஷிய மன்னர் டால்ஸ்டாயைச் சேனையினி ருந்து நீங்கும்படி ஏன் கூறினர்?
4. குடியானவர்களின் நிலையை உயர்த்த டால்ஸ் டாய் தம் வாழ்க்கையை எவ்வாறு மாற்றிக் கொண்டார்?
5. அஹிம்ஸா தர்மமென்பது என்ன?

ii. கோடிட்ட இடங்களில் ஏற்ற பதங்கள் அமைத்து வாசி :—

1. பிரதம மந்திரியார் தம்—சுற்றுப் பிரயாணம் செய்தார்.

2. கிராமங்கள் முன்னேற வேண்டுமென்ற நோக்கம்——காந்தி சிவக்கிராமத்தில் ஒரு கிராம வாசியைப் போல இருந்தார்.

3. அடுத்தடுத்து மழை பெய்யாமற்போன காரணத்தினால், நாடெங்கும்——தோன்றியது.

4. மாமிசம் நீங்கின உணவு——உணவு ஆகும்.

5. துருவன் நாடு—காடு ஏகினான்.

6. மக்கள் நெறிமுறையில் வாழ்வது தங்கள் —— என்பதை உணரவேண்டும்.

சைவ	சகாக்களோடு	துறந்து
பஞ்சம்	கடன்	நிறைவேற

iii. இவ்வாக்கியங்களை ஒரே வாக்கியமாக அமைத்து வாசி :—

1. டால்ஸ்டாய் தம் பெற்றோர்களை இளம்பிராயத்திலேயே இழந்தனர். அதன் பின் இவர் தம் உறவினரின் ஆதரவில் வளர்ந்தார்.

2. இவர் சகாக்களின் வாழ்க்கை முறை இவருக்குப் பிடிக்கவில்லை. ஆகவே, இவர் பல்கலைக் கழகத்தை விட்டு நீங்கினார்.

3. டால்ஸ்டாய் போர்த்திறமை பெற்று விளங்கினார். இவரிடம் சொல் வன்மையும் இருந்தது

iv. கீழுள்ள வாக்கியங்களில் தடித்த எழுத்திலுள்ள சொற்களுக்கு வேற்றுமை கூறு:—

1. காந்தி அஹிம்ஸா தர்மத்தை மேற்கொண்டார்.
2. டால்ஸ்டாய் ஊருக்குத் திரும்பினார்.
3. ஊழியர்கள் காட்டிய அன்பு அவரை ஏழைகளிடம் அன்பு கொள்ளச் செய்தது.
4. டால்ஸ்டாய் போரில் தம் திறமையைக் காட்டினார்.
5. சேனையை விட்ட டால்ஸ்டாய் நகரின்கண் சிறிது காலம் வாழ்ந்து வந்தார்.
6. ருஷியாவில் பெரும் பஞ்சம் தோன்றியது.
7. இவர் இயற்றிய நூல்கள் இவரது சொல் வன்மையைக் காட்டுகின்றன.

---

19. தினசரிப் பத்திரிகைகள்

தினசரி	குறிப்பு	மேம்பாடு	தலைப்பு
பத்திரிகை	பிரசுரம்	மிகை	பத்திரிகாலயம்
நிகழ்ச்சி	அலுவலகம்	தலையங்கம்	பான்மை

1. இக்காலத்தில் பெரிய பட்டணங்களில் மட்டும் அல்லாமல், நாட்டுப்புறங்களிலும் கூட ஜனங்கள் தினசரிப் பத்திரிகைகளை ஆவலுடன் வாங்கிப் படிக்கின்றார்கள். இவற்றில் தூர தேசத்துச் சமாசாரங்களும், உள்நாட்டுச் சமாசாரங்களும் பல இடங்களிலும் நடைபெறும் நிகழ்ச்சிகளும், வியாபாரக் குறிப்புக்களும்,

அரசியல் விளம்பரங்களும் பிரசுரமாகின்றன. ஆகையினலேதான் பலருக்கு இவை உபயோகமாகின்றன.

2. மேற்கூறியதிலிருந்து பத்திரிகைகள் எக்காலத்தும் இம்மாதிரியே பிரபலமாய் இருந்தன வென்று நாம் எண்ணிவிடலாகாது. அச்சடிப்பது கண்டுபிடிக்கப்பட்டுக் காகிதம் செய்யும் விதம் தெரிந்த பிறகுதான் பத்திரிகைகள் தோன்றலாயின. அதற்கு முன் நெடுங்காலம் மனிதர்கள் மற்றத் தேசங்களைப் பற்றிய விவரங்கள் தெரியாதவர்களாய்த்தான் வாழ்ந்து வந்தார்கள். பண்டைக் காலத்தில் அரசர்கள் தாங்கள் வெளியிடும் பிரகடனங்களைப் பொதுவிடங்களில் ஒட்டி வைப்பார்கள். ஆனல், எழுதப் படிக்கத் தெரியாத பலர் இருந்து வந்த காலத்தில் அப் பிரகடனங்களைச் சிலரே படித்து அறிந்திருப்பர். தவிர, அக்காலத்தில் போக்கு வரவுக்குரிய சாதனங்களைக்கொண்டு உலகில் பல இடங்களிலும் வாழும் மக்கள் ஒருவரையொருவர் அறிந்துகொள்ள வேண்டிய அவசியமும் இல்லாமலிருந்தது. பத்தொன்பதாம் நூற்றாண்டில் இச்சாதனங்கள் அதிகரித்ததால், ஓரிடத்தில் வசிப்பவர் பிற இடங்களில் நடக்கும் நிகழ்ச்சிகளை அறிய வேண்டியவராயினர். இது காரணம் பற்றியே பத்திரிகைகள் தோன்றலாயின.

3. அச்சு இயந்திரத்தை முதலில் கண்டுபிடித்த போது பத்திரிகைகளை விரைவாக அச்சிடும் ஏற்பாடுகள் இல்லை. அதோடு பல பிரதிகளை அச்சிடுவதற்கு வேண்டிய அளவுக்குக் காகிதமும் செய்யப்படவில்லை. இவை அல்லாமல், கல்வி பரவியிராத காலத்தில்

பத்திரிகைகளைப் படிக்கக் கூடியவர் சிலரே இருந்தனர். ஆகையால், முதலில் தோன்றிய பத்திரிகைகள் வாரப் பத்திரிகைகளாய்ப் பிரசுரமாயின. வரவர உலகிலுள்ள தேசங்களுக்குள் நெருங்கிய சம்பந்தமும் பழக்கமும் உண்டாகவே, அவற்றைப் பற்றிய சமாசாரங்களை அன்றுடம் அறியும் ஆவல் ஜனங்களுக்கு ஏற்பட்டது. இதற்குள் கல்வி அறிவும் மக்களிடையில் பரவியது. இதற்கேற்றபடி அச்சுவேலையில் மேம்பாடான ஏற்பாடுகளும் காகித உற்பத்தியில் அபிவிருத்தியும் ஏற்பட்டன. ஆகவே, வாரப் பத்திரிகைகளுக்குப் பதிலாகத் தினசரிப் பத்திரிகைகள் தோன்றின.

4. இப்பத்திரிகைகளை நடத்துகிறவர்கள் தங்கள் பத்திரிகைகளில் தங்கள் எண்ணங்களை வெளியிடுவார்கள். இதற்குத் தான் தலையங்கம் என்பது பெயர். உலக சமாச்சாரங்களனைத்தையும் தந்தி மூலமாகத் தெரிவிப்பதற்கு ஏற்பாடுகள் உள்ளன. இவற்றைத் தொகுத்துப் பத்திரிகைகளில் தந்தி சமாசாரங்கள் என்னும் தலைப்பின் கீழ்ப் பிரசுரிப்பார்கள். இவ்விஷயங்களோடு நியாய ஸ்தல விசாரணைகள், பொதுக்கூட்ட விவரங்கள், சட்டசபை நடவடிக்கைகள், ஆங்காங்கு நடைபெறும் நிகழ்ச்சிகள் இவையனைத்துங்கூடப் பத்திரிகைகளில் அச்சிடப்படும். மேற்கூறியபடி வியாபாரக் குறிப்புக்களும், பந்தய விவரங்களுங்கூட அவற்றில் காணப்படும். சரிபத்தில் படங்கள் சேர்ந்த பகுதியொன்று பத்திரிகைகளில் சேர்க்கப்பட்டுள்ளது. அதில் ஆங்காங்கு நடைபெறும் நிகழ்ச்சிகளைப் படங்கள் மூலமாகக் காட்டுவார்கள்.

5. இத்தகைய பல வகையான வேலைகளைத் தினந்தோறும் காலம் தவறாமல் செய்வதற்குப் பத்திரிகாலயத்தில் எண்ணிறந்த மனிதர்கள் வேலை செய்வார்கள். அச்சுக்கள் கோக்கவும், பத்திரிகைகளை அச்சிடவும், அச்சிட்ட பிரதிகளைக் கத்தரித்து மடிக்கவும் இக்காலத்தில் இயந்திரங்கள் உபயோகிக்கப்படுகின்றன. இவ்வாறு பலர் கூடி உழைப்பதாலேதான் உலகினர் உலகச் செய்திகளை அப்போதைக்கப்போது தெரிந்து கொள்ள வசதி ஏற்படுகிறது.

6. மனிதருக்குள் ஒரு பான்மையான நோக்கத்தையும் நெருங்கிய பழக்கத்தையும் உண்டாக்கும் பத்திரிகைகள் அவர்கள் ஒன்றுபட்டு வாழ்வதற்கு ஏற்ற துணையாகுமென்பது மிகையாகாது.

பயிற்சி—19

i. விடை சொல்லு:—

1. ஆதி காலத்தில் பத்திரிகைகள் தோன்றாததற்குக் காரணங்கள் யாவை?
2. இக்காலத்தில் பத்திரிகைகளால் ஜனங்களுக்கு உண்டாகும் நன்மைகள் யாவை?
3. பத்திரிகைகள் மக்கள் ஒன்றுபட்டு வாழ்வதற்கு எவ்வாறு துணையாகும்?

ii. பின்னுள்ள வாக்கியங்களை இரண்டு தனி வாக்கியங்களாகப் பிரித்து எழுது:—

1. எழுதப் படிக்கத் தெரியாத பலர் இருந்துவந்த அக்காலத்தில் இப் பிரகடனங்களைச் சிலரே படித்து அறிந்திருப்பர்.

2. பத்திரிகைகளைப் படிக்கக்கூடியவர் சிலரே இருந்ததால், முதலில் தோன்றிய பத்திரிகைகள் வாரப் பத்திரிகைகளாகப் பிரசுரமாயின.

3. மனிதர்களுள் ஒரு பான்மையான நோக்கத்தையும் நெருங்கிய பழக்கத்தையும் உண்டாக்கும் பத்திரிகைகள் அவர்கள் ஒன்றுபட்டு வாழ்வதற்கு ஏற்ற துணையாகுமென்பது மிகையாகாது.

iii. கீழுள்ள வாக்கியங்களில் பன்மை எழுவாய்களை ஒருமை எழுவாய்களாக மாற்றி எழுது:—

1. பத்திரிகைகளில் நிகழ்ச்சிகள் பிரசுரமாகின்றன.

2. இக்காரணங்களால் பத்திரிகைகள் தோன்றலாயின.

3. உலக சமாசாரங்களைத் தெரிவிக்க ஏற்பாடுகள் உள்ளன.

4. இவ்வேலைகளைச் செய்ய இயந்திரங்கள் உபயோகிக்கப்படுகின்றன.

iv. கீழுள்ள வாக்கியங்களில் தடித்த எழுத்திலுள்ள சொற்களை எழுவாய்களாக அமைத்து வாசி:—

1. ஜனங்கள் பத்திரிகைகளை ஆவலுடன் படிக்கிறார்கள்.

2. அரசர்கள் பிரகடனங்களை வெளியிடுவார்கள்.

3. திலகர் தக்காணக் கல்விச் சபையை ஸ்தாபித்தார்.

4. காந்தி தீண்டாமையை ஒழித்தார்.

20. செஞ்சிலுவைச் சங்கம்

சிலுவை	சின்னம்	ஒப்பந்தம்	தொகுதி
வியாபி	கொடி	நடுநிலைமை	மாணவன்
தணி	அகில	அநுசரி	மாணவி
இசைந்து	கமிட்டி	தாதி	பிரஜை
நிலவும்	அநுமதி	க்ஷயம்	சேரி
பின் வாங்கு	ஏக மனமாய்	பெருவியாதி	பாமர மக்கள்

1. பொதுஜன சேவையில் ஈடுபட்டு மக்களின் நன்மைக்காகப் பாடுபடும் இயக்கங்களில் செஞ்சிலுவைச் சங்கம் தலை சிறந்ததாகுமெனத் திண்ணமாய்க் கூறலாம். அதைச் சார்ந்த கிளைகள் உலகெங்கும் வியாபித்துள்ளன. ஈடுபட்டு உழைக்கும் துறைகளும் பலவாகும். மனிதனின் துயரையும் துன்பத்தையும் தணிக்க, அச்சங்கம் செய்யும் முயற்சிகள் எண்ணிறந்தனவாகும்.

2. செஞ்சிலுவைச் சங்கத்தின் அமைப்பு, அலுவல் இவற்றைப்பற்றி ஜனங்களுக்குத் திடமான அறிவு ஏற்படுவது அவசியமாகும். சிலர் அதை யுத்தத்திற்குத் துணையாயிருக்கும் இயக்கமென எண்ணி வருகின்றனர். அச்சங்கம் யுத்த சம்பந்தமாய் ஒரு காலத்தில் தோன்றியது உண்மையே. யுத்தங்கள் நேரிடும் காலங்களில் அது உழைப்பதும் உண்மையே. அவ்வாறு அது உழைப்பது அதன் நோக்கத்திற்கு இசைந்ததேயாகும். ஆயினும், அது அமைதி நிலவும் காலத்தில் ஆற்றிவரும் தொண்டு

கள் முன் கூறியவற்றிற்குச் சிறிதும் பின் வாங்கியவை அல்ல. பொதுவாக எக்காலத்தும் மனிதரின் துய ரைப் போக்குவதே அதன் நோக்கமும் வேலையு மாகும்.

3. சிலர் அச்சங்கத்தின் சின்னம் சிலுவையா யிருப்பதிலிருந்து அது தனி மதத்தைப் பற்றிய

இயக்கமாகுமென்றும் எண்ணுகின்றனர். உண்மையில் அச்சங்கத்திற்கும் கிறிஸ்து மதத்திற்கும் யாதொரு சம்பந்தமுமில்லை. அச்சங்கம் ஸ்விட்ஸர்லாந்து தேசத்திலுள்ள ஜினிவா நகரத்தில் தோன்றியது. இக்காரணம் பற்றி, அத்தேசக் கொடியே அதன் சின்னமாகப் பல தேசத்தினராலும் அங்கீகரிக்கப் பட்டது. இச் சின்னத்தை மாற்றி, வேறொன்றை உபயோகிக்க ஒரு தேசம் விரும்புமாயின், அதை அகிலதேசச் செஞ்சிலுவைச் சங்கக் கமிட்டி அங்கீகரிக்கும். இம்மாதிரி துருக்கி, பாரசீகம், ருஷியா முதலிய தேசங்கள் தத்தம் சின்னங்களை உபயோகிக்க அனுமதி பெற்றுள்ளன. நம் தேசத்ினரும் ஒரு தனிப்பட்ட சின்னத்தை உபயோகிக்க ஏக மனமாய் விரும்பினால், அவ்வாறே நாம் அனுமதி பெற்றுச் செய்யலாம்.

4. செஞ்சிலுவைச் சங்கம் யுத்த சம்பந்தமாய்த் தோன்றியதெனக் கூறினோம். பத்தொன்பதாம் நூற்றாண்டின் மத்தியில் பிரான்ஸ், இதாலி என்னும் இரண்டு தேசங்களும் சேர்ந்து ஆஸ்திரியாவை எதிர்த்துச் சண்டை செய்தன. அப்போது ஸ்விட்ஸர்லாந்து தேசவாசியாகிய ஹென்றி டுனண்டு என்பவர், அதன் கொடுமையைப் பார்க்க நேர்ந்தது. சுமார் நாற்பதினாயிரம் போர் வீரர்கள் யுத்த களத்தில் இறந்தும், இறந்து கொண்டும் கவனிப்போர் இல்லாமல் கிடந்தார்கள். இதைக் கண்ட டுனண்டு, காயம்பட்ட போர் வீரர்களைப் போஷிக்க ஒவ்வொரு தேசத்திலும், உபசமனச் சங்கங்களை ஏற்படுத்துவதையே தம் வாழ்க்கைக் கடனாக மேற்கொண்டார். அதற்கிணங்க, ஜினிவா நகரத்தில் 1864-ஆம் ஆண்டில் ஐரோப்பிய தேசங்

களின் பிரதிநிதிகள் கூடிய மகாநாடு ஒன்றை அவர் கூட்டினர். அம் மகாநாட்டில் ஒரு பெயர்போன ஒப்பந்தம் செய்யப்பட்டது. அதன்படி காயம்பட்டவர்களும், காயம் பட்டவர்களுக்கு உபசமனம் செய்யும் சங்கங்களும், யுத்த காலங்களில் நடு நிலைமை கொண்டவர்களாகக் கருதப்படுவார்கள் என்று அங்கீகரிக்கப்பட்டது. அதைப் பாதுகாக்க அகில தேசச் செஞ்சிலுவைக் கமிட்டியும் ஸ்தாபிக்கப் பட்டது. யுத்த காலத்தில் உபசமன ஏற்பாடு செய்வதே இக்கமிட்டியின் முக்கியமான வேலை யாகும்.

5. யுத்த காலங்களில் மாத்திரமல்லாமல் சமாதான நிலைமையிலுங்கூட இச்சங்கம் உழைப்பதற் கான ஏற்பாடுகள் மகா ஐரோப்பிய யுத்தத்திற்குப் பின் செய்யப்பட்டன. யுத்த காலங்களில் போர் நடைபெறும்போது ஏற்படும் துன்பங்கள் ஒரு வகை யானவை. மற்றக் காலங்களில் மனிதர் படும் துன் பங்கள் அவற்றைக் காட்டிலும் பன்மடங்கு கொடிய வையாகும். தரித்திரம், வியாதி, விபத்து இவற்றால் மாந்தர் வருந்துவதைக் கண்டவர்கள் இதன் உண்மை யைச் சுலபமாக அறிவார்கள். எச்சரிக்கையுடன் வாழ்ந்து வியாதிகளைக் குறைக்கவும், விபத்துக்களின் கொடுமைகளை மனிதர்கள் முயற்சியாலும் அனுதாபத் தாலும் தணிக்கவுமே, 1921-ஆம் வருஷத்தில் செஞ் சிலுவைச் சங்கங்களின் சமஷ்டி ஒன்று ஸ்தாபிக்கப் பட்டது. அதை ஏற்படுத்துவதற்குக் காரணமாய் இருந்தவர் ஹென்றி டேவிஸன் என்பவர். அவ்வேற் பாட்டை அனுசரித்தே நம் தேசத்திலும் இந்திய

செஞ்சிலுவைச் சங்கமொன்று ஸ்தாபிக்கப்பட்டு நடந்து வருகிறது.

6. இச் சமஷ்டியின் முதன்மையான நோக்கங்கள் மூன்றாகும். அவை ஆரோக்கியத்தைப் பெருக்குதல், வியாதியைத் தடுத்தல், துன்பத்தைக் குறைத்தல் என்பன. இந்நோக்கங்கள் பலவும் ஆரோக்கிய பிரசாரம், ஆபத்துக்கால உபசமனம், தாதித் தொழில் அபிவிருத்தி, இளைஞர் செஞ்சிலுவைச் சங்கம் ஆகிய துறைகளில் உழைத்து வருகின்றன. க்ஷயம், பெருவியாதி முதலிய கொடிய வியாதிகளைத் தடுத்து, அவற்றால் வருந்துவோருக்கு ஆதரவு காட்ட இச்சங்கங்கள் செய்துள்ள முயற்சிகள் பலவாகும். வெள்ளம், பஞ்சம், பூகம்பம் முதலிய விபத்துக்களால் வருந்தும் மக்களுக்கும் இச் சங்கத்தினர் கால தாமதமின்றி உதவி செய்ய முன் வருவர்.

7. வைத்திய சாலைகளில் நோயாளிகளைப் போஷித்துக் கவனித்து வரும் தாதிமார்கள் செய்யும் தொண்டு சிறந்ததாகும். அத்தகைய தொண்டையாற்றப் பற்பல பெண்கள் முன் வருவதற்கு வேண்டிய முயற்சிகளும் இச்சங்கங்களால் செய்யப்படுகின்றன.

8. கடைசி நோக்கமாகிய இளைஞர் செஞ்சிலுவைத் தொகுதி, சமீபத்தில் ஏற்படுத்தப்பட்டது. இத்தகைய தொகுதி, பாடசாலைகளில் படிக்கும் மாணவ மாணவிகளைக் கொண்டு அமைக்கப்படுகின்றது. ஆரோக்கிய அபிவிருத்தி, நோயாளிக்கும் துன்பப்படுகிறவருக்கும் உதவி புரிதல், அகில

தேச சகோதரத்துவம் இவற்றில் இளைஞர்களுக்குப் பயிற்சியளித்து, அவர்களை ஏற்ற பிரஜைகளாகச் செய்வதே இப்பிரிவின் நோக்கமாகும். இத் தொகுதியைச் சேர்ந்த இளைஞர்கள் வைத்திய சாலைகள், சாலைகள், சேரிகள் ஆகியபலவிடங்களிலும் சென்று தங்களால் இயலும் அளவு பாமர மக்களுக்கு உதவி புரிந்து வருகிறார்கள்.

பயிற்சி

i. விடை சொல்லு:—

1. செஞ்சிலுவைச் சங்கத்தைப்பற்றிச் சிலர் கொண்டுள்ள தவறான அபிப்பிராயங்கள் எவை? அவை எவ்வாறு தவறாகும்?
2. செஞ்சிலுவைச் சங்கம் ஏற்படுத்தக் காரணமாயிருந்தது எது? அதற்கு உழைத்தவர் யாவர்?
3. சமாதான நிலையில் செஞ்சிலுவைச் சங்கங்கள் எத்துறையில் பாடுபடுகின்றன?
4. இளைஞர் செஞ்சிலுவைத் தொகுதியின் நோக்கங்கள் யாவை?

ii. கீழுள்ள வாக்கியங்களைக் கூறிய வகையில் மாற்றி அமை:—

1. அச்சங்கம் செய்யும் முயற்சிகள் எண்ணிறந்தனவாகும். ('செய்யும்' என்பதை வினை முற்று ஆக்கு.)
2. டுனண்டு ஒரு மகாநாட்டைக் கூட்டினார் (பயனிலையைச் செயப்பாட்டு வினையாக்கு.)

3. அவ்வாறு அது உழைப்பது அதன் நோக்கத்திற்கு இசைந்ததேயாகும். (இசை என்பதற்குப் பதிலாக மாறு என்பதை அமைத்து வினையாக மாற்று.)

4. இம்மகா நாட்டில் ஒரு பெயர்போன ஒப்பந்தம் செய்யப்பட்டது. (பயனிலையைச் செய்வினையாக மாற்று.)

5. அதை ஏற்படுத்துவதற்குக் காரணமாயிருந்தவர் ஹென்றி டேவிஸன் என்பவர். (இருந்தவர் என்பதற்குப் பதிலாக இருந்தார் என்பதை அமைத்து வாசி.)

iii. பொருள் கூறு:—

வியாதி, உபசமனம், அமைதி,
இசைந்துள்ளது, சின்னம், தனி,

iv. இவற்றின் பால்களை கூறி, இவற்றிற்கு மறு பால் சொல்லு:—

தாதி, மாணவன், சகோதரி, தலைவி, பெண்டிர்.

---

21. பிளாரன்ஸ் நைட்டிங்கேல்

அனுதாபம் களம் இழிவு பலிக்காமல் சுகவாசம்
சீமான் கோலம் தயங்கி பயணம் தாறுமாறு
மாண்டு சேவை தீபம் அதிர்ஷ்டம் சமாதானம்
டம்பம் சிலை

1. முன் பாடத்தில், சில ஆண்டுகளுக்கு முன் யுத்தத்தில் காயப்பட்ட போர் வீரர்களுக்கு யாதொரு

விதமான உபசமன ஏற்பாடும் இல்லை என்பதைப் படித்தோம்; அதோடு செஞ்சிலுவைச் சங்கம் வைத்திய சாலைகளில் வேலை செய்யும் தாதிகளுக் காகப் பாடுபடுகின்றது எனவும் அறிந்தோம். தாதித் தொழிலை ஸ்தாபிப்பதில் கண்ணும் கருத்து மாய் இருந்தவரும், காயம்பட்ட போர் வீரர்களுக்கு உதவி புரிவது மறக்கக்கூடாத கடமை என வற் புறுத்திக் கூறி, அதை நிறைவேற்றுவதில் ஊக்கம் செலுத்தியவரும் **பிளாரன்ஸ் நைட்டிங்கேல்** என்னும் அம் மையார் ஆவார்.

2. நைட்டிங்கேல அம்மையார், இங்கிலாந்தில் வந்து குடியேறிய பிளாரன்ஸ் நகரைச் சேர்ந்த பெரிய குடும்பத்தில் 1820-ஆம் ஆண்டில் பிறந்தவர். இளமையிலிருந்தே இவர் ஏழைகளிடம் அன்பும், துன்பப்படுகின்றவரிடம் அனுதாபமும் கொண்ட

வராய் விளங்கினார். சுற்றுப் புறங்களிலுள்ள ஏழை மக்கள் வசிக்கும் இடங்களுக்குச் சென்று தொண்டு புரிவதும், வியாதியஸ்தர்களைக் கவனிப்பதும் இவருக்குச் சந்தோஷத்தை உண்டாக்கின.

3. செல்வமும் சிறப்பும் மிகுந்த இவர், தருணப் பிராயத்தை அடைந்ததும் ஒரு சீமானை மணந்து, சுக வாழ்வு வாழவேண்டுமென இவர் பெற்றோர் விரும்பினர். ஆனால் நைட்டிங்கேல் அம்மையார் அதற்கு இணங்கவில்லை; தாதித் தொழிலிற் பயின்று நோயாளிகளுக்கு உதவ வேண்டுமென ஆவல்கொண்டிருந்தார். அக்காலத்தில் பெண்மணிகள் அதிகமாகத் தாதித் தொழிலில் சேராமலிருந்ததாலும், அத்தொழில் இழிவானதாக மதிக்கப்பட்டு வந்ததாலும், நைட்டிங்கேல் அம்மையாரின் மனத்தை மாற்றப் பெற்றோர்கள் எவ்வளவோ முயன்றார்கள். ஆனால் இவர் ஒரே உறுதியாய்த் தாதித் தொழிலையே நாடி நின்றார்.

4. தங்கள் எண்ணம் பலியாமற் போகவே இவர் பெற்றோர் இவரைத் தாதித் தொழிலில் பயிற்சி பெற ஜெர்மனிக்கு அனுப்பினர். அங்கே பயிற்சி பெற்றுத் திரும்பிய இவர், லண்டன்மா நகரிலிருந்த சுக வாசஸ்தலத்தில் வேலை செய்து வந்தார்.

5. இவ்வாறு இருக்கையில், அப்போது நடந்த கிரிமியன் யுத்தத்தில் ஆங்கிலேயப் போர்வீரர் பலர் காயம் பட்டுக் கவனிப்பார் இல்லாமல் மாண்டு வருகின்றனர் என்ற செய்தி இங்கிலாந்திற்கு எட்டியது. இதைக் கேள்விப்பட்ட நைட்டிங்கேல் அம்மையார்,

சில தாதிகளுடன் யுத்தகளத்திற்குச் சென்று உதவி புரியத் தமக்கு அனுமதி கொடுக்கவேண்டுமென அரசாங்கத்தாரை வேண்டினர். அரசாங்கத்தாரும் முதலில் தயங்கினரேனும், பின்பு இவருக்கு அனுமதி யளித்தனர்.

6. உத்தரவைப் பெற்ற நைட்டிங்கேல் அம்மையார் முப்பத்தி நான்கு தாதிமார்களையும் காயம்பட்டவர்களுக்குச் சிகிச்சை செய்வதற்கு வேண்டிய பொருள்களையும் சேகரித்துக்கொண்டு யுத்தகளத்திற்கும் பயணமானர். யுத்த களத்தைச் சார்ந்த வைத்திய சாலையைப் பார்த்ததும் இவர் மனம் கொதித்தது. காயம்பட்டவர்கள் யாதோர் ஒழுங்குமில்லாமலும், ஏற்ற வசதிகளில்லாமலும், தாறுமாருய்க் கிடந்தார்கள். அக்கோலம் எப்படிப்பட்டவரையும் திகைப்படையச் செய்யக் கூடியதாயிருந்தது. ஆனல், நைட்டிங்கேல் அம்மையார் சிறிதும் தாமதம் செய்யாமல், தம் தாதிமார்களைக் காயம் பட்டவர்களுக்கு உதவி செய்ய அமர்த்தி, தாம் வேண்டிய சிகிச்சைகளைச் செய்யத் தொடங்கினர். இவ்வாறு இவரும் இவர் சகாக்களும் சிரமத்தைப் பாராட்டாமல் அல்லும் பகலும் உழைத்தமையால், வைத்திய சாலையும் சீரடைந்து, காயம் பட்டவர்களும் குணமாகிக் கொண்டு வந்தார்கள்.

7. நோயாளிகளுக்கும் காயம்பட்டவர்களுக்கும் வைத்தியம் செய்வதோடு இல்லாமல், நைட்டிங்கேல் அம்மையார் அவர்களுக்காகப் பல வேலைகளையும் செய்வார்; அவர் உறவினருக்கும் குடும்பத்தினருக்கும் கடிதங்கள் எழுதுவார்; அவர்கள் பணத்

த்தைக் கணக்கு வைத்து, நிதியில் சேர்த்துவைப்பார்; இன்னும் அவர்கள் விரும்பிய காரியமனைத்தையும் செய்வார். பிரதி தினமும் இரவில் எல்லா வேலை களும் முடிந்த பின், கையிலொரு தீபத்தை ஏந்திக் கொண்டு வைத்தியசாலை முழுவதும் நடந்து சென்று ஒவ்வொருவரையும் தாமே பார்த்து வருவார். இவர் வரவு நோயாளிகளுக்குப் பெருமகிழ்ச்சியைக் கொடுக் குமாம். அவர்கள் தங்கள் சந்தோஷத்தையும் நன்றியையும் காட்ட அம்மையாரின் நிழலை முத்த மிடுவார்களாம்.

8. ஓய்வென்பதே இல்லாமல் இடைவிடாமல் உழைத்த காரணத்தால், இந்த அம்மையாருக்குச் சுகம் குன்றலாயிற்று. அதிர்ஷ்டவசமாக அச்சம யத்தில் யுத்தமும் நின்று சமாதானமும் ஏற்பட்டது. ஆகவே, இவர் தம் நாடு திரும்பினர். இவர் திரும்பு வதற்கு முன்பாகவே இவர் செய்த சீரிய தொண்டு கள் தேசமக்களுக்குத் தெரிந்திருந்தமையால், அவர் கள் இவரை வரவேற்றுக் கவுரவிக்க மும்முரமான ஏற்பாடுகள் செய்திருந்தார்கள். டம்பத்தை வெறுத்த இவர், யாரும் அறியாதபடி தம் ஊரை அடைந்து வீடு சேர்ந்தார்.

9. நைட்டிங்கேல் அம்மையாரின் அருமையான தொண்டைக் கேள்வியுற்ற விக்டோரியா மஹாராணியார் இவரை அழைத்துக் கவுரவித்தனர். ஜனங்கள் தங்கள் நன்றியைக் காட்டுவதற்குப் பெருந்திரவியத் தைத் திரட்டி இவருக்குப் பரிசாக அளித்தார்கள். ஆனால், இவர் அதை ஏற்க மறுத்து, அத்தொகை யைத் தாதிகளுக்குப் பயிற்சி அளிக்கும் சாலை

யொன்று ஏற்படுத்துவதில் செலவிட ஏற்பாடு செய்தார். அதன் பிறகுதான் தாதித்தொழிலும் மதிப்படைந்ததாகி, உலகெங்கும் நோயாளிகளைக் கவனிக்கத் தாதிகளை நியமிப்பது வழக்கமாயிற்று. இக்காலத்தில் போரிலும் வைத்தியசாலையிலும் தாதிகளின் தொண்டு காரணமாய்ச் சுகம் பெறும் நாம், அச்சுகம் நைட்டிங்கேல் அம்மையார் இயற்றிய பேருதவியே, என்பதை, மறக்க இயலாது. இவர் ஞாபகத்தை நிலைநிறுத்தப் பல இடங்களில், இவருடைய உருவச் சிலைகள் வைக்கப்பட்டுள்ளன. ஆனல், அவையனைத்தைக் காட்டிலும் தாதித்தொழிலும் தாதிகளின் சேவையுமே இவருக்குச் சிறந்த ஞாபகச் சின்னமாகும்.

பயிற்சி—21

i. விடை சொல்லு:—

1. நைட்டிங்கேல் அம்மையார் விரும்பிய தாதித்தொழில் இவர் பெற்றோர்களுக்கு ஏன் சம்மதமாயில்லை?
2. கிரிமியன் யுத்தத்தில் நைட்டிங்கேல் அம்மையார் செய்த வேலைகள் எவை?
3. ஜனங்கள் நைட்டிங்கேல் அம்மையாரிடம் நன்றி பாராட்ட என்ன செய்தார்கள்?
4. தாதித் தொழிலுக்கு நைட்டிங்கேல் அம்மையார் எவ்வாறு அன்னையார் ஆவர்?

ii. சீமான் } இவற்றிற்குப் பெண்பால் கூறு.
ராஜா }

iii. இவ்வாக்கியங்களை ஒரே வாக்கியமாகக் கூறு :—

1. நைட்டிங்கேல் அம்மையார் ஒரு சீமானை மணந்து சுக வாழ்வு வாழவேண்டுமென இவர் பெற்றோர்கள் எண்ணினார்கள். ஆனால் இவர் அதற்கு இணங்கவில்லை.

2. அவர்கள் எண்ணம் பலிக்கவில்லை. ஆகவே அவர்கள் நைட்டிங்கேல் அம்மையாரைத் தாதித் தொழிற்பயிற்சிக்கு அனுப்பினார்கள்.

3. நைட்டிங்கேல் அம்மையார் ஒய்வு என்பதே இல்லாமல் இடைவிடாது உழைத்தார். அக் காரணத்தினால், இவருக்குச் சுகம் குன்றலா யிற்று.

iv. அவர், அக்காலம், அத்தொழில்
இவர், இக்காலம், இத்தொழில்

இச்சொற்களில் அ இ என்னும் எழுத்துக்கள் சுட்டிக் காட்டுகின்றன. ஆகவே, இவை சுட்டெழுத்துக்கள் எனப்படும். இவற்றோடு உ என்னும் எழுத்தும் சில சமயங்களில் சுட்டெழுத்தாக உபயோகப்படும்.
அ, இ, உ இம்மூன்றும் சுட்டெழுத்துக்கள்.

v. கீழுள்ள விடைகள் வருமாறு கேள்விகள் சொல்லு :

1. நைட்டிங்கேல் அம்மையார் அதற்கு இணங்க வில்லை.

2. அவர் வைத்தியம் செய்வதோடு நிற்கவில்லை.

3. அவர் வரவு நோயாளிகளுக்கு எவ்வளவோ மகிழ்ச்சியைக் கொடுக்கும்.

22. பாரத ஸமுதாயம்

தொன்மை	கவர	பாவனை	தத்தளித்து
பூர்விகம்	கட	ஆசாரம்	பலாத்காரம்
சிற்பம்	போட்டி	ஏற்றம்	பணி
சான்று	குலைந்து	வண்ணம்	வலியது
கலாசாரம்	தடையுடை	சைகை	எடுத்து

1. புகழ் பெற்ற நம் நாடானது தொன்மையான நாடுகளில் ஒன்றாகும். இதன் வளத்தையும் செல்வத்தையும் பற்றிக் கேள்வியுற்ற மக்களில் பலர் அவ்வப்போது இங்கு வந்து, குடியேறலாயினர். **பூர்விகக் குடிகளைக்** காடுகளுக்குத் துரத்திவிட்டுத் **திராவிடர்** வந்து குடியேறினர். இப்பூர்விகக் குடிகளில் பலர் மற்றவர்களோடு கலந்து, நாகரிகமடையலாயினர். சிறுபான்மையோர், இன்னும் பல மலைகளில் பண்டைக்கால மனிதரைப் போல அநாகரிக நிலையில் வாழ்ந்து வருகின்றனர்.

2. இந்நாட்டில் வந்து குடியேறிய திராவிடர்கள். நாகரிகத்தில் சிறந்து விளங்கியவர்கள். அவர்கள் விவசாயம், கைத்தொழில், வியாபாரம் இவற்றில் சிறப்புற்றிருந்தார்கள். பல வருஷங்களுக்குப் பின் **ஆரியர்** என்ற வேறொரு ஜாதியினர் இந்நாட்டில் புகுந்து குடியேறினர். காலடைவில் திராவிடரும் ஆரியரும் ஒன்றுபட்டு, ஒரு தாய் வயிற்றுப்பிள்ளைகள் போல வாழலாயினர்.

3. இக்காலத்திலேதான் உலகம் வியக்கும் நூல்களும், சிற்ப வேலைகளும், அரசாங்க அமைப்புக்களும், பொது நன்மைக்கான ஏற்பாடுகளும் தலைசிறந்து விளங்கலாயின. பல ஆண்டுகள் கழிந்த இக்காலத்திலுங்கூடப் பிற நாட்டினர் அவற்றைக் கண்டு புகழ்ந்து மகிழ்வடைகின்றனரல்லவா? இந் நாட்டிலிருந்தே மேல் நாடுகளுக்கு நாகரிகம் பரவிய தென்பதற்கும் சான்றுகள் உள.

4. சில ஆண்டுகள் கழிந்தன. முதலில் முகம்மதியர்களும், பின் மொகலாயர்களும் இந்நாட்டை அடைந்து குடியேறி அரசாண்டார்கள். அவர்கள் காலத்திலும், அதற்குப் பிறகும், இந்துக்கள் முஸ்லிம்கள் ஆகிய இருவரின் கலாசாரங்களும் கலந்து ஒன்றையொன்று பெருமைப்படுத்தலாயின. குடியேறிய முகம்மதியர்களும் மொகலாயர்களும் இங்கேயே தங்கி வசித்து, நாட்டின் நலத்தையே கோரி ஆண்டுவந்தார்கள். அவர்கள் காலத்தில் கட்டப்பட்ட பல அழகிய கட்டிடங்கள் இன்றும் பார்ப்போர் கண்ணைக் கவரக்கூடியவைகளாய் இருக்கின்றன.

5. இன்னும் சில வருடங்கள் கடந்தன. ஐரோப்பியர் இந்தியாவின் செல்வத்தைப் பற்றிக் கேள்வியுற்று, இங்கு வியாபாரம் நடத்த விரும்பினர். ஒருவர் பின் ஒருவராக டச்சுக்காரர், போர்த்துக்கீசியர், பிரெஞ்சுக்காரர், ஆங்கிலேயர் ஆகிய பலரும் வந்து வியாபாரம் செய்யத்தலைப்பட்டனர். இவர்களுக்குள் ஏற்பட்ட போட்டியாலும், தேசம் சிதறுண்டு நின்றதாலும், சண்டை சச்சரவுகள் அடிக்கடி ஏற்பட்டன. இறுதியில், ஆங்கிலேயர் வெற்றி பெற்று இந்நாட்டை ஆள

ஆரம்பித்தனர். இவர்களுடைய ஆட்சியும் 1947-ம் ஆண்டு ஆகஸ்டு 14-ஆம் தேதியோடு முடிந்தது. ஆகஸ்டு 15-ஆம் தேதி முதல் நமது நாடு சுதந்திரம் பெற்றது. இன்று உலகிலுள்ள குடியரசு நாடுகளில் ஒன்றாக நம் நாடு சிறந்து விளங்குகிறது.

6. நம் பாரத அன்னை தன்னிடம் வந்தவர்களை யெல்லாம் ஆதரித்து ஏற்றுக்கொண்டு வந்தமையால், நம் நாட்டில் வேறு எத்தேசத்திலும் காண இயலாத பல இனத்தினர் காணப்படுகின்றனர். இவர்கள் நிறம், ஜாதி, மதம், பாஷை, நடையுடை பாவனைகள் இவற்றில் பெரிதும் வேறுபடுகிறார்கள். இவ்வேறு பாடுகள், இவர்கள் இருந்த தேசம் இப்போது வசிக்குமிடம், பழைய ஆசாரங்கள் இவை காரணமாய்க் காணப்படுகின்றனவே யல்லாமல் வேறல்ல. இத் தகைய வித்தியாசங்களோடுகூடிய இவர்கள் யாவரும் பாரத அன்னையின் மக்களேயாவார்கள்.

"வெள்ளை நிறத்தொரு பூனை—எங்கள்
வீட்டில் வளருது கண்டீர்;
பிள்ளைகள் பெற்றதப் பூனை;—அவை
பேருக் கொரு நிற மாகும்.
சாம்பல் நிறமொரு குட்டி;—கருஞ்
சாந்து நிறமொரு குட்டி;
பாம்பு நிறமொரு குட்டி;—வெள்ளைப்
பாலின் நிறமொரு குட்டி.
எந்த நிறமிருந் தாலும்—அவை
யாவும் ஒரேதர மன்றோ?
இந்த நிறஞ்சிறி தென்றும்—இஃது
ஏற்றமென் றுஞ்சொல்ல லாமோ?"

வண்ணங்கள் வேற்றுமைப் பட்டால்—அதில்
மானிடர் வேற்றுமை யில்லை.
எண்ணங்கள் செய்கைக ளெல்லாம்—இங்கு
யாவர்க்கு மொன்றெனல் காணீர்"

—பாரதியார்

7. நம் பாரத மாதா, நாமனைவரும் சகோதரர் போல வாழ்ந்து, நம் க்ஷேமத்தையும் நாட்டின் நலத்தையும் பெருக்கவேண்டுமெனவே விரும்புகிறாள். நமக்குள் உயர்வு தாழ்வு என்னும் பிளவுகள் நீங்கிச் சமாதான நிலையில்வாழ்வதே நமக்குப் பெருமையைத் தருவதாகும். இக்காலத்தில் போட்டியும் பொறாமையும் காரணமாய்ச் சில தேசங்கள் தத்தளித்துக்கொண்டிருக்கின்றன. ஆங்காங்குள்ள பெரியார் பலர் பலாத்காரத்தை வெறுத்து, அஹிம்ஸையையே ஆதரிப்பவர்களாய் இருக்கிறார்கள். இத்தகைய நல்லுபதேசத்தை இப்பாரத நாடு உலகினுக்கு எப்போது தந்துதவும் எனப் பலரும் ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றனர். அவ்வரிய பணியைச் செய்ய இருக்கும் நாம், ஒன்றுபட்டுள்ள பாரத ஸமுதாயத்தை வலியதாக்கிக்கொண்டு, பிறருக்கு எடுத்துக் காட்டாக நடப்பதே நம் அன்னைக்கு காட்டக்கூடிய நன்றியாகும்.

பாரத ஸமுதாயம் வாழ்கவே! வாழ்க! வாழ்க!
பாரத ஸமுதாயம் வாழ்கவே!—ஜய ஜய ஜய.

—பாரதியார்

பயிற்சி—22

i. விடை சொல்லு:—

1. இந்நாட்டில் பலர் வந்து குடியேறியதற்குக் காரணம் யாது?
2. இவர்களுக்குள் வேற்றுமைகள் காணப்படுவதேன்?
3. உலகம் பாரத நாட்டிலிருந்து எதிர்பார்க்கும் உபதேசம் யாது?
4. அதை நாம் தந்துதவ எப்படி வாழவேண்டும்?

ii. எதிர்ப்பதங்கள் சொல்லு:—

தொன்மை, பலாத்காரம், வலியது,
ஏற்றம், வேற்றுமை, அஹிம்ஸை.

iii. இச்சொற்களைச் சொந்த வாக்கியங்களில் அமைத்து எழுது:—

அவ்வப்போது, கோரி, இரக்கம்.
சான்று, சிர்குலைந்து, செய்கை.

iv. 1. 'பிற நாட்டினர் அவற்றைக்கண்டு மகிழ்வடைகின்றனரன்றோ?
2. உன் யோசனை என்ன?
3. நீ ஏன் திகைக்கிறாய்?
4. பகவானிடம் வெறுங்கையாய்ப் போகலாமா?
5. நீ யாது கூறினாய்?

இவை வினாக்கள். வினாக்களைக் காட்டும் எழுத்துக்கள் ஆ, ஓ, எ ஏ, யா என்பன.

இவற்றுள் எ, யா, என்னும் இரண்டும் சொல்லுக்கு முதலிலே தான் வரும்.

ஆ, ஓ என்னும் இரண்டும் சொல்லுக்கு இறுதியிலே தான் வரும்.

ஏ, சொல்லுக்கு முதலிலும், இறுதியிலும் வரும்.

V. டச்சுக்காரர், போர்த்துகீசியர், பிரெஞ்சுக்காரர், ஆங்கிலேயர் ஆகிய பலரும் வந்து வியாபாரம் செய்யத் தலைப்பட்டனர்.

இவ்வாக்கியத்தில் பல சொற்கள் சேர்ந்தாற்போலக் கூடி எழுவாயாய் இருக்கின்றன. இவ்வாறு வரும் போது அவற்றிற்கு இடையே கால் புள்ளி (,) உபயோகிக்கவேண்டும்.

இதற்கு முன்பே நிறுத்தப் புள்ளிகளைப்பற்றி நீ அறிந்துள்ளாய்.

கீழுள்ள வாக்கியங்களில் வேண்டிய இடங்களில் சரியான நிறுத்தக் குறிகளை இட்டு எழுது:—

1. சினார் நிலை நேரு மனத்தை உருக்கியது அவர் எவ்வளவோ அவசரமாக அங்குச் சென்றார் ஐரோப்பிய யுத்தம் காரணமாய் அவர் தாய் நாடு திரும்பவேண்டியதாயிற்று.

2. ஐரோப்பாவிலிருக்கும்போது அவர் ருஷியா ஸ்விட்ஜர்லாந்து ஜெர்மனி இத்தாலி ஆகிய பல தேசங்களிலும் சுற்றுப் பிரயாணம் செய்தார்

3. வணங்கிநின்ற சுசீலையைக் குசேலர் நீ இருப்பதைப் பார்த்தால் ஏதோ விரும்புவது போலத் தோன்றுகிறது உன் எண்ணம் என்னவென்று கேட்டார்

4. என்ன பரிதாபம் மக்கள் ஒன்றுபட்டு வாழாமல் சண்டையிடுகிறார்கள் காந்தியடிகளின் சொல் பொய்யாகுமோ

செய்யுள் பாடம்

I. துதி கவிகள்

விநாயகர் துதி

1. பாலும், தெளிதேனும், பாகும், பருப்புமிவை
நாலுங் கலந்துனக்கு நான் தருவேன் :—கோலம் [செய்
துங்கக் கரிமுகத்துத் தூமணியே! நீ எனக்குச்
சங்கத் தமிழ் மூன்றும் தா.

—ஔவையார்

குறிப்புரை :—கோலம் - அழகு; துங்கக் கரிமுகம் - உயர்ந்த யானைமுகம்; சங்கத் தமிழ் மூன்று - தமிழ்ச் சங்கத்தில் வழங்கிய இயல, இசை, நாடகம் என்னும் மூவகைத் தமிழ்.

திருமால் துதி

2. உலகம் யாவையும் தாமுள ஆக்கலும்,
நிலைபெ றுத்தலும், நீக்கலும் நீங்கலா
அலகி லாவிளை யாட்டுடை யாரவர்
தலைவர்; அன்னவர்க் கேசர ணாங்களே.

—கம்ப நாட்டார்

குறிப்புரை :—உள ஆக்கல்-உண்டாக்கல்; அலகு இலா - அளவில்லாத; அன்னவர்க்கே-அவர்க்கே; சரண்-அடைக்கலம்.

சிவபெருமான் துதி

3. பொன்னார் மேனியனே!
புலித்தோலை அரைக்கசைத்து,
மின்னார் செஞ்சடைமேல்
மிளிர் கொன்றை அணிந்தவனே!

மன்னே! மாமணியே!
மழபாடியுள் மாணிக்கமே!
அன்னே! உன்னையல்லால்
இனியாரை நினைக்கேனே.

—சுந்தரமூர்த்தி சுவாமிகள்

குறிப்புரை:—பொன் ஆர் - அழகு பொருந்திய; அசைந்து - கட்டி; மின் ஆர் - ஒளி பொருந்திய; மிளிர் - விளங்குகின்ற; மன்னே-அரசே; அன்னே-தாய் போன்றவனே.

முருகர் துதி

4. மூவிரு முகங்கள் போற்றி;
முகம்பொழி கருணை போற்றி
ஏவரும் துதிக்க நின்ற
ஈராறுதோள் போற்றி! காஞ்சி
மாவடி வைகும் செவ்வேள்
மலரடி போற்றி! அன்னான்
சேவலும் மயிலும் போற்றி!
திருக்கைவேல் போற்றி! போற்றி!

—கச்சியப்ப சிவாசாரியார்

குறிப்புரை:—காஞ்சி - காஞ்சிபுரம்; மா - மாமரம்; செவ்வேள்-முருகர்; திருக்கை-சிறந்த கை.

சரஸ்வதி துதி

5. பாட்டும் பொருளும், பொருளால்
பொருந்தும் பயனும், என்பால்
கூட்டும் படிநின் கடைக்கண்நல்
காய்; உளம் கொண்டு தொண்டர்

நீட்டும் கலைத் தமிழ்த் தீம்பால்
அமுதம் தெளிக்கும் வண்ணம்
காட்டும்வெள் ளோதிமப் பேடே!
சகல கலா வல்லியே!

—குமரகுருபர சுவாமிகள்

குறிப்புரை :—என்பால் - என்னிடம்; கடைக்கண் - கடாட்சம் (கிருபை); நல்காய்-தருவாயாக; தொண்டர் - அடியவர்; வெள்ளோதிமம் - வெள்ளை அன்னம்; பேடு- பெட்டை.

இலட்சுமி துதி

6. பார்மேலுன் சீர்த்தியை உள்ளத்
தெழுதிடும் பத்தர்க்கெல்லாம்
தார்மேல் வருந்திரு நான்முகத்
தோன்கைத் தலை எழுத்தை
நீர்மேல் எழுத்தெனக் கண்டாய்; கைம்
மாறு நினக்குளதோ?
கார்மேல் மணக்கும் மதத்தாய்!
திருமகள் நாயகியே!

—முத்தமிழ்க் கவிவீரராகவ முதலியார்

குறிப்புரை :—பார் - பூமி; சீர்த்தி - புகழ்; உள்ளம்- மனம்; பத்தர்-அடியவர்; தார்-பூ; நான்முகத்தோன் - பிரமன்; கைம்மாறு-பிரதியுபகாரம்; கார்-அன்பு; மணக்கும்- விரும்பும்; திருமகள்-இலட்சுமி; நாயகி-தலைவி.

II. விவேக சிந்தாமணி

பயன் கொடாதவை

1. ஆபத்துக் குதவாப் பிள்ளை,
அரும்பசிக் குதவா அன்னம்,
தாபத்தைத் தீராத் தண்ணீர்,
தரித்திரம் அறியாப் பெண்டிர்,

கோபத்தை அடக்கா வேந்தன்,
குருமொழி கொள்ளாச் சீடன்;
பாபத்தைத் தீராத் தீர்த்தம்,
பயனில்லை ஏழுந் தானே.

குறிப்புரை :—அரும்பசி - பொறுக்க முடியாதபசி; அன்னம்-சோறு; தாபம்-தாகம்; பெண்டிர்-மனைவியர்; வேந்தன் - அரசன்; சீடன் - மாணாக்கன்; தீர்த்தம்-நதி; குளம் முதலியன.

செல்வச் செருக்கு

2. செல்வம்வந் துற்ற காலைத்
தெய்வமுஞ் சிறிதும் பேணார்;
சொல்வன அறிந்து சொல்லார்;
சுற்றமுந் துணையும் நோக்கார்;
வெல்வதே நினைவ தல்லால்,
வெம்பகை வலிதென் றெண்ணார்;
வல்வினை விளைவும் ஓரார்
மண்ணின்மேல் வாழும் மாந்தர்.

குறிப்புரை :—வந்து உற்ற காலை-வந்து சேர்ந்த காலத்தில்; பேணார்-நினைக்கமாட்டார்; சுற்றம் - பந்துக்கள்; துணை-சிநேகம்; வெம்பகை-கொடிய விரோதம்; வல்வினை-கொடிய பாவம்; விளைவு-உண்டாதல்; ஓரார்-அறியமாட்டார்; மண்-பூமி; மாந்தர்-மனிதர்.

பொருளில்லாதவர் பிணம்

3. பொருள் இல்லார்க் கின்பம் இல்லை;
புண்ணியம் இல்லை;
மருவிய கீர்த்தி இல்லை;
மைந்தரின் பெருமை இல்லை;
கருதிய கருமம் இல்லை;
கதிபெற வழியும் இல்லை;
பெருநிலம் தனில்சஞ் சாரப்
பிரேதமாய்த் திரிகு வாரே.

குறிப்புரை :—இன்பம்-சந்தோஷம்; மருவிய-பொருந்திய; மைந்தரின் பெருமை-புத்திரருடைய நன்மதிப்பு; கருதிய-நினைத்த; சஞ்சாரப் பிரேதம்-நடக்கும் பிணம்.

மெய்யரின் பெருமையும் பொய்யரின் சிறுமையும்

4. மெய்யதைச் சொல்வா ராகில்
விளங்கிடும் மேலாம் நன்மை ;
வையகம் அவரைக் கொள்ளும் ;
மனிதரில் தேவ ராவர் ;
பொய்யதைச் சொல்வா ராகில்
போசனம் அற்ப மாகும் ;
'நொய்யவர் இவர்கள்' என்று
நோக்கிடார் அறிவு ளோரே.

குறிப்புரை :—நன்மை-புகழ் ; வையகம்-பூமியில் உள்ளவர் ; கொள்ளும்-ஏற்றுக்கொள்வார்கள் ; நொய்யவர்-அற்பர் ; நோக்கிடார்-லக்ஷியம் செய்யமாட்டார்கள்.

துன்பம் எல்லோருக்கும் ஒன்றே

5. 'பாலுக்குச் சர்க்கரை இல்லை' என் பார்க்கும்,
'பருக்கை அற்ற
கூழுக்குப் போடுப் பில்லை' என் பார்க்கும்.
'குற்றிதைத்த
காலுக்குத் தோற்செருப் பில்லை' என் பார்க்கும்,
'கனகதண்டி
மேலுக்குப் பஞ்சணை இல்லை' என் பார்க்கும்,
விதனம் ஒன்றே.

குறிப்புரை :—பருக்கை-சோற்றுப் பருக்கை ; குற்றி-குச்சி ; கனகதண்டி மேலுக்கு-பொன்மயமான பல்லக்கில் இடுவதற்கு ; பஞ்சு அணை-பஞ்சு மெத்தை ; விதனம்-துன்பம்.

III. குருபாததாசர்

அருளிச் செய்த

சதகச் செய்யுள்

வேளாளர் இயல்பு

1. நல்லதே வாலயம் பூசனை நடப்பதும்,
நாள்தோறும் மழை பொழிவதும்.
நாடிய தபோதனர்கள் மாதவம் புரிவதும்,
நவில்வேத வேதியரெலாம்
சொல்லரிய யாகாதி கருமங்கள் செய்வதும்,
தொல்புவி செழிக்கும் நலமும்
சுபசோபனங்களும், கொற்றவர்கள் செங்கோல்
துலங்குமனு நெறிமுறைமையும்,
வெல்லரிய சுகிர்தமொடு வர்த்தகன் கொள் விலை
விற்பனையும், அளவில் புகழும், [யும்,
மிக்க அதிகாரமும் தொழிலாளர் சீவனமும்,
வீரரண சூரர்வலியும்,
வல்லமைகள் சகலமும் வேளாளர் மேழியின்
வாழ்வினால் விளைவதன்றோ ?
மயிலேறி விளையாடுகுகனே ! புல்வயல் நீடு
மலைமேவு குமரேசனே ?

குறிப்புரை:—நாடிய-கடவுளை விரும்பிய; தபோதனர்கள்-முனிவர்கள்; நவில்-எல்லோராலும் புகழப்படுகின்ற; வேதியர்-பிராமணர்; யாகாதி கருமங்கள்-யாகம் முதலிய காரியங்கள்; தொல்புவி-பழமையான உலகம்: நலம்-மேன்மை. சுபசோபனங்கள்-மங்கள காரியங்கள்; கொற்றவர்கள்-அரசர்கள். துலங்கும்-விளங்குகின்ற; மனுநெறி முறைமை-மனுதர்ம சாஸ்திர ஒழுங்கு; சுகிர்தம் - நல்ல காரியங்கள்; கொள்விலை-(பொருள்களை) வாங்கும் விலை; மேழி-கலப்பை; குகன் - முருகன்; புல்வயல் - ஒரு சுப்பிரமணிய க்ஷேத்திரம்: குமரேசன் - முருகன்.

கலிகாலக் கொடுமை

2. தாய்புத்தி சொன்னால் மறுத்திடும் காலம்; உயர்
தந்தையைச் சீறு காலம்;
சற்குருவை நிந்தைசெய்காலம்; மெய்க்கடவுளைச்
சற்றுமெண்ணாத காலம்;
பேய்தெய்வம் என்றுபரித்திடும் காலம்;
புரட்டருக் கேற்ற காலம்;
பெண்டாட்டி வையினும் கேட்கின்ற காலம்; நற்
பெரியார் சொல் கேளாத காலம்;
தேய்வுடன் பெரியவன் சிறுமையுறு காலம்; மிகு
சிறியவன் பெருகு காலம்;
செருவில்விட்டோடினோர் வரிசை பெறுகாலம்;
செப்புவோர்க் குதவு காலம்; [வசை
வாய்மதம் பேசிடும் அனியாயக் காரருக்கு
வாய்த்தகலி காலம்; ஐயா!
மயிலேறி விளையாடு குகனே! புல்வயல்நீடு
மலைமேவு குமரேசனே!

குறிப்புரை:—மறுத்திடும் - தடுத்துப் பேசும்; சீறு - கோபிக்கும்; நிந்தை செய்தல் - இகழ்ந்து பேசல்; பேய் தெய்வம் என்று - பேயைத் தெய்வம் என்று; புரட்டர் - மோசக்காரர்; வையினும் - திட்டினும்; கேளாத - காதில் போட்டுக்கொள்ளாத; தேய்வுடன் - குறைவுடன்; சிறுமை - கஷ்டம்; செருவில் - யுத்தத்தில்; வரிசை - மரியாதை; வசை - தூஷணைச் சொல்.

IV. சிவப்பிரகாச சுவாமிகள்

அருளிச் செய்த

நன்னெறி

1. உள்ளம் கவர்ந்தெழுந் தோங்கு சினங்காத்துக்
கொள்ளும் குணமே குணம்என்க ;—வெள்ளம்
தடுத்தல் அரிதோ? தடங்கரைதான் பேர்த்து
விடுத்தல் அரிதோ? விளம்பு.

குறிப்புரை :—1. உள்ளம்-மனம்; கவர்ந்து-தன் வசப்படுத்தி; சினம்-கோபம்; தடங்கரை-விசாலமான கரை; விளம்பு - சொல்.

2. எந்தைநல் கூர்ந்தான் இரப்பார்க்கீந் தென்றவன்
மைந்தர்தம் ஈகை மறுப்பரோ ?—பைந்தொடீஇ!
நின்று பயனுதவி நில்லா அரம்பையின்கீழ்க்
கன்றும் உதவும் கனி.

குறிப்புரை :—எந்தை-எம்முடைய தந்தை; நல்கூர்ந்தான்-தரித்திரனானன்; ஈகை-தருமம்; பைந்தொடீஇ-பசுமையான வளையலை அணிந்த பெண்ணே; பயன்-பழம்; அரம்பை-வாழை.

3. இன்சொலால் அன்றி இருநீர் வியன்உலகம்
வன்சொலால் என்றும் மகிழாதே ;—பொன்செய்
அதிர்வளையாய்! பொங்கா தழல் கதிரால் தண்
கதிர்வரவால் பொங்கும் கடல். [ணென்

குறிப்புரை :—இருநீர்-கடல்; வியனுலகம்-பெரிய உலகம்; வன்சொல்-கொடிய சொல்; அழல் கதிர்-சூரியன்; தண்ணென் கதிர்-சந்திரன்.

4. பெரியவர் தம்நோய்போல் பிறர்நோய்கண் டுள்ளம்
எரியின் இழுதாவர் என்க ;—தெரியிழாய்
மண்டு பிணியால் வருந்தும் புறவுறுப்பைக்
கண்டு கலுழுமே கண்.

குறிப்புரை :—எரி - நெருப்பு; இழுது - நெய்; மண்டு பிணி-மிகுந்த நோய்; கலுழும்-அழும்.

5. ஆக்கும் அறிவான் அலது பிறப்பினால்
மீக்கொள் உயர்விழிவு வேண்டற்க ;—நீக்கு
பவரார் அரவின் பருமணிகண் டென்றும்
கவரார் கடலின் கடு.

குறிப்புரை :—அரவின்-பாம்பின் ; பருமணி - பருத்த இரத்தினம் ; கடு-விஷம் ; கவரார்-கைக்கொள்ளார்.

6. கைம்மா றுகவாமல் கற்றறிந்தோர் மெய்வருந்தித்
தம்மால் இயலுதவி தாம்செய்வர் ;—அம்மா !
முளைக்கும் எயிறு முதிர்சுவைநா விற்கு
விளைக்கும் வலியனதாம் மென்று.

குறிப்புரை:—கைம்மாறு-பிரதியுபகாரம்; உகவாமல்-விரும்பாமல் ; மெய்-தேகம் ; எயிறு-பல் ; முதிர் சுவை-மிகுந்த சுவை ; வலியன-வன்மையான பொருள்கள்.

7. முனிவினும் நல்குவர் மூதறிஞர் ; உள்ளக்
கனிவினும் நல்கார் கயவர் ;—நனிவிளைவில்
காயினும் ஆகும் கதலிதான் ; எட்டிபழுத்
தாயினும் ஆமோ ? அறை.

குறிப்புரை —முனிவு-கோபம் ; மூதறிஞர்-பேரறிவாளர்கள் ; நல்குவர்-கொடுப்பர் ; கனிவு-சந்தோஷம் ; கயவர்-அற்பர் ; நனிவிளைவு-மிகுந்த விளைவு ; கதலி-வாழை.

8. கொள்ளும் கொடுங்கூற்றம் கொன்வான் குறுகு [தன்முன்
உள்ளம் கனிந்தறஞ்செய் துய்கவே ;—வெள்ளம்
வருவதற்கு முன்னர் அணைகோலி வையார்
பெருகுதற்கண் என்செய்வார் ? பேசு.

குறிப்புரை .—கொள்ளும்-உயிரைக் கவர்கின்ற ; கூற்றம்-யமன் ; கொன்வான்-கொல்வதற்காக ; உய்க-பிழையுங்கள் ; கோலி-செய்து.

9. பேரறிஞர் தாக்கும் பிறர் துயரம் தாங்கியே
வீரமொடு காக்க விரைகுவார் ;—நேரிழாய் !
மெய்சென்று தாக்கும் வியன்கோல் அடிதன்மேல்
கைசென்று காக்கும் கடிது.

குறிப்புரை :—தாக்கும்-வருத்தும் ; நேர் இழாய்-நல்ல ஆபரணங்களை அணிந்த பெண்ணே ; கடிது-சீக்கிரத்தில்.

10. பொன்னணியும் வேந்தர் புனையாப் பெருங்கல்வி
மன்னும் அறிஞரைத்தாம் மற்றொவ்வார்—மின்னு [மணி
பூணும் பிறவுறுப்புப் பொன்னே ! அது புனையாக்
காணுங்கண் ஒக்குமோ காண் ?

குறிப்புரை :—மின்னும் அணி - ஒளிவீசும் ஆபரணம் ; பூணும்-தரிக்கும் ; புனையா - தரித்துக் கொள்ளாத ; ஒக்குமோ-ஒத்திருக்குமோ.

V. பல புலவர்

அருளிச் செய்த

நீதி வெண்பா

1. தாமரைபொன்,முத்து,சாமரை,கோரோசனைபால்
பூமருதேன் பட்டு, புனுகு, சவ்வா—தாமழல்மற்
றெங்கே பிறந்தாலும் எள்ளாரே ; நல்லோர்கள்
எங்கே பிறந்தாலும் என் ?

குறிப்புரை :—பூ மருதேன் - பூக்களிலே சேர்ந்துள்ள தேன் ; எள்ளார்-இகழார்.

2\. வருத்தவளை வேய், அரசர் மாமுடியின் மேலாம்;
வருத்த வளையாத மூங்கில்—தரித்திரமாம்
வேழம்பர் கைப்புகுந்து, மேதினியெல் லாந்திரிந்து
தாழுமவர் தம்மடிக்கீழ்த் தான்.

குறிப்புரை:—வேய்-மூங்கில்; வேழம்பர்-கழைக்கூத்தாடிகள்; மேதினி-பூமி.

3\. ஈக்கு விடம்தலையில் எய்தும்; இருந்தேளுக்கு
வாய்த்த விடம்கொடுக்கில் வாழுமே;—நோக்கரிய
பைங்கணரவுக்கு விடம் பல்லளவே; துர்ச்சனருக்
கங்கமுழு தும்விடமே யாம்.

குறிப்புரை:—விடம்-விஷம்; துர்ச்சனர் - கீழோர்; அங்கம்-உடம்பு.

4\. கற்பூரம் போலக் கடலுப் பிருந்தாலும்,
கற்பூரம் ஆமோ கடலுப்பு?—பொற்பூரும்
புண்ணியரைப் போல இருந்தாலும், புல்லியர்தாம்
புண்ணியரா வாரோ? புகல்.

குறிப்புரை:—பொற்பூரும் - அழகு நிறைந்த; புல்லியர்-கீழோர்.

5\. கல்லார் பலர்கூடிக் காதலித்து வாழினும், நூல்
வல்லான் ஒருவனையே மானுவரோ?—அல்லாரும்
எண்ணிலா வான்மீன் இலகிடினும், வானகத்தோர்
வெண்ணிலா ஆமோ? விளம்பு.

குறிப்புரை:—காதலித்து - விரும்பி; மானுவரோ - ஒப்பாவார்களா? அல்லாரும் - இரவில் பொருந்திய; மீன்-நட்சத்திரம்; இலகிடினும்-பிரகாசித்தாலும்; விளம்பு-சொல்.

6. இன்னல் தரும்பொருளை ஈட்டுதலும் துன்பமே
பின்னதனைப் பேணுதலும் துன்பமே;—அன்ன
தழித்தலும் துன்பமே; அந்தோ! பிறர்பால்
இழித்தலும் துன்பமே யாம்.

குறிப்புரை :—இன்னல்-துன்பம்; ஈட்டுதல்-சேர்த்தல்; பேணுதல்-பாதுகாத்தல.

7. பொற்பறிவில் லாதபல புத்திரரைப் பெற்றதிலோர்
நற்புதல்வ னைப்பெறுதல் நன்றாமே;—பொற்
[கொடியே!
பன்றிபல குட்டி பயந்ததினால் ஏது பயன்?
ஒன்றுமையா தோகரிக்கிங் கோது.

குறிப்புரை :—பொற்பு - அழகு; கரி-யானை; ஓது சொல்.

8. பொன்னும். கரும்பும், புகழ்பாலும், சந்தனமும்
சின்னம் படவருத்தம் செய்தாலும்—முன்னிருந்த
நற்குணமே தோன்றும்; நலிந்தாலும் உத்தமர்பால்
நற்குணமே தோன்றும் நயந்து.

குறிப்புரை :—நலிந்தாலும்-துன்புறுத்தினாலும்.

9. தீயவர்பால் கல்விசிறந்தாலும், மற்றவரைத்
தூயவரென் றெண்ணியே துன்னற்க;—சேயி
[ழையே!
தண்ணொளிய மாணிக்கம் சர்ப்பம் தரித்தாலும்,
நண்ணுவரோ மற்றதனை? நாடு.

குறிப்புரை :—துன்னற்க-நெருங்கற்க; நண்ணுவரோ? நெருங்குவார்களா?

10. உத்தமர்தாம் ஈயுமிடத் தோங்குபனை போல்வரே,
மத்திமர்தாம் தெங்குதனை மானுவரே;—முத்த
ஆங்கமுகு போல்வர் அதமர்; அவர்களே [லரும்
தேங்கதலி யும்போல்வர் தேர்ந்து.

குறிப்புரை:—போல்வர்-ஒப்பர்; மானுவர் - ஒப்பர் அதமர்-கீழோர்; கதலி-வாழை.

VI. திருவள்ளுவர்

அருளிச் செய்த

திருக்குறள்

1. தனக்குவமை இல்லாதான் தாள்சேர்ந்தார்க்
கல்லால் மனக்கவலை மாற்றல் அரிது.

பொழிப்புரை:—ஒப்பற்ற கடவுளின் பாதங்களைச் சேர்ந்தவர்களுக்கன்றி, மற்றவர்களுக்கு மனத் துன்பங்களை நீக்கமுடியாது.

2. ஈன்ற பொழுதிற் பெரிதுவக்கும் தன்மகனைச்
சான்றோன் எனக்கேட்ட தாய்.

(பொ-உ.) தன் மகனைக் கல்வி அறிவால் சிறந்தவன் என்று அறிஞர் சொல்லக் கேட்ட தாயானவள், அவனைப் பெற்ற காலத்தில் அடைந்த மகிழ்ச்சியைக் காட்டிலும் பெரும் மகிழ்ச்சியை அடைவாள்.

3. இன்சொல் இனிதீன்றல் காண்பான் எவன்கொலோ
வன்சொல் வழங்கு வது?

(பொ-உ.) மற்றவர் கூறும் இனிய சொல் தனக்கு இன்பம் தருவதை அறிபவன், பிறரிடம் கடுமையான வார்த்தைகளைப் பேசுவது ஏன்?

4. நன்றி மறப்பது நன்றன்று; நன்றல்ல(து)
அன்றே மறப்பது நன்று.

(பொ-உ.) பிறர் செய்த நன்றியை மறப்பது நல்லது அன்று. அவர்கள் செய்த தீமையை அப்பொழுதே மறந்து விடுவது நல்லது.

5. அடக்கம் அமரருள் உய்க்கும்; அடங்காமை
ஆரிருள் உய்த்து விடும்.

(பொ-உ.) அடக்கமானது ஒருவனைத் தேவர் உலகத்தில் சேர்க்கும்; அடங்காதிருத்தலானது பாவமாகிய இருள் நிரம்பிய நரகத்தில் சேர்க்கும்.

6. ஒழுக்கம் விழுப்பம் தரலான், ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப் படும்.

(பொ-உ.) நல்ல நடக்கை எல்லோருக்கும் சிறப்பைத் தருவால், அஃது உயிரைவிட மேன்மையாகப் பாதுகாக்கப் படும்.

7. தீயவை தீய பயத்தலால், தீயவை
தீயினும் அஞ்சப் படும்.

(பொ-உ.) கெட்ட காரியங்கள் கெடுதிகளை உண்டாக்குவதால் அவை ஒருவனால் நெருப்பைக் காட்டிலும் அஞ்சப்படும்.

8. நல்லா(று) எனினும், கொளல்தீது; மேல் உலகம்
இல்எனினும், ஈதலே நன்று.

(பொ-உ.) பிறரிடம் யாசிப்பது மோக்ஷமடைவதற்கு நல்லவழி என்றாலும், அவ்வாறு செய்வது கெடுதி; தருமஞ் செய்வதால் மோக்ஷமடைவதில்லை என்றாலும், அதைச் செய்வதே நல்லது.

9. தன்னெஞ்(சு) அறிவது பொய்யற்க; பொய்த்த
தன்னெஞ்சே தன்னைச் சுடும். [பின்

(பொ-உ.) ஒருவன் மனம் அறிந்த ஒன்றை மற்றவர் அறியவில்லை என்று பொய் சொல்லாதிருக்கக் கடவன். பொய் சொன்னானால், அதை அறிந்த அவன் மனமே பின்பு அவனை வருத்தும்.

10. இன்னாசெய் தாரை ஒறுத்தல், அவர்நாண
நன்னயம் செய்து விடல்.

(பொ-உ.) தனக்குத் துன்பம் செய்தவர்களைத் தண்டிக்கலாகாது; அவர்கள் வெட்கப்படும்படி அவர்களுக்கு நன்மைகளைச் செய்து, அவர்கள் தனக்குச் செய்த துன்பத்தையும், தான் அவர்களுக்குச் செய்த நன்மைகளையும் மறந்து விடுதலே.

11. கற்க கசடறக் கற்பவை; கற்றபின்
நிற்க அதற்குத் தக.

(பொ-உ.) ஒருவன் கற்கவேண்டிய நூல்களைக் குற்றம் நீங்கக் கற்பானாக; அப்படிக் கற்றபிறகு அந்தக் கல்விக்குத் தகுந்தாற்போல அந்த நூல்கள் சொல்லுகின்ற நல்ல வழியிலே நிற்பானாக.

12. சொல்லுதல் யார்க்கும் எளிய; அரியவாம்
சொல்லிய வண்ணம் செயல்.

(பொ-உ.) நாம் இந்தக் காரியத்தை இந்த வழியில் செய்வோம் என்று ஒழுங்காகச் சொல்லுதல் எல்லோருக்கும் எளிமையான காரியமாம்; சொல்லியபடியே செய்தல் அருமையான காரியமாம்.

VII. ஸ்வாமி சத்தானந்த பாரதியார் பாடியது

மயில் பாட்டு

1. வானத்தைப் பாரடி—மயிலே!
மாமழை மேகமெல்லாம்
கான முரசடிக்க—மின்னல்
கண் வீசி யாடுதடி!
மோன வியப்புடனே—புவியுளம்
முற்றும் குளிருதடி!
ஆனந்தத் தோகைவிரி—மயிலே
ஆடிக் களித்திடுவோம்.

குறிப்புரை:—மா - பெரிய - மோனம் - மௌனம்; புவி - பூமி.

2. அந்தியின் செந்தணலில்—மயிலே!
அல்லி நகையொளியில்
சந்தனம் பூசுநிலா—மதியில்
சாந்தர் மனவொளியில்
இந்திர வில்லதனில்—அலை
ஏறும்பொன் னாழியினில்
சுந்தரத் தோகைவிரித்—தென்கண்
சொக்கிநின் றாடுதடி.

குறிப்புரை:—செந்தணலில் - சிவந்த நெருப்புப் போன்ற ஒளியில்; அல்லி-ஆம்பற்பூ; மதி-சந்திரன்; இந்திரவில்-வானவில்; பொன்னாழி-(பொன்+ஆழி) அழகிய கடல்; சுந்தரம்-அழகு; சொக்கி-மகிழ்ந்து.

3. வன்ன மணிவானம்—மயிலே!
மானிலத் தோகையடி!
மின்னிடுந் தாரகைகள்—பூதேவிக்கு
விண்மணி மாலையடி!
சின்னங் குருவியினம்—பறக்கும்
சிங்கார வீணையடி!
உன்னடங் கண்டுவிட்டால்—மயிலே!
உள்ளெல்லாஞ் சிற்சபையே.

குறிப்புரை:—வன்ன மணிவானம் - வர்ணங்களோடு கூடிய அழகிய ஆகாயம்; தாரைகள் - நட்சத்திரங்கள்; சிங்காரம் - அழகு; நடம்-நடனம்; உள் - உள்ளம், மனம்; சிற்சபை-ஞானசபை; இறைவன் நடனமாடும் இடம்.

4. சிந்தா மணியடியோ—உனக்குச்
செங்கதிர் வட்டமெல்லாம்!
சாந்தமு டனருவி—உனக்கே
தாள மிசைக்குதடி!
இந்த வுலகைவளர்—வான்மழை
இடிமு ழக்குதடி!
தந்திமித் தோமெனவே—மயிலே!
தாண்டவஞ் செய்திடுவோம்.

குறிப்புரை:—சிந்தாமணி - விலையுயர்ந்த ரத்தினம்; வான்மழை-ஆகாயத்திலுள்ள மேகம். தாண்டவம்-நடனம்.